# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

முதலாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 92 மாசி 14ஆம் நாள் திங்கட்கிழமை 26 பெப்ரவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2049


பீரிஸின்

## ஆலோசனைக்கு எதிரான விசாரணை: இன்று முடிவு தெரியும்

யாழ்ப்பாணம், பெப்.26
சட்டமா அதிபராக மொஹான் பீரிஸ் வழங்கிய ஆலோசனைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியுமா? இல்லையா? என்பது தொடர்பில் உயர் நீதிமன்றில் இன்று வழக்கு விசாரணை நடைபெறவுள்ளது.
இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில், ஆணைக்குழு சார்பில் சட்டமா அதிபர் முன்னிலையாக மறுத்துள்ளார். ஆணைக்குழுவின் சார்பில், மூத்த சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன், வெலியமுன, ஜெசி அழகரட்ணம் ஆகியோர் முன்னிலையாகவுள்ளனர்.
மின்சக்தி எரிசக்தி அமைச்

>> 06

பகைமை கொந்தளிக்க பதவிப்பிரமாணம்



# பெரும் மாற்றங்களின்றி மாறியது அமைச்சரவை

கொழும்பு, பெப். 26
உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பின்னர் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில் கூட்டு அரசின் அமைச்சரவை நேற்று மறுசீரமைக்கப்பட்டது. பெரியதொரு மாற்றம் நிகழும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சிறியளவிலான மாற்றமே இடம்பெற்றுள்ளது. அமைச்சரவை மாற்றம் 'சப்பென்று' அமைந்தது என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.
புதிய அமைச்சரவை மறுசீரமைப்பின் கீழ் 6 அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கனவே அமைச்சர்களாகவும், பிரதி அமைச்சர்களாகவும், இராஜாங்க அமைச்சர்களாகவும் இருந்தவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அதே

>> 06

## தமிழரசுக் கட்சிக் குழு ஜெனிவா பயணிக்கும்

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.26
இன்று ஆரம்பமாகும் ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் ஒரு குழு பங்குபற்றுவது என்று கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும், கிடைக்கும் நிதி ஒழுங்குகளைப் பொறுத்தே, அந்தக் குழுவில் எத்தனை பேர் இடம்பெறுவார்கள் என்று தீர்மானிக்கப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

>> 06

# பன்னாட்டு அழுத்தமே ஒரேவழி

### வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 26

**பன்னாட்டுச் சமூகத்தின் அழுத்தங்களால் மட்டுந்தான் இங்கு ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க பன்னாட்டுச் சமூகம் இனியும் தாமதிக்கக்கூடாது.**

>> 06

## இரண்டாம் கட்ட மாற்றம் விரைவில்

கொழும்பு, பெப். 26
கூட்டு அரசின் அமைச்சரவை மாற்றத்தில் முதல் கட்டமே நேற்று நடைபெற்றது என்றும் இன்னும் சில வாரங்களில் அடுத்தகட்ட மாற்றம் இடம்பெறும் என்றும் தெரியவருகின்றது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் வெளிநாட்டு பய

>> 06

## மக்கள் ஆணையை ஏற்றே மாற்றங்கள்

### மைத்திரி தெரிவிப்பு



கொழும்பு, பெப். 26
நாட்டு மக்களிடமிருந்து கிடைத்திருக்கும் செய்திக்கு ஏற்ப அரச நடவடிக்கைகளில் தேவையான மாற்றங்களை மேற்கொண்டு, நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் மேற்கொள்ள வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என்று

>> 06

## 120 நிமிடங்களில் 12,000 கி.மீற்றர்

பீஜிங்; பெப். 26
சீனாவின் தலைநகர் பீஜிங்கில் இருந்து அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கு இரண்டு மணிநேரத்தில் செல்லக்கூடிய வானூர்தியை சீனா தயாரித்துள்ளது.
இந்த இரு நகர்களுக்கும் இடையே தற்போது நடைபெறும் வானூர்திச் சேவை 13 மணித்தியாலம் 30 நிமிடங்கள் பயணிக்கிறது. புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ள வானூர்தி மணிக்கு 6 ஆயிரம் கி.மீ. வேகத்தில் பறக்கும் திறன் கொண்டது. இந்த வானூர்தியின் மூலம் வெறும் 120 நிமிடங்களில் 12 ஆயிரம் கிலோமீற்றர் இடைவெளியுடைய பீஜிங் – நியூயோர்க் நகர்களுக்கு பயணம் மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(தொடர்புடைய செய்தி பக்கம் 15)

## கையொப்பம் சேகரிப்பு இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், பெப்.26
இலங்கை விவகாரம் தொடர்பில் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கத்தை அளிக்கும் தீர்மானத்தை அல்லது சிறப்பு பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயத்தை உருவாக்கும் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்புச்சபை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி யாழ்ப்பாண மைய நகரப் பேருந்து நிலையத்தில் இன்று மாலை 4 மணிக்கு கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

(விரிவான செய்தி பக்.7இல்)

### காணாமற்போனோர் பணியகத்துக்கான

## ஆணையாளர்களை ஏற்றார் மைத்திரிபால

யாழ்ப்பாணம், பெப். 26
காணாமற்போனோர் பணியகத்துக்கு அரசமைப்புச் சபை பரிந்துரைத்த 7 ஆணையாளர்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார் என சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.
மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினரான சாலிய பீரிஸ் ஆணைக்குழுவின் தலைவராகவும், லியனகே,

>> 23

## பொன்சேகாவுக்கு பெரும் ஏமாற்றம்

கொழும்பு, பெப். 26
சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவியை முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு வழங்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியாலும், சிவில் அமைப்புகளாலும் விடுக்கப்பட்ட கோரிக்

>> 23

## அனந்தியையும், சிவகரனையும் நீக்கத் தமிழரசுக் கட்சி தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப்.26
வடக்கு மாகாண சபை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணியின் முன்னாள் செயலர் சிவகரன் இருவரையும், இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியிலிருந்து நீக்குவது என்று அந்தக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமன

>> 06

## சிரியாவில் போர் நிறுத்தம்

டமஸ்கஸ், பெப். 26
சிரியாவில் அரச படைகளுக்கும், கிளர்ச்சிக் குழுக்களுக்கும் கடந்த ஒருவார காலமாக தொடர்ச்சி

>> 23

## 'கேலிக் கூத்து'

### ஒரு வரியில் முடித்தார் மகிந்த



கொழும்பு, பெப். 26
கூட்டு அரசின் அமைச்சரவை மாற்றத்தை 'கேலிக்கூத்து' என்று ஒரே வரியில் விமர்சித்துள்ளார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச.

>> 23

## கூட்டமைப்பை நிராகரித்ததை மறந்து பேசுகிறார் சம்பந்தன்

### மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, பெப். 26
கூட்டு எதிர்க்கட்சியை 54 வீதமான மக்கள் உள்ளூராட்சித் தேர்தலில் நிராகரித்துள்ளனர் என்று இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். நாட்டு மக்களில் 93 வீதமானோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிராகரித்ததை அவர் மறந்துவிட்டார். இவ்வாறு முன்னாள் அரச தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச

>> 06



# காட்டு யானைகள் நேற்று வாகரையில் அட்டகாசம்

## தென்னந்தோப்பு நாசம்

மட்டக்களப்பு, பெப்.26

மட்டக்களப்பு வாகரையில் காட்டு யானைகளால் தென்னந்தோட்டம் ஒன்று நாசமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

இது தொடர்பில் வாகரை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாங்கேணி கிராமத்துக்குள் ஊடுருவிய காட்டு யானைகளை அங்குள்ள கிராமத்தவர்கள் ஒன்று சேர்ந்து விரட்டியுள்ளனர். விரட்டப்பட்ட யானைகள் கடற்கரையோர காடுகளுக்கூடாக வாகரை பிரதேசத்தில் புகுந்து அங்கிருந்த தென்னை மரங்களை அழித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதிக்குள் காட்டு யானைகள் உட்புகுந்தமை கடந்த 50 ஆண்டுகளில் இதுவே முதற்தடவை என்று விவசாய அமைப்பின் செயலாளர் ரீ.ஜீ குருகுலசிங்கம் தெரிவித்தார். கிராம மக்களை பாதுகாப்பதற்கும் யானைகளை விரட்டுவதற்கும் வனவிலங்கு திணைக்கள அதிகாரிகளின் உதவி நாடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி5)

# சுற்றிவளைப்பில் 2,564 பேர் கைது

கொழும்பு,பெப்.25

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு சுற்றிவளைப்புத் தேடுதலின் போது, 2ஆயிரத்து 564பேர் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதலில் 16 ஆயிரத்து 256 பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியவர்கள் 504 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த வர்களில் 720 பேரும், பல்வேறான குற்றச்சாட்டுகள் தொடர்பில் 741 பேரும், ஹெரோயின் ஏனைய போதைப்பொருள்கள் மற்றும் சட்டவிரோதமான மதுபானம் வைத்திருந்தமை தொடர்பில் 524 பேரும், அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச்சென்ற குற்றச்சாட்டில் 71பேரும், அனுமதிப்பத்திரமின்றி துப்பாக்கிகளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 04 பேரும் கைதுசெய்யப்பட்டனர்.

போக்குவரத்து தொடர்பில் 4 ஆயிரம்735வழக்குகள்தாக்கல் செய்யப்பட்டன. (ற-ரி4)

# அலுவலகத்திலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு

வவுனியா,பெப்.26

வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் அமைந்துள்ள அலுவலகம் ஒன்றிலிருந்து நேற்று இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. நொச்சிமோட்டையைச் சேர்ந்த 31வயதுடைய இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. இவர் தவறான முடிவை எடுத்து தன் உயிரை மாய்த்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இந்தச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# களுவாஞ்சிக்குடியில் ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, பெப்.26

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடத்தில், ஆண்ஒருவரின் சடலம் நேற்றுப் பொலிஸாரால் மீட்கப்பட்டது. இவர் வீட்டின் சமையல் அறையிலேயே சடலமாக மீட்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. இவர் குடும்பத்தகராறாலேயே தன் உயிரை [illegible]னர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பெருங்குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# வெளிமாகாண சந்தைகளை மாத்திரம் நம்பியிராதீர்கள்

## விவசாயப் பணிப்பாளர் அறிவுரை

அச்சுவேலி, பெப். 26

யாழ்ப்பாண விவசாயிகள் ஆர்வத்தோடு விவசாய முயற்சிகளில் ஈடுபடும் அதே வேளை தமது விளைபொருள்களை உழவர் சந்தை மற்றும் பொருத்தமான நடைமுறைகள் ஊடாகச் சந்தைப்படுத்தம் முயற்சியிலும் ஈடுபடவேண்டும். அதன் மூலமே கூடுதலான வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். உள்ளூர் நுகர்ச்சியாளர்களுக்கும் உதவமுடியும். எமது விளைபொருள்களை வெளிமாகாண சந்தைகளை மட்டும் நம்பி உற்பத்தி செய்கின்ற நிலையில் இருக்கின்றபோது எதிர்பாராத பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இவ்வாறு நடுவண் அரசின் யாழ்ப்பாண மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி சசிபிரபா கைலேஸ்வரன்.



யாழ்ப்பாண மாவட்ட உருளைக்கிழங்கு செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற உருளைக் கிழங்கு அறுவடைவிழா குப்பிளான் செ. நவரத்தினராசா (கப்பூது அண்ணா) தோட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் நடைபெற்றது. யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நாகலிங்கம் வேதநாயகன் உருளைக் கிழங்கு அறுவடையை ஆரம்பித்துவைத்தார். உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் இ.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற விழாவில் விவசாயப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது.

உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையில் மாவட்டத்தின் நிலை முன்னேறி வருகின்றது. கடந்த காலங்களின் அறிமுக நிலையில் இருந்த 'பிறடோ' ரக விதை உருளைக் கிழங்கு இந்த ஆண்டு நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளது. இதுவரை காலமும் முன்னிலை பெற்றிருந்த ஆர்கா, சசி, அனோவா, டெட்லைட்சோடா ரகங்களுடன் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட 'பிறடோ' ரகம் யாழ்ப்பாணத்து ஏற்புடையதாக அமைத்துள்ளது.

எமது பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் விளைபொருள்களை எமது பிரதேச நுகர்ச்சியாளர்கள் நியாயமான விலைக்கு பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட வேண்டும். இங்கு உற்பத்தி செய்யப்பட்ட கிழங்கு தம்புள்ளை மத்தியசந்தை, கொழும்பு புறக்கோட்டை சந்தை மற்றும் வெளி மாகாணங்களில் கிலோ 45 ரூபாவுக்கு குறைவான விலையில் விற்பனை செய்யப்படும் அதேவேளையில் உள்ளூர் சந்தையில் கிலோ ஒன்று 80 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதை நான் நேரில் அவதானித்தேன். இந்த நிலை உள்ளூர் நுகர்ச்சியாளர்களுக்கு உள்ளூர் விளைபொருளில் நம்பிக்கை குறைவான நிலை யை ஏற்படுத்தி விடுகின்றது. விவசாயிகள் வெளிமாகாண சந்தை மட்டும் முழுமையாக நம்பி இருக்காமல் உள்ளூரில் உழவர் சந்தை போன்ற பொருத்தமான அமைப்புக்களை உருவாக்கி நியாயமான விலையில் எமது விளைபொருள்களை விற்பனை செய்ய முன்வரவேண்டும் - என்றார். (5,11)

# பள்ளத்தில் வீழ்ந்து ஜீப் வண்டி விபத்து

## மூவர் படுகாயம்

நுவரெலியா,பெப்.26

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஸ்கெலியா நல்லதண்ணி பிரதான வீதியில் மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கத்துக்கு அருகில் நேற்று ஜீப் ரக வண்டி ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 35 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. அதில் மதகுரு உட்பட மூவர் படுகாயங்களுக்குள்ளாகினர். இவர்கள் மஸ்கெலியா பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மஹியங்கனை ஹசலகப் பகுதியிலிருந்து சிவனொளி பாதமலைக்கு யாத்திரைக்காகச் சென்று மீண்டும் மஹியங்கனை ஹசலக



நோக்கி சென்றுக் கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# சூட்டுக் காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு,பெப்.26

மட்டக்களப்பு - வவுணதீவுப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளைஞன் ஒருவனின் சடலம் நேற்றுப் பொலிஸாரால் மீட்கப்பட்டது. கரவெட்டியைச் சேர்ந்த 21வயதுடைய மன்மதன் அருள்ராஜ் என்பவரே துப்பாக்கிசூட்டு காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. அதிகாலை வீட்டிலிருந்து சென்றவர் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார் என்றும் சடலத்துக்கு அருகில் கட்டுத்துப்பாக்கி ஒன்று இருந்தது எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற-ரி5)

# 5 கோடி ரூபா பெறுமதியான தங்கத்துடன் இருவர் கைது

கொழும்பு,பெப்.26

கற்பிட்டி, கந்தகுளியா கடற்கரையில் 5 கோடி ரூபா பெறுமதியான 7 கிலோ கிராம் தங்கத்துடன் இரண்டு பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர் என கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை இலங்கை சுங்கத் திணைக்களத் தினர் மேற்கொள்ள உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

# வைக்கோல் திருடியவர் கைது

சாவகச்சேரி பெப் 26

வைக்கோலைத் திருடிய சாரதி வாகனத்துடன் வயல் உரிமையாளரால் பிடிக்கப்பட்டார். அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இந்தச்சம்பவம் நேற்று மறவன்புலோ வயல் பகுதியில் இடம்பெற்றது. வைக்கோல் ஏற்றுவதற்காக வயல் உரிமையாளர் சென்றார் அப்போது வேறொருவர் வாகனத்தில் ஏற்றிக் கொண்டிருந் [illegible] மையாளர் மடக்கிப் பிடித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற.ரி5.9)



வெலிமடைப் பகுதி லக்லேண்ட் பெருந்தோட்டத்தில் அமைக்கப்பட்ட கொங்கிறீட் [illegible] வீதி திறப்பு விழா நிகழ்வு நேற்று நடைபெற்றது. பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமாரின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் அடிப்படையில் 15 லட்சம் ரூபா செலவில் இந்த வீதி அமைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)



சாவகச்சேரி மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலய மாணவர்களுக்கு கனடாவிலிருந்து வருகை தந்துள்ள தங்கம்மா கந்தசாமி என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை பாதணிகள் வழங்கி வைத்தார். (9)

# முகமாலை மீள்குடியேற்றப் பகுதிக்கு மின்சாரம் வழங்கக் கோரிக்கை

கிளிநொச்சி பெப் 26

முகமாலை தெற்குப் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ளபோதும் இதுவரை மின்சார இணைப்புக்கள் வழங்கப்படவில்லை என கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்

கிளிநொச்சி மாவட்டத்தில் போர் காரணமாக மிகவும் மோசமான பாதிப்பை எதிர்கொண்ட பிரதேசமாக காணப்படும் முகமாலை பகுதியில் தற்போதும் கண்ணிவெடிகள் அகற்றும் பணி இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் முகமாலை தெற்குப் பகுதியில் கடந்த 2016ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் ஒரு பகுதி மக்களின் மீள்குடி யேற்றத்துக்காக அனுமதியளிக்கப்பட்டது. தற்காலிக வீடுகள் அரச சார்பற்ற நிறுவனத்தால் அமைத்து வழங்கப்பட்டன.

மின்சார வசதியின்மையால் இரவு நேரங்களில் அங்கு நடமாடவும் தங்கவும் கடினமாக இருக்கின்றது என மக்கள் தெரிவித்தனர். தற்காலிக வீடுகளுக்கு மின்சார இணைப்புக்கள் செய்யப்பட்டுள்ளபோதும் மின்சாரம் வழங்கப்படவில்லை. தற்போது நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டும் அதற்கான இணைப்புக்கள் இதுவரை வழங்கப்படாத நிலையில் இரவு நேரங்களில் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கூறுகின்றனர். (எ-6)

# திருகோணமலைக்கு ஆன்மிக யாத்திரை

கிளிநொச்சி பெப் 26

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புதுமுறிப்பு, இரத்தினபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 40 முதியவர்கள் உளசமூக மேம்பாட்டுக்காக திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் நாளை செவ்வாய்க்கிழமை காலை அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. திருக்கோணேச்சரம் ஆலயம், ஶ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயம், கன்னியா வெந்நீரூற்று, ஆத்திமோட்டை லக்ஸ்மிநாராயணர் ஆலயம் போன்ற புனித இடங்களுக்கு ஆன்மிக யாத்திரையாக அழைத்துச் செல்லப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (9)

# உள்நாட்டு மருத்துவத்தை பாதுகாப்பது மிக அவசியம்

## வடக்கு முதல்வர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப்.26

எமது நாடுகளிலிருந்தே பல கலை வடிவங்கள் பிறநாட்டாரால் திருடிச் செல்லப்பட்டு இன்று அவர்களின் நாட்டுக் கலைவடிவங்களாக அவை எமக்கு எடுத்துக் காட்டப்படுகின்றன. உள்நாட்டு மருத்துவமும் பிறநாட்டவரால் அபகரித்துச் செல்லப்படுவதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். முன்னர் இதை அறியாது பறிகொடுத்தோம். இப்போது பணத்துக்காக அறிந்தும் பறிகொடுக்கின்றோம். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக சித்த மருத்துவ அலகும், வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களமும், இந்தியாவின் ஆயுஸ் அமைப்பும் இணைந்து நடத்தும் பன்னாட்டு ஆய்வு மாநாடும், கண்காட்சியும் கைதடியில் நடைபெறுகின்றது. அதில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே முதலமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

சித்த மருத்துவம் என்பது முழுக்க முழுக்க மூலிகைகளாலும் மூலிகைக் குணமுடைய மரப்பட்டைகளாலும், சுகாதாரத்துக்கு உதவக் கூடிய சரக்கு வகைகள் எண்ணெய் போன்றவற்றால், எந்தவித பக்கவிளைவுகளும் ஏற்படாமல் ஆற்றப்படுகின்ற வைத்திய முறையாகும். இந்த வைத்திய முறைமை இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் மேலை நாட்டு ஆங்கிலேய வைத்திய முறைமைகள் எமது மண்ணில் அறிமுகப்படுத்தப்படாத காலத்தில் இருந்தே நடைமுறையில் இருந்துள்ளது. ஆங்கில வைத்திய முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டு மெல்ல மெல்ல ஆசிய நாடுகளில் பரவத் தொடங்கியதும் மக்களுக்கு குடிநீர்களில், குளிகைகள், பத்திய உணவு வகைகளைப் பின்பற்றும் செயற்பாடுகளில் ஆர்வம் குன்றத் தொடங்கியது. புதிய முறையின் இலகு தன்மையை மக்கள் விரும்பியதாலும், உடனடி நிவாரணியாக இந்த இரசாயனக் கலவைகள் பயன்பட்டதாலும், எமது பாரம்பரிய சித்த வைத்திய முறைமைகளைக் கைவிட்டு மேலைத்தேய வைத்திய முறைமைகளை எமது மக்கள் பின்பற்றத் தொடங்கினர். நாம் அறிந்துகொள்ளாத அல்லது புரிந்து கொள்ளாத எமது வைத்திய முறைகளின் பக்கவிளைவற்ற, உடலுக்கு எந்த தீங்கும் விளைவிக்காத வைத்திய முறைகளை நன்கு புரிந்துகொண்ட மேலைநாட்டவர்கள் தமது தீராத நோய்களுக்கான வைத்திய உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தியா போன்ற நாடுகளுக்கு படையெடுக்கத் தொடங்கியுள்ளனர். அவர்களின் நாட்டில் கிடைத்த இரசாயனக் கலவைகளை குளிகைகளாகவும், மருந்துக் கலவைகளாகவும் எமக்கு அனுப்பி விட்டு தமது தேவைக்கு எமது நாட்டை நோக்கி மூலிகை மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வரத்தொடங்கினர். சித்த மருத்துவத்தின் அண்மைக்கால வளர்ச்சி பல நூற்றுக் கணக்கான மாணவர்களை சித்த மருத்துவத் துறையில் உள் நுழைப்பதற்கும் மருத்துவக் கற்கை நெறிகளை சிறப்பாக நிறைவேற்றி மருத்துவ சேவையில் ஈடுபடவும் வழிவகுத்துள்ளது. அது எமது பாரம்பரிய வைத்திய முறைமைக்கு கிடைக்கப் பெற்ற ஒரு அங்கீகாரம் எனத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன். ஆனால் சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம், சித்தாயுர்வேத வைத்தியம் என்று எமது சுதேச வைத்திய முறைகள் பங்கு போடப்பட்டு போட்டி பொறாமைகளுடன் வளர்ந்து வருவதைக்கண்டு மனவருத்தப்படுகின்றேன். எமது வைத்திய முறைமைகள் பற்றி மேலும் மேலும் ஆராயுங்கள். அவற்றின் பாவனையை முடிந்த அளவு இலகுபடுத்துங்கள். எமது வருங்கால சந்ததியினர் எதுவித பக்க விளைவுமற்ற, உடலுக்கு நன்மை பயக்கக் கூடிய சுதேச மருத்துவ உதவியுடன் தொற்று நோய், தொற்றா நோய்த் தாக்கங்களில் இருந்து விடுபட்டு ஒரு ஆரோக்கியமான சமூகமாக வளர்ந்து, வாழ்ந்து வர வாழ்த்துகின்றேன்-என்றார். (ந)

# இரு நூல்களின் வெளியீடுகள் நல்லூரில் நாளை இடம்பெறும்

யாழ்ப்பாணம், பெப். 26

"உலகில் மிகச்சிறந்த எட்டு சிவத்தலங்கள், அன்புள்ள தம்பிக்கு1,000 உபதேசங்கள்" ஆகிய இரண்டு நூல்களின் வெளியீடு நாளை செவ்வாய்க்கிழமை நல்லை ஆதீன குரு மகா சந்நிதானத்தில் இடம்பெறும்.

பிரபல ஆன்மிக எழுத்தாளரும் அகில இலங்கை சமாதான நீதிவானுமான அராலியூர் கலாபூசணம் வி.செல்வரத்தினம் இவற்றை எழுதியுள்ளார். காரை எம்.பி. அருளானந்தம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வு பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இ.ஆனோல்ட். வட்டுக்கோட்டை மருத்துவமனை, மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி திருமதி றதினி காந்தநேசன், சட்டத்தரணி திருமதி நாகநாகேஸ்வரி சிவபாதம், ஆசிரியர் செ.பிரதாப், சங்கானை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ்.அமலதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர் என்று அறிவிக்கப்பட்டது. (4)

# வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு.பெப்.26

வெலிமடை போகஹகும்புர பொலிஸ் நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார் மூவர் படுகாயமடைந்தனர். கண்டியிலிருந்து பொரலந்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த காரே மண்மேடு ஒன்றுடன் மோதி விபத்துக்குள் ளானது. விபத்தில் படுகாயமடைந்த மூவர் பொரலந்தை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சாரதியின் நித்திரையே விபத்துக்குக் காரணம் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை போகஹகும்புர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரி5)



# பாவற்குளம் அபிவிருத்தி தொடர்பாகச் சந்திப்பு

வவுனியா,பெப்.26

வவுனியா பாவற்குளத்தின் மீளக்குடியமர்ந்த மக்களுக்கும் புலம் பெயர்ந்து வாழும் மக்களுக்குமிடையிலான சந்திப்பு பாவற்குளம் மகாவித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்றது. பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக அதில் கலந்துரையாடப்பட்டது. போர் காரணமாக இடம்பெயர்ந்த பாவற்குளம் மக்கள் தற்போது மீளக்குடியேறி வரும் நிலையில், இந்தக் கிராமத்தின் கல்வி, விவசாயம் மற்றும் அபிவிருத்திகள் பின் தங்கிய நிலையில் உள்ளன. புலம் பெயர்ந்து வாழும் பாவற்குளம் மக்கள் "மண் வாசம்" எனும் அமைப்பை உருவாக்கி தாயகத்தில் உள்ள பாவற்குளம் மக்களின் கல்வி, விவசாயம், சமய மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்கான செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர். இந்தக் கூட்டத்துக்கு, வட மகாண விவசாய அமைச்சரை அதிதியாக அழைத்து தமது பிரதேசத்தின் தேவைப்பாடுகளை எழுத்து மூலமாக வழங்கினர்.

இதில் முதியோர் கௌரவிப்பும் இடம்பெற்றது. (ந.ரி4)

# திறன் வெளிப்பாட்டு சர்வமத கலை நிகழ்வு



மன்னார்,பெப்.26

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் திறன் வெளிப்பாட்டு சர்வமதக் கலை நிகழ்வு 'சகவாழ்வு' எனும் தொனிப்பொருளில் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட மன்னார் வட்டக்கண்டல் அரசினர் பாடசாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

கறிற்றாஸ்வாழ்வுதய இயக்குனர் அருட்பணி ம.ஜெயபாலன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வு கலை நிகழ்வுகளின் ஊடாக மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் வகையில் அமைந்திருந்தது. அனைத்து மதங்களையும் ஒன்றிணைத்து இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ். கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக வட்டக்கண்டல் பாடசாலை அதிபர் அந்தோனி தேவதாஸ், மதிப்புறு விருந்தினர்களாக சர்வமதத் தலைவர்களான மௌலவி அப்துல் ரகான் முகமட் ஜவாஸ், அளவக்கை பங்குத்தந்தை அருட்பணி சுரேந்திரன் றெவல், செட்டிகுளம் உதவிப்பங்குத் தந்தை பிறாங்டப், இந்துமத குருக்கள் சிவஶ்ரீ மு.றதி மாறன் உட்பட கிராம அலுவலகர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (எ-56)

# சாவகச்சேரி தனங்களப்பு வீதியை சீரமைத்து வழங்கக் கோரிக்கை

சாவகச்சேரி, பெப். 26

**ஏ- 9 முதன்மைச் சாலையையும், ஏ- 32 முதன்மைச் சாலையையும் இணைக்கும் சாவகச்சேரி தனங்களப்புச் சாலையைச் சீரமைத்து வழங்குமாறு அந்தப் பகுதி பொது அமைப்புகள், தேசிய சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளன.**

சாவகச்சேரிச் சந்தியிலிருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்தில் தனன்களப்புச் சந்தியுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து நாவற்குழி ஊடாக மன்னார்-பரந்தன் கிளிநொச்சி-முல்லைத்தீவு போன்ற இடங்களுக்குச் செல்லும் இந்தச் சாலை தார்க்கலவை (கார்பெற்) சாலையாகச் சீரமைக்கப்பட்ட பின்னர் தினமும் பெருமளவு வாகனங்கள் அதனூடாகப் பயணித்து வருகின்றன. இதேவேளை தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, வடமராட்சி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் சாவகச்சேரி தனங்களப்புச் சாலையூடாகப் பயணித்து ஏ32 வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே இந்தச் சாலை குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் சாலையைச் சீரமைத்து வழங்குமாறு தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்கள் மற்றும் இந்த மார்க்கத்தில் பயணிக்கும் வாகனச் சாரதிகள் போன்றோர் பல்வேறு தரப்பினரிடம் 2011ஆம் ஆண்டு தொடக்கம் வேண்டுகோள் விடுத்தும் பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் முறையிட்டும் நிதி கிடைக்காததால் புனரமைத்து வழங்கப்படவில்லை.

சாலை அமைந்துள்ள பகுதியில் குடியிருப்புகள் இல்லாத போதிலும் இரு பக்கமும் பெருமளவு வயல்களைக் கொண்ட பகுதியாகும். நெல் உற்பத்தி காலத்தில் விதைப்புத் தொடக்கம் அறுவடை முடியும்வரை தினமும் பெருமளவு வாகனங்கள் பெரும் சிரமங்களின் மத்தியில் பயணிக்கின்றன. இந்தநிலையிலேயே இந்தச் சாலையைச் சீர மைத்துத் தருமாறு பிரதேச மக்கள் தேசிய சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்துக்கு முறையிட்டுள்ளனர். கடந்த 1996ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி வரை தென்மராட்சி தெற்குப் பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்ட வேளையில் தினமும் பெருமளவு கனரக வாகனங்கள் பயணித்து வந்தன எனவும், அதன் பின்னர் ஏ-32 சாலை சீரமைப்பு மற்றும் கேரதீவு பால நிர்மாணம் போன்றவற்றுக்கான மூலப் பொருள்களை எற்றிய கனரக வாகனங்கள் பயணித்ததாலும் சாலை மிகவும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகிறது. வருடாவருடம் வீதி மேம்பாட்டு அதிகார சபையினர் சிறிய அளவினலான சீரமைப்புச் செய்கின்ற போதிலும் வாகனப் போக்குவரத்து பெருமளவில் இடம்பெறுவதால் அந்த அடிக்கடி சேதமடைகின்றது எனவும் மக்கள் குறிப்பிட்டனர். (ள-21-9)



காரைநகர், கோவளத்தைச் சேர்ந்த அமரர் தம்பிராசா விசாலாட்சியின் நினைவாக எழுதப்பட்ட 'விசாலாட்சம்' ஆன்மிக மலர் வெளியீடு யாழ்ப்பாணம் கலட்டி, எச்சாட்டி மகாமாரியம்மன் ஆலய மணிமண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா முதல் பிரதியை அன்னாரின் கணவர் திரு.க.தம்பிராசாவுக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.26

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரி மைதானத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டப்பிரிவு விரிவுரையாளர் சுகுமாரி நிரஞ்சன் கலந்துகொள்ளவுள்ளார் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

## டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை சாவகச்சேரியில்

தென்மராட்சி,பெப்.26

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு கிராம அலுவலர் பிரிவுகளில் கடந்த வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை நடத்திய சிறப்பு டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டத்தில் ஆயிரத்து 342 இடங்கள் பார்வையிடப்பட்டன. அவற்றில் 114 இடங்களின் உரிமையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்தில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவில் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்கான சிறப்பு பரிசோதனைகள் நடத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் சாவகச்சேரி நகர பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட கல்வயல் மற்றும் சங்கத்தானைப் பிரிவுகளில் கடந்த வியாழக்கிழமையும், நாவற்குளி பொதுசுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட நாவற்குளி மேற்கு மறவன்புலவு ஆகிய பிரிவுகளில் கடந்த வெள்ளிக்கிழமையும் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

சுகாதாரத் திணைக்களத்தினருடன் தென்மராட்சி பிரதேச செயலகத்தினர், பாதுகாப்பு படையினர், பொலிஸார், சிறப்பு டெங்கு பரிசோதனைத் தொண்டர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கல்வயல் மற்றும் சங்கத்தானை ஆகிய பிரிவுகளில் 823 இடங்களிலும் நேற்று நாவற்குளி மேற்கு மறவன்புலவு ஆகிய பிரிவுகளில் 519 இடங்களிலும் தரிசிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுநிலையில் காணப்பட்ட காணிகளின் குடியிருப்பா ளர்கள் 114 பேருக்கு இருவார கால அவகாசம் வழங்கி சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டது.

அத்துடன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட குடியிருப்புகள் மற்றும் காணிகளின் உரிமையாளர்களுக்கு டெங்கு தொடர்பான சுய மதிப்பீட்டு அறிக்கைக்கான அட்டைகளும் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## வலி.கிழக்கு பிரதேசத்தில் குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாண்ம்,செப்.26

தற்போதைய வறட்சியை அடுத்து வலி. கிழக்கு பிரதேசத்தில் குடிதண்ணீர் விநியோகம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இருபாலை கிழக்கு வளலாய், புத்தூர் போன்ற பிரதேசங்களுக்கு பவுசர் மூலமான குடிதண்ணீர் விநியோகம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வலி.கிழக்கு பிரதேச சபையினரின் பவுசர் வாகனங்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெற்று வருகின்றது என்று பிரதேச சபை தெரிவித்தது. எனினும் விநியோகத்தை சீராக மேற்கொள்வதற்கு போதிய பவுசர் வாகனத்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதன் காரணத்தால் மேலும் இரண்டு பவுசர் வாகனத்தை பெற்றுக்கொள்ளவும் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-17)

## மஹோற்சவம்

மாதகல், பெப்.26

மாதகல் நுணசை ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர சுவாமி தேவஸ்தான மாசி மகா மஹோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் சுவாமி தேரில் ஆரோகணிப்பார். ஆலய முதன்மை மண்டபத்தில் கலைமாமணி க.லோகேஸ்வரனின் பண்ணிசையரங்கு பக்கவாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

## ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜர் அபிசேகம்

யாழ்ப்பாணம், பெப்.26

இந்து சமயப் பேரவையின் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜர் அபிசேகம் (மாசி சதுர்த்தசி) யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையில் எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை மதியம் 12.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பண்ணிசை பாட விரும்புவோர் மற்றும் தாள வாத்தியங்கள் வாசிக்க விரும்புவோர் தமது பதிவுகளை முன்கூட்டியே அறியத்தருமாறு இந்து சமயப் பேரவை செயலாளர் சி.சக்திகிரீவன் தெரிவித்துள்ளார். (எ-21)

## "செயற்பட்டு மகிழ்வோம்" விளையாட்டு நிகழ்வு



யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் 'செயற்பட்டு மகிழ்வோம்' நிகழ்வு பாடசாலை மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மதியம் 1 மணியளவில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற கழ்வில் மாணவர்களின் மெய்வன்மை நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் என்பன இடம் பெற்றதுடன், வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் சிறப்பு விருந்தினராக செலிங்கோ லைப் இன்சூரன்ஸின் யாழ்ப்பாண மாவட்ட முகாமையாளர் செ.கோகுலதாஸ் மதிப்புறு விருந்தினராக இலங்கை வங்கியின் திருநெல்வேலி கிளை முகாமையாளர் யாமளைதனேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ)





## சமூக சேவைகள் நடமாடும் சேவை புதுக்குடியிருப்பில் இடம்பெற்றது

முல்லைத்தீவு, பெப்.26
சமூக சேவைகள் தொடர்பான நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் காலை முல்லைத்தீவு, கிளிநொச்சி புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. வடக்கு மாகாண சமூக சேவைகள், மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற முல்லைத்தீவுக்கான நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகமும் இணைந்திருந்தது. இந்த நடமாடும் சேவையில், மூக்கு கண்ணாடிவழங்கல், மாற்றுத்திறனாளிகளுக்கான சுயதொழில் உதவி, வீடு திருத்தம், மலசலகூட வசதிகளை வழங்கல், உபகரணம் வழங்கல், மலசலகூடத்தை முழுமைப்படுத்திய மாற்றுத் திறனாளிகளுக்கான காசோலை வழங்கல், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான சுயதொழில் உதவி, மாற்றுத்திறனாளியாக உள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு கல்விக்கான உதவி, முதியோர் அடை. யாள அட்டைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல், நலிவுற்றோருக்கான தற்செயல் உதவிப் பொருள் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு போன்றவை வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச் சர் அனந்தி சசிதரன், முல்லைத்தீவு உதவி மாவட்டச் செயலர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் . துணுக்காய் பிரதேச செயலர், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன் மற்றும் அரச அதிகாரிகள் கலந்து கொண்டு மக்களுக்கான நடமாடும் சேவையை மேற்கொண்டனர்.
இதில் கலந்து கொண்ட அமைச்சர் அனந்தி தெரிவித்தா வது; 'முல்லைத்தீவு மாவட்டம் கடந்தகாலப் போரின்போது முற்றுமுழுதான பாதிப்புக்கு உள்ளாகிய மாவட்டம். இந்த மாவட்டம் பெண் தலைமைத்துக் குடும்பங்களையும், மாற்றுத்திறனாளிகளையும், அதிகமாகக் கொண்ட, உட மைகளை இழந்து மிகவும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்கள் வாழும் மாவட்டமாகும். போரின் பெரும் பாதிப்பு இடம்பெற்ற மாவட்டத்தில் தேவைகள் அதிகரிக்கின்றமை யால் ஏனைய மாகாணத்தைப்போல் கருதாது ஏனைய மாகாணத்துக்கு ஒதுக்கும் நிதியை போல் மூன்று மடங்கு நிதி வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கினால்தான் இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும்' என்றார். (21-ரி3)

## 'நயினை நாதம்' இறுவட்டு வெளியீடு


வவுனியா,பெப்.26
வவுனியா வடக்கு கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் வடக்கில் புகழ்பூத்த ஆலய மான நயினை நாகபூசணி அம்மன் புகழ்பாடும் 'நயினை நாதம்' எனும் இறுவட்டு வெளியிடப்பட்டது.
வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் செஞ்சொற்கவி பளையூர் பரா (கதிர் பரந்தா மன்) வரிகளில் த.ரமேஷின் இசையமைப்பில் ஈழத்து சௌந்தரராஜன் ராஜேந்தி ரன் குரலில் உருவான பாடல் வெளியீடு நெடுங் கேணி கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற் றது
பிரதேச செயலாளர் பரந்தா மன் .தலைமையில் இடம் பெற்ற வெளியீட்டு நிகழ்வில் கதிர்வேலாயுத சுவாமி ஆலய முதன்மைக் குரு நட ராசா குருக்கள், இறுவட்டு உருவாக்கத்துக்கு அனுச ரணை வழங்கிய சுவிஸ் வாழ் இலங்கையரான இரா சதுரை கணேசலிங்கம், வவுனியா கோவில் குளம் சிவன் ஆலயத்தின் தர்ம கர்த்தா நவரெட்ணம், ஐசீசீ கல்விக்குழுமத்தின் தலை வர் சந்திரகுமார், நெடுங் கேணி மகாவித்தியாலய அதிபர் செ.பவேந்திரன், ஐசீசீ கல்விக்குழும முகாமையா ளர் விஜிதரன், கலாசார உத் தியோகத்தர் விஜிதா, ஊடக வியலாளர் ஜனகன், கிராம உத்தியோகத்தர் சிவகாந்தன், வவுனியா வடக்கு பிரதேச செயலக ஊழியர்கள், மாமடு ஸ்ரீ வாணி வித்தியாலய அதி பர் நாகராசா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ-21)

# வவு. நொச்சிமோட்டை பாலம் மீண்டும் பழுது

### திருத்தியமைக்க அதிகாரிகள் முன்வரவில்லை என்று மக்கள் குற்றச்சாட்டு

**வவுனியா, பெப்.26**
**வவுனியா நொச்சிமோட்டை பாலத்தின் ஒருபகுதித் துண் டம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு உள்ளிறங்கியதால் அதனூடாகப் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனச் சாரதிகள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.**

வவுனியா நொச்சிமோட்டைப் பாலம் அடிக் கடி சேதத்துக்கு உள்ளாகின்றது. எனினும் அதிகாரிகள் அந்தப் பாலத்தைச் தற்காலிக மாகவே சீரமைக்கின்றனர்.
நிரந்தரமாக அந்தப் பாலம் அமைப்பதில் அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை. பாலம், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குட் பட்ட பகுதியில் அமைந்திருப்பதுடன் A9 முதன்மை வீதியில் யாழ்ப்பாணம், கிளி நொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளுக் குச் செல்லும் வாகனங்களின் முதன்மைப் போக்குவரத்துப் பாதையாகவும் காணப்ப டுகிறது. கடந்த வெள்ளிக்கிழமை இரவு அந்தப் பாலத்தில் போடப்பட்ட இரும்புத் தகட்டின் துண்டம் ஒன்று கீழ் இறங்கியது.
இறங்கிய பகுதிக்கான பாதுகாப்பு ஏற்பாடு கள் உடனடியாக மேற்கொள்ளப்பட வில்லை. சாரதிகளுடைய நலன் கருதி அங்குள்ள சிலர் இறங்கிய பகுதிக்கு வாக னச் சக்கரத்தின் ரயர் ஒன்றைப் போட்டு அபாயத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.
தொடர்ச்சியாகச் சேதமடையும் இந்தப் பாலத்தை மக்களுடைய நலனைக் கருத்திற் கொண்டு உடன் சீரமைக்க வேண்டும் என்று அந்தப்பகுதியைச் சேர்ந்த மக்களும்



பயன்படுத்தும் வாகனச் சாரதிகளும் கோரி னர்.
ஆனால் அதற்கான எந்த நடவடிக்கைகளும் அதிகாரிகளால் எடுக்கப்படவில்லை, போடப் பட்ட ரயரே சாரதிகளுக்கு பாதுகாப்பாக அமைந்துள்ளது. (21)



புதுக்குடியிருப்புக் கைவேலியில் எந்தவித உதவியும் இன்றி தனி மையில் வாழ்ந்து வந்த மூதாட்டியின் வீட்டுக்குச் சென்ற புதுக்குடியிருப்பு மாற்றத்துக்கான இளை யோர் அமைப்பினர் மூதாட்டியின் குடிசையை மீள் திருத்தி சுற்றுப்புற சூழலையும் சிரமதா னம் செய்து ஒரு தொகுதி உணவுப் பொருள்க ளையும் வழங்கிவைத் தனர். (21)

## முத்திரை இடப்படாத பீடி விற்றவருக்குத் தண்டம்

கிளிநொச்சி, பெப். 26
முத்திரை இடப்படாத பீடி களை விற்பனை செய் தார் என்று குற்றஞ் சாட்டப்பட்ட கடை உரி மையாளருக்கு 1000 ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதி வான் மன்று.
உரிமையாளர் கடந்த வெள்ளிக்கிழமை நீதி மன்றில் முற்படுத்தப்பட் டார். சந்தேகநபரான உரி மையாளர் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். இதன் காரணத்தால் தவறுமீண் டும் ஏற்படாது இருக்க வேண்டும் என கூறியது டன் 1000 ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதி வான் மன்று. (21-6)

## மூவருக்கு ரூ. 1லட்சத்து 5000 தண்டம்

கிளிநொச்சி,பெப்.26
அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய டிப்பர் வாகனம் உள்ளிட்ட மூன்று வாகன சாரதிகளுக்கு 1 லட்சத்து 5000 ரூபா தண்டம் விதித்தது கிளி நொச்சி மாவட்ட நீதி வான் மன்று.
அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய டிப்பர் மற்றும் இரு உழ வியந்திர சாரதிகளை கைது செய்த பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தி னர். சந்தேக நபர்கள் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து ஒரு உழவியந்திர சாரதிக்கு 50ஆயிரம் ரூபா தண்ட மும் மற்றைய சாரதிக்கு 25ஆயிரம்ரூபாதண்டமும் டிப்பர் வாகன சாரதிக்கு 30ஆயிரம் ரூபா தண்ட மும் விதித்துத் தீர்ப்ப ளித் தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று. (எ-6)

# பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சகோதர சங்கமம் நிகழ்வு வவுனியாவில்





வவுனியா, பெப்.26
பாடசாலைகளுக்கு இடையிலான சகோதரசங்கமம் நிகழ்வு வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4மணியளவில் இடம்பெற்றது.
ஒரு சமூகத்தைச் சேர்ந்த மாணவர்க ளின் நற் பழக்க வழக்கங்களை இன் னொரு சமூகம் புரிந்து கொள்வதனூ டாக மகிழ்ச்சி கரமான வாழ்க்கை வாழ்வதை எதிர்கால நோக்காகக் கொண்டு இந்த நிகழ்வு ஏற்பாடுசெய் யப்பட்டது.
நிகழ்வு பாடசாலை அதிபர் கி.நந்தபா லன் தலைமையில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் ஜி.ஐ.சட் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்றது.
தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெ ற்றது. நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளரும் ஜி.ஐ.சட் நிறு வன முதன்மைச் செயற்பாட்டு அதிகா ரியுமான வி. இராசையா மற்றும் வவுனியா தெற்கு கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.அமிர்தலிங்கம் மற்றும், வடக்குமாகாண ஜி.ஐ.சட் இணைப்பாளர் லோகேஸ்வரன், ஆசி ரியர்கள் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (21)

## பீரிஸின்...

சின் கீழ் இயங்கிய நிறுவனம் ஒன்றில் ஊழல் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டு அது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்தது. இந்த விசாரணைகளை நிறுத்துவதற்குரிய ஆலோசனைகளை அப்போதைய சட்டமா அதிபராக இருந்த மொஹான் பீரிஸ் வழங்கியிருந்தார்.

சாதாரண ஊழல் குற்றச்சாட்டுக்களை விட இது மிக மோசமான ஊழல் என்று குறிப்பிட்டு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, மொஹான் பீரிஸ் உள்ளிட்ட மூவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளது. இந்த வழக்கில் மொஹான் பீரிஸ் உள்ளிட்ட மூவரையும் மார்ச் 8ஆம் திகதி முன்னிலையாக வேண்டும் என்று நீதிமன்று அழைப்பாணை விடுத்திருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், தமக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வழக்குத் தாக்கல் செய்தது தவறு என்று குறிப்பிட்டும், அந்த வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரியும், மொஹான் பீரிஸ், தற்போதைய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நவாஸ், சட்டத்தரணிகள் சங்கம் என்பன 5 வழக்குகளை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளன.

இந்த ஐந்து வழக்குகள் மீதான விசாரணை இன்று நடைபெறவுள்ளது. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் சார்பில், வழமையாக அரச திணைக்களங்கள் சார்பில் சட்டமா அதிபரே முன்னிலையாவார். ஆனால், மொஹான் பீரிஸ் சட்டமா அதிபராக இருந்தபோது நடைபெற்ற விடயம் தொடர்பிலா வழக்கு என்பதால், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு சார்பில் முன்னிலையாக சட்டமா அதிபர் மறுத்துவிட்டார்.

இதனால் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு சார்பில், அரச தலைவர் சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன், வெலியமுன, ஜெசி அழகரட்ணம் ஆகியோர் முன்னிலையாகவுள்ளனர். (ρ-5)

## தமிழரசுக்...

அவர் தெரிவித்ததாவது:

ஜெனிவாக் கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கூட்டத் தொடர்பில் எமது கட்சி சார்பிலும் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவேண்டும். அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று பலர் கேட்டார்கள். இதற்கு அமைவாக எமது கட்சி சார்பில் ஒரு குழு கலந்து கொள்வது என்று முடிவெடுக்கப்பட்டது. இந்த விடயங்களை நானே கையாளவுள்ளேன்.

எமது கட்சியின் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அன்னம்மா இந்தக் குழுவில் முதன்மைப்படுத்தப்படுவார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தன்னையும் இந்தக் குழுவில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டார். அதற்கு நாம் இணக்கம் தெரிவித்தோம். கிடைக்கும் நிதியைப் பொறுத்தே எத்தனை பேர் கொண்ட குழு என்பது இறுதி செய்யப்படும்.

அங்கு இடம்பெறும் பக்க நிகழ்வுகள், எமக்கு பேசக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்தே, எப்போது செல்வது என்பது தீர்மானிக்கப்படும் - என்றார். (ρ-5)

## அனந்தியையும்...

தாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஏற்கனவே ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள வடக்கு மாகாண சபை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் மற்றும் சிவகரன் இருவரையும் கட்சியிலிருந்து நீக்கும் தீர்மானம் அதில் முன்மொழியப்பட்டுள்ளது.

சிவகரனை மாத்திரம் இப்போது நீக்கலாம். அனந்தி சசிதரன் பற்றிப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று யோசனை அப்போது முன்வைக்கப்பட்டுள்ளது. நடவடிக்கை எடுப்பதாயின் இருவருக்கும் எதிராகவே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. இறுதியில் இருவரையும் கட்சியிலிருந்து நீக்குவது என்று ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில், மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தீர்மானம் எடுத்த பின்னர் அதனை மீறி இவர்கள் இருவரும் செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ρ-5)

## கூட்டமைப்பை...

தெரிவித்தார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, கண்டி தலதா மாளிகையில் நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டார். அதன் பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

தற்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் சம்பந்தன் அண்மையில் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார். எமது தரப்பினர் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகள் அரசு பெற்ற மொத்த சத வீதத்துடன் ஒப்பிடுகையில் குறைவாகவே உள்ளது என்று கூறினார். அப்படியென்றால் அவர்களும் அரசின் ஒரு தரப்பினர் என்பதுதான் பொருளாகும். அரசின் ஒரு தரப்பினராக இருக்கும் ஒரு கட்சியினர் எவ்வாறு எதிர்க்கட்சித் தலைவராக இருக்க முடியும். அதற்குப் பொருத்தமானவரா என்பதைச் சிந்திக்கவேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கூட்டு எதிர்க்கட்சிக்கு வழங்குவது நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு முரணானது என்று கூட்டமைப்பினர் குறிப்பிடுவது, வேடிக்கையாகவே காணப்படுகின்றது. கூட்டு அரசின் பங்காளியாக மாத்திரம் செயற்படும் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், தனது பதவியின் கடமைகளை கடந்த மூன்று வருடகாலமாக மேற்கொள்ளாமல் ஒருதலைப்பட்சமாகவே செயற்படுகின்றார். எதிர்க்கட்சி தலைவர் என்ற பதவியானது அரசுக்கு எதிராகவே செயற்படவேண்டும். அப்போதுதான் ஆளும் அரசு நிர்வாகத்தை முறையாகக் கொண்டு செல்ல முற்படும். ஆனால் இலங்கையில் அவை சாத்தியமற்றதாகவே காணப்படுகின்றது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிப் பதவி ஒன்று உள்ளதா? என்பது தொடர்பில் மக்கள் மத்தியில் பெரும் கேள்வியாகவே உள்ளது. உறுதியற்ற அரசால் நாட்டுக்கு எந்தவித பயனும் இல்லை. ஆகவே நாட்டின் நலன் கருதி காலதாமதமின்றி நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய ஆட்சி அதிகாரத்தை உருவாக்க வேண்டும் - என்றார். (ρ-5,31)

## பெரும்...

போன்று 3 இராஜாங்க அமைச்சர்களும், பிரதி அமைச்சர் ஒருவரும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

கடந்த காலங்களில் பெரிதும் பேசப்பட்ட சட்டம், ஒழுங்கு அமைச்சு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது. தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் தலைமை அமைச்சர் வசம் இருக்கும் நிலையிலேயே அவருக்கு மேலதிகமாக அமைச்சுப் பதவியொன்றும் வழங்கப்பட்டுள்ளது.

2015 பொதுத்தேர்தலின் பின்னர் உதயமான கூட்டு அரசின் அமைச்சரவையில், சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவி திலக் மாரப்பனவுக்கு வழங்கப்பட்டது. அவன்கார்ட் விவகாரத்தில் ஏற்பட்ட சர்ச்சையால் அமைச்சுப் பதவியை துறக்கவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. அதன்பின்னர் மேற்படி அமைச்சுப் பதவி சாகல ரத்நாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்குப் புறம்பாக தெற்கு அபிவிருத்தி அமைச்சும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் மேற்படி அமைச்சுப்பதவியிலிருந்து விலகவுள்ளேன் என்று சாகல ரத்நாநாயக்க அறிவித்திருந்தார். இதையடுத்து சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவியை பிராந்திய அபிவிருத்தி அமைச்சராக இருக்கும் சரத் பொன்சேகாவுக்கு வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்திருந்தது. எதிர்ப்புகள் வலுத்ததால் இறுதிநேரத்தில் பொன்சேகாவுக்கு வெட்டு விழுந்துள்ளது.

தற்காலிக ஏற்பாடாக சட்டம், ஒழுங்கு அமைச்சு தலைமை அமைச்சரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும், அடுத்தகட்ட அமைச்சரவை மாற்றத்தின்போது அந்தப் பதவி வேறொருவருக்கு கைமாற்றப்படலாம் என்றும் அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சராக இருந்த சாகல ரத்நாயக்கவுக்கு இளைஞர் விவகார அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. தெற்கு அபிவிருத்தி விடயதானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

உயர்கல்வி, நெடுஞ்சாலைகள் அமைச்சராக இருந்த லக்ஷமன் கிரியெல்லவிடமிருந்த இவ்விரண்டு விடயதானங்களும் அமைச்சர் கபீர் ஹாசிமுக்கு வழங்கப்பட்டுள்ளன. கபீர் ஹாசிம் வகித்த அரச தொழில்முயற்சி அமைச்சு கிரியெல்லவுக்கு கைமாற்றப்பட்டுள்ளது. கண்டி அபிவிருத்தி எனும் விடயதானம் புதிதாக இணைக்கப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சராக இருந்த ரவி சமரவீர அமைச்சரவைக்கு புதிதாக உள்வாங்கப்பட்டுள்ளார். நிலையான அபிவிருத்தி மற்றும் வனவாழ் உயிரினங்கள் அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினரான காமினி ஜயவிக்கிரம பெரேராவிடமே இந்த இரு அமைச்சுகளும் இருந்தன. தற்போது புத்த சாசன அமைச்சு மாத்திரமே அவரிடமுள்ளது. ரவி சமரவீர ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான செயற்பாட்டாளர்களுள் ஒருவராக இருந்ததுடன், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் பதவியையும் வகித்திருந்தார்.

தொலைத்தொடர்பு, டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராக ஹரின் பெர்னாண்டோ பதவியேற்றுள்ளார். நீதி அமைச்சர் தலதா அத்துகோரள வசமிருந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு ஹரினுக்கு கைமாறியுள்ளது.

தொலைத்தொடர்பு, டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின்கீழ் எந்தவொரு அரச திணைக்களமும் இல்லாததால் ஹரின் பெர்னாண்டோ கடும் அதிருப்தியில் இருந்தார். இந்த நிலையிலேயே புதிய இணைப்பொன்று வழங்கப்பட்டுள்ளது.

இளைஞர் விவகாரம், தெற்கு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக பியசேன கமகே நியமிக்கப்பட்டுள்ளார். இரட்டைக் குடியுரிமையால் நாடாளுமன்ற உறுப்புரிமையை கீதா குமாரசிங்க இழந்ததையடுத்து அந்த இடத்துக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் பியசேன தெரிவுசெய்யப்பட்டார்.

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சராக இருந்த அஜித் பி. பெரேரா சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, போதைப் பொருள் ஒழிப்பு, சமூக மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். போதைப்பொருள் ஒழிப்பு, சமூக மறுசீரமைப்பு ஆகிய இரண்டு விடயதானங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சராக இருந்த ஹர் டி சில்வா அந்த அமைச்சிலேயே இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜே.சி.அலவத்துவல உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களின் அமைச்சுக்களிலும் அடுத்துவரும் வாரங்களில் மாற்றங்கள் இடம் பெறவுள்ளன. விவசாய அமைச்சராக மகிந்த அமரவீர நியமிக்கப்படலாம் என்றும், தற்போதைய விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க திறன் விருத்தி கைத்தொழில் பயிற்சி அமைச்சராக நியமிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ρ-5)

## இரண்டாம்...

ணம் உட்பட மேலும் சில காரணிகளைக் கருத்திற்கொண்டே இரண்டு கட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்தியே மறுசீரமைப்பு இடம்பெற்றது. இரண்டாம் கட்டத்திலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அடிப்படையாகக் கொண்டு, அந்தக் கட்சி உறுப்பினர்களுக்கிடையிலான விடயதானங்களில் மாற்றங்கள் இடம்பெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ρ-5)

## பன்னாட்டு...

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் வெளியிடும் வாராந்த கேள்வி, பதில் ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

கேள்வி: ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகின்றது. அது பற்றிய உங்கள் கருத்தென்ன?

பதில் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 30/1 என்ற பிரேரணை ஐ.நா. மனித உரிமைகள் சபையால் நிறைவேற்றப்பட்டது. அதன் கீழ் இலங்கை அரசுக்கு பல கடப்பாடுகள் இருந்தன. அவற்றை நிறைவேற்ற இரண்டு ஆண்டு காலம் கொடுக்கப்பட்டது. ஆனால் அவற்றை நிறைவேற்றாமலேயே இலங்கை அரசு இருந்து வந்தது.

கடந்த மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பிலான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இலங்கை அரசும் அனுசரணை வழங்கியது. பொறுப்புக்கூறலை உள்ளடக்கிய நிலை மாறுகாலநீதிப் பொறிமுறையை உருவாக்குவதற்கு மேலும் இரண்டு ஆண்டுகள் அவகாசம் அதன்போது வழங்கப்பட்டது.

இலங்கையின் அனுசரணையைப் பெறுவதற்காக மேற்கு நாடுகள் அந்தப் பிரேரணையின் காரத்தை பெருமளவுக்குக் குறைத்தன என்பது உங்களுக்குத் தெரியும். பன்னாட்டுச் சமூகம் தற்போதைய இலங்கை ஆட்சியாளருக்குச் சாதகமானமுறையிலேயே அப்போது இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தன. அப்படியும் அரசு அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டவில்லை.

இப்போது ஒரு வருடம் கடந்துவிட்டது. இந்த ஒரு வருடத்தில் கொடுத்த வாக்குறுதிகளில் எவை நிறைவேற்றப்பட்டன?

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சம்பந்தமான அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கான சட்டவரைவு நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டு இப்போது ஒன்றரை ஆண்டுகள் சென்றுவிட்டன. இன்னும் அது செயற்படத் தொடங்கவில்லை.

பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னும் கைவாங்கப்படவில்லை. அந்தக் கொடூரமான சட்டத்தின் கீழ் கைதான பலர் இன்னமும் தடுப்பில் உள்ளனர். பலர் சம்பந்தமாக வழக்குகள் பதியப்படவில்லை. சிறுபான்மையினருக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன. இனநெருக்கடிக்கான அரசமைப்பு மூலமான தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படும் நிலையும் தற்போது இல்லை என்றே கூறலாம். நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளையடுத்து கூட்டரசு அதனை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவு என்பதே யதார்த்தம்.

இந்த நிலையில் பன்னாட்டுச் சமூகம் என்ன செய்யப்போகின்றது? பன்னாட்டுச் சமூகத்தின் அழுத்தங்களால் மட்டுந்தான் இங்கு ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க பன்னாட்டுச் சமூகம் இனியும் தாமதிக்கக் கூடாது. அமெரிக்காவில் இருந்து வந்த நிஷா பிஸ்வால், ஐ.நா. மீண்டும் இரு ஆண்டுகள் தவணை கொடுப்பதைப்பற்றி எனது ஆட்சேபணைகளை சென்ற வருட ஆரம்பத்தில் தெரிவித்த போது தமிழர்களை ஒரு போதும் அமெரிக்கா கைவிடாது என்றார். இப்பொழுது அவரும் பதவி இழந்துவிட்டார்.

எமது பெரும்பான்மையின அரசு நெருக்குதல் இல்லாவிட்டால் ஒருபோதும் எமது உரிமைகளைத் தரமுன்வராது என்பதே எனது கருத்து. நியாயமான முறையில் போர்க் குற்றங்களை விசாரிக்க அரசு முன்வராது. எந்தளவுக்கு நெருக்குதல்களை பிற அரசுகள் உண்டுபண்ணுவன என்பது நாம் அவர்களுடன் சேர்ந்து பேசி ஏற்படுத்த வேண்டியதொன்று. காலம் கடந்தால் 'ஆறிய கஞ்சி பழங்கஞ்சி' ஆகிவிடும்.

பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றுக்கு இலங்கையை ஐ.நா. பாதுகாப்புச்சபை ஆற்றுப்படுத்த வேண்டும் அல்லது குறித்த ஒரு பணிக்காக நியமிக்கப்படும் தீரப்பு மன்றம் ஒன்று இலங்கையில் நடந்த பன்னாட்டு மனித உரிமைகள் மீறல் பற்றி ஆராய நியமிக்கப்பட வேண்டும் என்று ஒரு கோரிக்கை எம்மிடையே எழுந்துள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்தின் செயலர் நாயகத்தின் கருத்தின் அடிப்படையிலேயே அவ்வாறான ஒரு நடவடிக்கை எடுக்க முடியும் என்று கருது கின்றேன். (ρ-5)

## மக்கள்...

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையைக் கருத்திற்கொண்டே அரச தலைவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அரச தலைவர் செயலகத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை மறுசீரமைப்பின் பின்னர் புதிய அமைச்சர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்த அரச தலைவர் மைத்திரி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களின் மறுசீரமைப்பை எதிர்வரும் இரண்டு வார காலப்பகுதியில் மேற்கொள்ள எதிர்பார்க்கின்றேன் என்றும், அரச கூட்டுத்தாபனம், சட்டவாக்க சபைகளின் நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்க வகையில் மேற்கொள்வதற்குத் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (ρ-5)

# இலங்கை விவகாரம்:

# பாதுகாப்புச் சபையின் நடவடிக்கையை கோரி கையெழுத்துப் போராட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 26

**இலங்கை விவகாரம் தொடர்பில் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கத்தை அளிக்கும் தீர்மானத்தை அல்லது சிறப்பு பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயத்தை உருவாக்கும் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்புச்சபை நிறைவேற்ற வேண்டும். இந்தக் கோரிக்கையையும் வலியுறுத்தி, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதியை வழங்குமாறு பன்னாட்டுச் சமூகத்தை கோரியும், கையழுத்துப் போராட்டம் தமிழர் தாயகமெங்கும் நடத்தப்படவுள்ளது.**

பன்னாட்டுப் பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக்குழு யாழ். மையப் பேருந்து நிலையத்தில் இன்று மாலை 4 மணிக்கு கையெழுத்துப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐ.நா. மனித உரிமைகள் சபையினால் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட 30/01 தீர்மானமானது, பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளைக் கருத்திற்கொள்ளாது இலங்கை அரசின் பொறுப்பின் கீழான ஒரு உள்ளக விசாரணைப் பொறிமுறையை நிறுவி இந்தத் தீர்மானத்தை இலங்கை அரசு தனது சுயவிருப்பில் ஏற்றுக்கொண்டிருந்தது.

நீதியான பொறுப்புக்கூறல் விடயத்தில் அந்தத் தீர்மானத்தில் மிகப் பெரிய குறைபாடுகள் இருந்தமையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. ஆயினும் இலங்கை அரசு அந்தத் தீர்மானத்தில் உத்தியோகபூர்வமாக கைச்சாத்திட்டிருந்தது.

இருப்பினும் இலங்கையில் இடம்பெற்ற பன்னாட்டு மனித உரிமை மீறல்கள், பன்னாட்டு மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபை 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றிய 30/01 தீர்மானத்தில் தம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடப்பாடுகளில் இருந்து இலங்கை அரசு விலகியுள்ளதோடு ஐ.நாவின் தீர்மானத்தையும் உதாசீனம் செய்துள்ளது.

இந்தத் தீர்மானம் உத்தியோகபூர்வமாக கைச்சாத்திடப்பட்ட பின்னரும் அரச தலைவர் மைத்திரி உட்பட அரச உயர்பீடத்தினர் இந்தத் தீர்மானத்தின் கடப்பாடுகளை வெளிப்படையாகவே நிராகரித்திருந்தனர்.

தமிழ் மக்களின் நோக்கில் இத் தீர்மானம் பலவீனமாக இருந்தும்கூட இந்தத் தீர்மானத்தில் கைச்சாத்திட்டமைக்காக அப்போதைய அயலுறவுத்துறை அமைச்சரும் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

இதன் தொடர்ச்சியாக 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் மேலதிகமாக வழங்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் கால அவகாசத்தின் முதல் அரைப்பகுதியில் இலங்கை அரசு பொறுப்புக்கூறல் உட்பட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட எந்தவொரு அம்சத்தையும் நிறைவேற்றவில்லை என்பதுடன் பொறுப்புக் கூறலை ஒருபொழுதும் மேற்கொள்ளப்போவதில்லை என்பதனை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற சித்திரவதைகள், அச்சுறுத்தல்கள் தொடர்பாகத் தொடரும் குற்றச்சாட்டுக்கள், காணிகள் விடுவிக்கப்படாமை, மீள்குடியேற அனுமதிக்கப்படாமை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல், அந்தச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் விடுவிக்கப்படாமை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினருக்கான பொறுப்புக்கூறல்கள் போன்றவற்றில் இலங்கை அரசு தொடர்ச்சியாக உதாசீனம் செய்து வருகின்றது.

அத்தோடு இலங்கையின் வடக்கு கிழக்கில் இராணுவமயமாக்கல் தொடர்வதும் அதன் விளைவாக தொடர்ச்சியான கடுமையான இராணுவக் கண்காணிப்பு நிலவுவதும் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளை சவாலுக்குள்ளாக்குவதோடு எந்தவொரு உள்ளகப் பொறிமுறையையும் அர்த்தமற்றதாக்குகின்றது.

தமிழினத்துக்கு விரோதமான பெரிய இன அழிப்புக்குப் பின்னர் தொடர்ச்சியாகப் பதவிக்கு வந்த அரசுகளும் உள்ளகரீதியான விசாரணைகளைச் செய்வதற்கான அரசியல் விருப்பத்தைக் கூட குறைந்தபட்சமேனும் கொண்டிருக்கவில்லை என்பது தற்போது வெளிப்படையாகியிருக்கிறது. தன்னால் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய அதிகாரம் துரதிர்ஷ்டவசமாக ஐ.நா. மனித உரிமைகள் சபையிடம் இல்லை.

இந்நிலையில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறுவதற்கு உறுதிப்படுத்துவதற்காக அதன்மீது பன்னாட்டுச் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் வகையிலான தெரிவுகள் மற்றும் மாற்றுவழிகளை ஆராயவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் சையிட் அல் ஹூசைனும் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை பன்னாட்டுக் குற்றவியல் விசாரணைப் பொறிமுறைகளில் ஈடுபட்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரமற்ற சபை என்பதாலேயே இலங்கை அரசு தொடர்ச்சியாக அசமந்தப்போக்கைக் கடைப்பிடிக்கின்றது.

எனவே இலங்கை அரசுக்கு 2017 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் கால அவகாசத்தில் எஞ்சியுள்ள ஓராண்டைத் தொடர்ந்தும் வழங்கி காலத்தை வீணடிக்காது இலங்கை விவகாரம் தொடர்பில் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கத்தை அளிக்கும் தீர்மானத்தை அல்லது சிறப்பு பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயத்தை உருவாக்கும் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்புச்சபை நிறைவேற்ற வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் கோருகின்றோம்.

இதனை வலியுறுத்தும் வகையில் பன்னாட்டுப் பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டுக்குழு மேற்படிக் கோரிக்கைகளை வலியுறுத்தி, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதியை வழங்குமாறு பன்னாட்டுச் சமூகத்தை கோரும் கையெழுத்துப் போராட்டத்தைத் தமிழர் தாயகமெங்கும் நடத்தவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வானது இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் மைய நகரப் பேருந்து நிலையத்தின் முன்பாக ஆரம்பமாகவுள்ளது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி தேடும் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (5)




## சுவிஸில் போராட்டம்

கொழும்பு, பெப். 26

தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கமாக அடையாளப்படுத்தி, அந்த இயக்கத்திற்காக உழைத்த தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களை தண்டிக்கும் நோக்கில் சுவிஸ் பொலிஸார் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியன இணைந்து தொடர்ந்துள்ள வழக்கை கண்டித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுவிஸ் பேர்ன் நகரில் அந்த நாட்டு நாடாளுமன்றத்திற்கு முன்னால் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒன்றுதிரண்டு பெரிய ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர். சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்பு குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கடும் குளிரையும் பொருட்படுத்தாது சுவிற்ஸர்லாந்து உட்பட ஐரோப்பிய வாழ் ஏராளமான புலம் பெயர் தமிழர்கள் பங்கேற்றிருந்தனர். (5)




## பழைய கிரனேட்டாக இருக்கவேண்டும்

தியத்தலாவையில் பேருந்தில் வெடித்த கைக்குண்டு மிகப் பழமையானதாக இருக்கக் கூடும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைக்குண்டின் பாதுகாப்பு வளையம் துருப்பிடித்து பலமிழந்து காணப்பட்டிருக்கக் கூடும். அதன் காரணமாகவே கீழே விழுந்தவுடன் கைக்குண்டின் பாதுகாப்பு வளையம் கழன்று கைக்குண்டு வெடித்திருக்க முடியும் என்றும் பொலிஸ் விசாரணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (5)

## மகிந்த மீதான விமர்சனமே தோல்விக்குக் காரணம்

### அமரவீரவின் கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப். 26

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மீதான விமர்சனமே உள்ளூராட்சித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் தோல்விக்குக் காரணம் என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் சுதந்திரக் கட்சி தோல்வியுற்றதற்கு கட்சியில் ஒரு சிலரின் பேச்சுக்களே காரணம். அவர்கள் தேவையற்ற விடயங்களைப் பேசி கட்சியைத் தோல்விப் பாதையில் இட்டுச் சென்றார்கள்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை சிறைச்சாலைக்கு அனுப்ப வேண்டும், அவரின் குடியுரிமையைப் பறிக்க வேண்டும் என்பன போன்ற பேச்சுக்கள் அவ்வாறான சிலவாகும். அதனை நான் கூட விரும்பமாட்டேன்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த மீது எங்களுக்கு தனிப்பட்ட ரீதியில் எந்தப் பகையும் இல்லை. இவ்வாறான நிலையில் சாதாரண பொதுமக்கள் சுதந்திரக் கட்சி அரசியல்வாதிகளின் அநாவசிய பேச்சுக்கள் காரணமாக மகிந்த ராஜபக்சவை பாதுகாக்கும் நோக்கில் அவரின் கட்சிக்கு பெரியளவில் வாக்களித்துள்ளார்கள்.

இந்த வாக்குகள் அரச தலைவர் தேர்தலில் வெற்றி பெற போதுமானதல்ல. நாங்கள் பொது வேட்பாளராக போட்டியிட்டால் மகிந்த தரப்பில் யார் போட்டியிட்டாலும் 45 வீத வாக்குகளைக் கொண்டு அரச தலைவர் தேர்தலில் வெற்றி பெறவே முடியாது - என்றார். (5)

# ஜெனிவாவில் இலங்கை நெருக்கடியை எதிர்கொள்ளும்

## மகிந்த அணி நம்பிக்கை

கொழும்பு, பெப். 26

2015ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் அமெரிக்கா முன்வைத்த தீர்மானத்துக்கு அப்போதைய அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர அரசிடம் எவ்வித அனுமதியும் பெற்றுக் கொள்ளாது இணை அனுசரணை வழங்கியதன் விளைவினை இன்று ஆரம்பமாக உள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 37ஆவது கூட்டத்தொடரில் இலங்கை எதிர்கொள்ளும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.



இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹுசைன் விடுத்துள்ள அதிருப்தி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது: மனித உரிமைகள் ஆணையாளர் கடந்த மூன்று ஆண்டுகளாக இலங்கைக்கு எதிராகவே தனது பெரிய அழுத்தங்கள் மற்றும் அதிருப்தியை வெளிப்படுத்தி வருவது ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த விடயத்தில் கூட்டு அரசே முழுப் பொறுப்பையும் ஏற்று இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை பொய்யென்று ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 37ஆவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாக உள்ளது. உலகளாவிய ரீதியில் இடம்பெறும் 37ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள 4 பரிந்துரைகள் மிக முக்கியமானதாக ஐ.நா.வை பிரதிநிதித் துவப்படுத்தும் நாடுகளின் பார்வையில் காணப்படுகின்றன.

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப் போரின்போது இலங்கை இராணுவத்தினர் போர்க்குற்றங்கள் மேற்கொண்டார்கள் என்று பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இந்தக் குற்றங்கள் உண்மை என்று நிரூபிக்கும் முகமாக முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர அரசின் அனுமதியின்றி தன்னிச்சையாக தமது அனுசரணையை வழங்கியதன் தாக்கத்தை ஐ.நா. சபையில் இலங்கை எதிர்கொண்டு வரு கின்றது. இன்று இடம் பெறும் கூட்டத்தொடர் இலங்கைக்கு பெரிய சவால்களை உருவாக்குவதாகக் காணப்படுகின்றது - என்றார். (5)

# சட்டம் ஒழுங்கு சரத்திடம் கையளிக்கப்படலாம்

## இப்படிச் சொல்கிறார் ரஞ்சன் ராமநாயக்க

கொழும்பு, பெப். 26

அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்குச் சட்டம் ஒழுங்கு அமைச்சுக் கையளிக்கப்படலாம் என்று பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் அரச தலைவர் செயலக வளாகத்தில் செய்தியாளர்களிடத்தில் கருத்துக்களை வெளியிட்டபோது மேற்கண்டவாறு கூறினார்.

'அமைச்சர் சரத் பொன்சேகாவுக்குச் சட்டம் ஒழுங்கு அமைச்சு வழங்கப்படுவதாக இருந்த போதும் அது தற்போது தலைமை அமைச்சரின் கீழ் அல்லவா கொண்டு வரப்பட்டிருக்கின்றது இதன் பின்னணி என்ன?' என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது பதிலளித்த பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சட்டம் ஒழுங்கு அமைச்சினை அமைச்சர் சரத் பொன்சேகாவிடம் கையளிக்கவேண்டும் என்றுதான் விரும்பினோம். கடந்த நாடாளுமன்ற அமர்வின் போதும் கூட நான் உள்ளிட்ட உறுப்பினர்கள் அந்தக் கோரிக்கையைத் தலைவரிடத்தில் முன்வைப்பதற்கான கையொப்பங்களைத் திரட்டுவதற்கு திட்டமிட்டோம்.

அந்தச் சமயத்தில் அமைச்சர்களான கயந்த கருணாதிலக்க, சஜித் பிரேமதாச போன்றவர்கள் என்னையும் ஏனைய உறுப்பினர்களையும் தற்போது இருக்கும் அரசியல் சூழலில் தலைவருக்கு அழுத்தங்களை வழங்க வேண்டாம் என்று கோரினார்கள்.

அதன் காரணமாகவே நாம் கையொப்பம் பெற்றுத் தலைமைக்கு வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதைக் கைவிட்டிருந்தோம். எனினும் தற்போது அமைச்சர் சரத் பொன்சேகா வெளிநாட்டில் இருப்பதால் தலைமை அமைச்சர் அதனைப் பெற்றுக் கொண்டு பின்னர் மாற்றி வழங்குவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. மேலும் நாங்கள் அந்த அமைச்சை அவரிடத்திலேயே வழங்கவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம் - என்றார். (5.31)

# மகிந்த வீட்டில் விருந்து

கொழும்பு, பெப். 26

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் வீட்டில் நேற்று இரவு விருந்துபசார நிகழ்வு நடைபெற்றுள்ளது.

கொழும்பு விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள மகிந்தவின் வீட்டில் நடைபெற்ற விருந்துபசாரத்தில் ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மகிந்தவின் உறவினர்கள் கலந்து கொண்டனர். (5)

# நகைச்சுவை நாடகம் அரங்கேறியுள்ளது

## அமைச்சரவை மாற்றம் குறித்து பிரதி அமைச்சர் வசந்த கருத்து

கொழும்பு, பெப். 26

அமைச்சரவை மாற்றத்தை நகைச்சுவை நாடகம் என்று விமர்சித்துள்ள அயலுறவுத் துறை பிரதி அமைச்சர் வசந்த சேனாநாயக்க, மக்கள் எதிர்பார்த்த மாற்றம் இதுவல்ல என்றும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

கூட்டு அரசின் அமைச்சரவை மாற்றம் அரச தலைவர் செயலகத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நகைச்சுவை நாடகமே அரங்கேறியுள்ளது. இரண்டாம் பாகம் அடுத்துவரும் நாள்களில் காட்சிப்படுத்தப்படலாம். மக்கள் மாற்றத்தையே எதிர்பார்த்தனர். ஆனால், நகைச்சுவை நாடகமே அரங்கேற்றப்பட்டுள்ளது. மக்கள் அழுவார்களா, சிரிப்பார்களா எனத் தெரியவில்லை. ஆனால், மக்களை ஏமாற்ற முடியாது. இதை விட மாற்றமொன்று அவசியம் - என்றார்.



அதேவேளை, இது சிறியளவான மாற்றம் என்று தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள ஹர்ச டி சில்வா தெரிவித்தார். (5.31)

# பகுதியளவிலான மாற்றமே நடந்தது

## அமைச்சர் கயந்த

கொழும்பு, பெப். 26

கூட்டு அரசின் அமைச்சரவை மறுசீரமைப்பின் ஒரு பகுதியே இன்று இடம்பெற்றதாகவும் மற்றும் சில மாற்றங்கள் எதிர்வரும் தினங்களில் இடம்பெறவுள்ளதாகவும் அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

அரச தலைவர் செயலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற அமைச்சரவை மறுசீரமைப்பு நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

இப்போது ஒரு பகுதி அமைச்சரவை மாற்றமே நடைபெற்றுள்ளது. இன்றைய மாற்றங்கள் பெரும்பாலும் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களின் அமைச்சுக்களிலேயே இடம்பெற்றுள்ளன. எதிர்வரும் தினங்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களிடையே மாற்றம் இடம்பெறும். அரச தலைவரும், தலைமை அமைச்சரும் இணைந்து இந்த மறுசீரமைப்பை முன்னெடுக்கவுள்ளனர் - என்றார். (5)

# மறைக்கப்பட்ட நாமலின் லண்டன் பயணம்

கொழும்பு, பெப். 26

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச லண்டனுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள நிலையில், அவர் லண்டனில் உள்ள புலம்பெயர் தமிழர்களுக்குப் பயந்து தனது பயண விவரங்களை இரகசியமாகப் பேணி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுநலவாய மாநாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தொடரில் உரையாற்றுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச லண்டன் சென்றுள்ளார். தனது பயணம் தொடர்பில் அவர் இரகசியம் காப்பதாகவும், தனது நடவடிக்கைகள் அனைத்தையும் சமூக வலைத்தளங்கள் ஊடாக பதிவிடும் நாமல் இந்தப் பயணம் தொடர்பில் இரகசியம் காப்பது புலம்பெயர் தமிழ் மக்களுக்குப் பயந்துதான் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர் லண்டன் சென்றிருக்கும் தகவல் புலம்பெயர் தமிழர்களுக்கு தெரிந்தால் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது. இவருக்கு எதிராக புலம்பெயர் தமிழர்கள் போராட்டங்களை நடத்தலாம் என்று கருதியே அவரது பயணம் தொடர்பில் இரகசியம் பேணப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (5)

# முட்டாளாக்குகிறது அரசு

## நாமல் சாடல்

கொழும்பு, பெப். 26



கூட்டு அரசில் இரண்டாவது முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ள அமைச்சரவை மாற்றமானது மக்களை முட்டாளாக்கும் நடவடிக்கை என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ கீச்சகப் பக்கத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அதில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. அமைச்சரவை மாற்றம் என்பது ஒரு முழுமையான கேலிக்கூத்தான விடயமாகும். இது மக்களை முட்டாளாக்கும் நடவடிக்கை. அத்துடன் சில அமைச்சர்களை திருப்பதிப்படுத்தும் முயற்சியாகும். இந்நிலையில், அமைச்சரவையை மாற்றுவதன் மூலம் எதனையும் மாற்ற முடியாது என்று பதிவிட்டுள்ளார். (5)

# விஜயதாசவை சந்தித்த ரணில்

கொழும்பு, பெப். 26

முன்னாள் அமைச்சர் விஜயதாச ராஜபக்சவை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க திடீர் என்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கூட்டு அரசின் நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சராக இருந்த விஜயதாச ராஜபக்சவுக்கு எதிராக அரசினுள் வலுப்பெற்ற எதிர்ப்புக் காரணமாக அமைச்சுப் பதவியில் இருந்து விலக்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் கடந்த பல மாதங்களாக அவரை எந்தவொரு அரசியல்வாதியும் சந்திக்கவே விரும்பாத நிலையில் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினராகவே செயற்பட்டுக் கொண்டிருந்தார்.

இந்த நிலையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க திடீரென்று விஜயதாச ராஜபக்சவைச் சந்தித்து உரையாடியுள்ளார். (5)

## பிரிகேடியர் பிரியங்கவின் காலம் முடிந்து விட்டதாம்

### அதனாலேயே அவர் இலங்கை வந்தார் என்கிறார் இராணுவத் தளபதி



கொழும்பு, பெப். 26

பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றிய பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவின் பதவிக்காலம் முடிந்து விட்டதாக இராணுவத் தளபதி லெப். ஜென்ரல் மகேஸ்சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் இராணுவத் தளபதி என்ற வகையில் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது எனது கடமை.

இன்னொரு நாட்டின் சட்டத்தின் கீழ், தமது கடமைகளை அவர் நிறைவேற்றும் போது, அவரது பாதுகாப்பை நான் உறுதிப்படுத்துவது சாத்தியமில்லை.

இந்த விடயங்கள் குறித்துப் பேசவே அவரை அழைத்தேன். நான் கொழும்பு திரும்பியதும் அவரைச் சந்தித்து நான் பேசுவேன். அவர் இலங்கைக்குத் திருப்பி அழைக்கப்படவில்லை. ஏனென்றால் அவரது பதவிக்காலம் முடிந்து விட்டது. அவரது பாதுகாப்பை எப்படி உறுதிப்படுத்துவது என்று நாங்கள் ஆராய்ந்து வருகிறோம் - என்றார். (5)

*12 ஆண்டுகளின் பின்னர்*

## தமிழ் அரசியல் கைதி விடுதலை

கொழும்பு, பெப். 26

பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கட்டிருந்த வாசுகோபால் தஜரூபன் என்ற அரசியல் கைதி நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு எதிராக நீர்கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு அண்மையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேஜர் முத்தலிப் மற்றும் ஜெனரல் பாரமி குலதுங்க இருவரையும் கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியதாக மூன்று வழக்குகள் கொழும்பு மேல் நீதிமன்றிலும், ரி56 தன்னியக்க ஆயுதத்தை உடைமையில் வைத்திருந்ததாக நீர்கொழும்புமேல்நீதிமன்றில் ஒரு வழக்கும், சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டிருந்து.

அரச தரப்பினால் விசாரணைக்கு அழைக்கப்பட்ட சாட்சிகளை எதிரியின் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி கே.வி தவராசா குறுக்கு விசாரணை செய்தார். அரச சாட்சியங்களின் பல முரண்பாடுகளை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எதிரியை விடுதலை செய்துள்ளார்.

சட்டமா அதிபரால் தாக்கல் செய்த நான்கு வழக்குகளிலிருந்தும் 12 வருடங்களின் பின்னர் விடுதலை யான வாசுகோபால் தஜரூபனை உறவினர்நீதிமன்றிலிருந்து அழைத்துச்சென்றுள்ளனர்.

கடந்த 2005ஆம் ஆண்டு ஜூன் மாதம் மேஜர் முத்தலிப், ஜெனரல் பாரமி குலதுங்க இருவரையும் சதித் திட்டம் தீட்டி கொலை செய்வதற்கு பயன்படுத்துவதற்காக ரி56 தன்னியக்க ஆயுதத்தைஉடைமையில்வைத்திருந்தார் என்று 2006 ஆம் ஆண்டு பயங்கரவாத தடுப்புப் பிரிவுப் பொலிஸாரினால் இவர் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## ஒவ்வொருவர் தலையிலும் ரூ. 4 லட்சம் கடன் சுமை

*கொழும்பு, பெப். 26*

*இலங்கையர்கள் ஒவ்வொருவரின் தலையிலும் உள்ள கடன் சுமை ஒரே ஆண்டில் 45 ஆயிரம் ரூபாவினால் அதிகரித்துள்ளது என்று கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.*

*2016ஆம் ஆண்டு இறுதியிலேயே இலங்கையர்களின் கடன் சுமை தலா 4 இலட்சத்து 17 ஆயிரத்து 913 ரூபாவாக அதிகரித்துள்ளது.*

*இது, 2015ஆம் ஆண்டில், 3 இலட்சத்து 73 ஆயிரத்து 462 ரூபாவாக இருந்தது. ஒரே ஆண்டில், இந்த தலா கடன் சுமை, 44 ஆயிரத்து 451 ரூபாவினால் (12 வீதம்) அதிகரித்துள்ளது.*

*2005ஆம் ஆண்டில், இலங்கையர்கள் ஒவ்வொருவரினதும் தலா கடன் சுமை ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 908 ரூபாவாகவே இருந்தது. 10 வருடங்களில் அது மூன்று மடங்குக்கும் மேலாக அதிகரித்துள்ளது என்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.* (5)

### தேர்தல் வெற்றிச் சூட்டோடு

# மாகாணசபைத் தேர்தலுக்கு தயாராகும் மகிந்த படை

கொழும்பு, பெப். 26

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் கூட்டு எதிர்க் கட்சி உள்பட சகல அரசியல் சக்திகளையும் இணைத்து தாமரை மலர் மொட்டுச் சின்னத்தில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி போட்டியிடும். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல்களை எப்படி எதிர்கொள்வது என்று கலந்துரையாடி வருகின்றோம்.

'அரசைச் சுருட்டி வீட்டுக்கு அனுப்புவோம்' எனும் கருப்பொருளில் இந்த வேலைத் திட்டம் அமையவுள்ளது.

இது தொடர்பில் தேசிய ரீதியில்முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டத்தின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அதிக சபைகளை நாங்கள் கைப்பற்றியுள்ளோம். மாகாண சபைத் தேர்தலில் நிச்சயம் எமக்கு வெற்றிகிட்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிராது. இந்த விடயத்தில் நாங்கள் மிகத் தெளிவான நோக்குடன் செயற்படவுள்ளோம். அதற்கேற்றதாகவே எமது எதிர்காலத் திட்டங்கள் இனிச் செயற்படுத்தப்படும் - என்றார்.



(4)

*உனா மக்கோலியின்*

## அனுதாப கையேட்டில் மைத்திரி கையெழுத்து

கொழும்பு, பெப். 26

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரிதிநிதியும், ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதிநிதியு மான உனா மக்கோலியின் மறைவையிட்டு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அனுதாபக் குறிப்பொன்றை பதிவு செய்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகத்துக்கு நேற்றுச் சென்ற அரச தலைவர் அங்கு வைக்கப்பட்டிருக்கும் நினைவுப் புத்தகத்தில் அனுதாபச் செய்தியொன்றை பதிவு செய்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் தொலைநோக்கு குறித்து சிறந்த தெளிவுடன் இலங்கையில் செயற்பட்ட திறமைவாய்ந்த துறைசார் அதிகாரியான ஊனா மக்கோலியின் மறைவுக்கு அனுதாபங்களைத் தெரிவித்தார்.

அவரின் மறைவு தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உனா மக்கோலியின் தாயார் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களுக்கும், ஐ.நா. அமைப்பின் இலங்கை பணிக்குழாமினருக்கும் அரச தலைவர் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தார்.

இந்த நினைவுப் புத்தகம் நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் மார்ச் மாதம் 2ஆம் திகதி வரை, காலை ஒன்பது மணி முதல் மாலை ஐந்து மணிவரை ஐ.நா. அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும். (5)

# அரசியல் பணக்காரர்: மகிந்தவே முதலிடம்

### முதல் பத்து இடங்களுக்குள் கருணா, தொண்டமான்

கொழும்பு, பெப். 26

இலங்கை அரசியல்வாதிகளில் பணக்காரர்களான முதல் பத்துப் பேரின் பெயர் வரிசையை அமெரிக்காவின் புகழ் பெற்ற வர்த்தக இதழை மேற்கோள்காட்டி இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச முதலிடத்தில் உள்ளார். அவரது சொத்து மதிப்பு 18 பில்லியன் அமெரிக்க டொலர்.

இரண்டாமிடத்தில் இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், அமைச்சருமான அர்ஜூன ரணதுங்க உள்ளார். அவரது சொத்து மதிப்பு 6 கோடி 80 லட்சம் டொலர். தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு மூன்றாவது இடம் கிடைத்திருக்கின்றது. அவரது சொத்து மதிப்பு ஒரு கோடி 40 லட்சம் டொலர்.

நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் 19 லட்சம் டொலர்களுடன் நான்காம் இடத்திலும், முன்னாள் பிரதி அமைச்சரான கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் 17 லட்சம் டொலர்களுடன் ஐந்தாம் இடத்தில் உள்ளார்.

அமைச்சர் பௌசி 14 லட்சம் டொலருடன் ஆறாம் இடத்தில் உள்ளார்.

முன்னாள் அரச தலைவர் சந்திரிகா அம்மையாருக்கு ஏழாமிடமே கிடைத்துள்ளது. அவரது சொத்து மதிப்பும் 14 லட்சம் அமெரிக்க டொலர்தான்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசநாயக்க 13 லட்சம் டொலருடன் எட்டாவது இடத்தில் உள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா 9 லட்சம் டொலருடன் ஒன்பதாம் இடத்திலும் உள்ளார்.

தற்போதைய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, 8 லட்சத்து 60 ஆயிரம் டொலருடன் பத்தாவது இடத்தில் உள்ளார். (4)

# அமெ. மருத்துவக் கப்பல் இலங்கைக்கு வரவுள்ளது

கொழும்பு, பெப். 26

அமெரிக்க கடற்படையின் பெரிய மருத்துவக் கப்பலான யுஎஸ்என்எஸ் மேர்சி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் மிகப் பெரிய மனிதாபிமான மற்றும் இடர் மீட்பு தயார் நிலை நடவடிக்கையை அமெரிக்கா இந்த ஆண்டும் முன்னெடுக்கவுள்ளது.

பசுபிக் ஒத்துழைப்பு ஒத்திகை என்ற பெயரிலான அமெரிக்காவின் இந்த நடவடிக்கையின் கீழ் கடந்த ஆண்டு யுஎஸ்எஸ் போல் ரிவர் என்ற கப்பலில் வந்த அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் கடற்படையினர் அம்பாந்தோட்டை துறைமுகத் தில் தரித்திருந்து மனிதாபிமான உதவிப் பணிகளை மேற்கொண்டனர்.



இந்த ஆண்டு யுஎஸ்எஎன் எஸ் மேர்சி என்ற மருத்துவக் கப்பல் இலங்கைக்கு வரவுள்ளது. இந்தக் கப்பல் இந்தோனேசியா, மலேசியா ஆகிய நாடுகளுக்கும் பயணம் செய்யவுள்ளது.

இந்த கப்பலில் அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த 800 கடற்படையினர் மற்றும் மருத்துவ அதிகாரிகள் இலங்கை வரவுள்ளனர். (5)

## VACANCY

Urgently needs a teacher for Physics in English Medium for the Advanced Level classes. Female is preferred.

Please come in person with the Curriculum Vitea during school hours.

(C 5989/15/17)

**The Principal, Uduvil Girls' College.**



**திறமையிருப்பின் எம்முடன் இணையலாம். முகாமைத்துவ துறையினை சிறந்த துறையென தெரிவு செய்யும் உங்களுக்கு எம்மிடமிருந்து நிரந்தர பதவி வெற்றிடங்கள் இதோ!**

- விநியோகஸ்தர்
- துணை முகாமையாளர்
- மேற்பார்வையாளர்
- முகாமையாளர்
- கணக்காளர்
- அலுவலக உதவியாளர்

**கிளைகள் - வவுனியா, யாழ்ப்பாணம்**

பயிற்சி அனுபவம் அவசியமற்றது. வயதெல்லை 18 - 30, சா/தரம் போதுமானது. பயிற்சியின் போது 15000 -18000 பின் 45000, +EPF,-ETF பெறுவதுடன் எதிர்காலத்தில் வெளிநாடுகளில் பணிபுரியும் வாய்ப்புக்களையும் பெற முடியும்.

**077 802 1371, 076 886 3253**


## பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்
## பதவி வெற்றிடம்

பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் ஆளணியில் அங்கீகரிக்கப்பட்ட கீழ்வரும் பதவிக்கு விண்ணப்பம் கோரப் படுகின்றது. தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 12.03.2018 ஆம் திகதிக்கு முன்னதாகத் **தலைவர், பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், வாடியடி, பூநகரி** என்னும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். தெளிவாகப் பூரணப்படுத்திய தங்கள் சுயவிவரம் அடங்கிய விண்ணப்பத்தினை தபாலுறையிலிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். கூட்டுறவுச் சங்கத்தில் சேவை அனுபவம் உள்ளவர்களுக்கும் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குள் வசிப்பவருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**பதவி - 01 சாரதி**

**பதவிச் சம்பளக் குறியீட்டு இலக்கம்** 312 / 15
**சம்பள அளவுத்திட்டம்** -9450-75x10-80x10 -11000 (66/2006 இன்படி)

**வெற்றிடம் - 01**

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

5ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும், கார் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஒரு (01) வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

**தலைவர்,**
**கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்,**
**வாடியடி,**
**பூநகரி.**

(CS/14215)(11,17)

உ
சிவமயம்

"அமெரிக்க ஹவாய் ஆதீன முதல்வர்"

**சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளின்**

அளவெட்டி வருகை

**காலம்**

27.02.2018 செவ்வாய்க்கிழமை
காலை 8.30 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை

**இடம்**

ஸ்ரீ பசுபதீஸ்வரர் திருக்கோயில்
(ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமம், அளவெட்டி.)
அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோயில்

அன்புடையீர் வணக்கம்,

அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரம ஸ்தாபகரும் அமெரிக்காவிலுள்ள சர்வதேச பெருமைமிக்க ஹவாய் சைவ ஆதீன ஸ்தாபகருமாகிய குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடரும் தற்போதைய ஆதீன முதல்வருமாகிய சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் உலகின் பல பாகங்களையும் சேர்ந்த 65 அடியவர்கள் சகிதம் ஆன்மீக யாத்திரையாக எம் மண்ணுக்கு வருகை தந்துள்ளார். சுவாமிகளும் அடியவர்களும் 27.02.2018 (செவ்வாய்க்கிழமை) காலை 8.30 மணிக்கு பசுபதீஸ்வரர் திருக்கோயில் பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வார்கள். பின்னர் 10.00 மணிக்கு அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோயிலிலும் பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வார்கள். அத்தருணம் அனைவரும் இந்த பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வதோடு மதியம் நடைபெறும் அன்னதானத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இங்ஙனம்**
நிர்வாகம்,
பசுபதீஸ்வரர் திருக்கோயில்,
ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமம்.


SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் ▶ 772
சீட்டிழுப்பு திகதி ▶ 2018.02.24 சனிக்கிழமை

W 15 32 57 69

அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 56,363,492/-

தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

2018.02.28ம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


## 13ஆம் ஆண்டு நினைவலைகள்



**திருமதி தேவநாயகி கருணைவேல்**

தோற்றம் 17.05.1954 — மறைவு 19.02.2005

திதி: பூர்வபக்க ஏகாதசி

வருடங்கள் பதின்மூன்றாகி மாண்டீர் என்று
சொல்ல மனசு மறுக்கிறது
யோசிக்க யோசிக்க நிமிடங்கள்
- கடந்தாலும் உம்
சிரித்த முகத்தோற்றம்
- எம் நெஞ்சத்தைக் கடக்காது

அருண் சோமில்,
துவாளி வீதி,
இமையாணன், உடுப்பிட்டி.

கணவர் - கருணைவேல்
பிள்ளைகள் - அரும்செல்வி, ஷந்திரிகா, ஜனகன்

## மரண அறிவித்தல்கள்

தோற்றம் 06 06 1934 — மறைவு 25 02. 2018



**திருமதி சரஸ்வதி குமாரசாமி**

பருத்தித்துறை, தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் 6ஆம் யூனிட், தருமபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி குமாரசாமி நேற்று (25.02.2018) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் குமாரசாமியின் அன்பு மனைவியும் கலைவாணி (நோர்வே), யசோதா (இலங்கை வங்கி, முள்ளியவளை), மனோகரன் (பொதுசந்தை, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரவி (நோர்வே), யுசேப்பியஸ், ஜெயந்தி ஆகியோரின் பாசமிகு மாமியும் கபிலன் (நோர்வே), அபிமன் (நோர்வே), டிலக்சி, தர்ஷிகா (மாணவி - மு/வித்தியானந்தா கல்லூரி), வினுசன் (மாணவன் - மு/வித்தியானந்தா கல்லூரி), மதுசன் (கிளி/ தருமபுரம் மத்திய கல்லூரி), தமிழினி (கிளி/ தருமபுரம் மத்திய கல்லூரி), டேனுயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.02.2018) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் தருமபுரம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 611 1382/ 077 324 3026 — தகவல்: குடும்பத்தினர்.



**திருமதி சொர்ணலட்சுமி ஞானேஸ்வரன்**

பூநகரி, செட்டியகுறிச்சியைப் பிறப்பிடமாகவும் 50/40, சுவாமியார் வீதி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சொர்ணலட்சுமி ஞானேஸ்வரன் நேற்று (25.02.2018) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கவாசகர் - சிவசக்தி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற ஞானேஸ்வரனின் மனைவியும் சர்மிளா, அமிர்தராஜன் (பணியாளர் - இறைவரிப்பகுதி, மாநகரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவஅன்பு (சிவலிங்கம் மோட்டோர்ஸ்), மணிமேகலை ஆகியோரின் அன்பு மாமியும் கிருஷ்ணராஜ், சிவதுர்க்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தனலட்சுமியின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சர்வேஸ்வரன் மற்றும் சவுந்தர லெட்சுமி, சிறீநாதன் ஆகியோரின் மைத்துனியும் நல்லைநாதன், அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2018) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 319 7576 (CS 14255/15/17) — தகவல்: குடும்பத்தினர்.


**வேலையாள் தேவை**

திருநெல்வேலியில் அமைந்துள்ள போட்டோ கொப்பி கடைக்கு அனுபவமுள்ள மும்மொழியும் தெரிந்த பெண் வேலையாள் தேவை.

**076 577 8980** (CS/14252)(06.17)

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் (50 பேர்ச்சஸ்) 5 பரப்புக் காணியில் 8 அறைகள், 2 ஹோல், 5 குளியலறைகள் உடைய வீடு விற்பனைக்கு.

**077 760 1224**

**வேலை வாய்ப்பு**

**பைவர் கிளாஸ் அன்ட் பிளாஸ்ரிக்**
வேலை தெரிந்தவர்கள்
பைவர் வேலை பழக விரும்புவர்கள்
வேலைத் தள உதவியாளர்
ஆண், பெண் விரும்பத்தக்கது
ETF,EPF உண்டு.

**108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்,**
T.P: 077 592 5088/021 222 8680

E.S Printers
மக் பிரிண்ட் (MUG) 450/=
# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472

உதயன்
advt@uthayan.com,
021 493 1111
விளம்பர தொடர்புகளுக்கு

### தெற்கிலும், புலம்பெயர்நாடுகளிலும்

# பனம் வெல்லத்துக்கு பெரும் மவுசு

### பதநீர் உற்பத்தியில் சங்கங்கள்

யாழ்ப்பாணம். பெப். 26

**யாழ்ப்பாணத்து பனம் வெல்லத்துக்கு தென்பகுதியிலும், புலம் பெயர் நாடுகளிலும் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது எனவே பதநீர் உற்பத்தியை ஊக்குவித்து பனம் வெல்ல உற்பத்தியை ஆரம்பிக்கும் நடவடிக்கையை பனை அபிவிருத்தி சபை ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பனை மரங்களில் பருவ கால கள் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் போத்தலில் கள் அடைக்கும் பணிகளையும், பதநீர் உற்பத்தியை ஊக்குவித்து பனம் வெல்ல உற்பத்தியையும் ஆரம்பிக்கவுள்ளனர். போத்தலில் கள் அடைக்கும் பணிகள் மற்றும் வெல்ல உற்பத்தி என்பன மார்ச் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. குடாநாட்டுப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் போத்தல் கள் மற்றும் பனம் வெல்லம் ஆகியவற்றை தென்பகுதி மக்கள் உட்பட புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களும் கொள்வனவு செய்வதில் ஆர்வம்காட்டுவதால்சங்கங்கள்இம்முறை அதிக அளவில் உற்பத்தியை மேற்கொள்ளலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக தென்மராட்சி பிரதேச பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்பு கொண்ட போது, 'போத்தலில் அடைக்கப்படும் கள்ளுக்கு தென்பகுதியில் கிராக்கி காணப்படுகிறது. போத்தல் கள் அதிக அளவில் உற்பத்தி செய்தால் அங்கத்தவர்களும் சங்கங்களும் அதிக பயன் பெறமுடியும். ஆனால் உற்பத்தி செய்யப்படும் போத்தல் கள்ளுக்கு அரசால் விதிக்கப்படும் உற்பத்தி மற்றும் விற்பனை வரி அதிகம் என்பதால் கடந்த வருடங்களைப்போன்று மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உற்பத்தி செய்ய உத்தேசித்துள்ளோம். உற்பத்தி செய்யப்படும் போத்தல் கள்ளின் மொத்த விவரம் வழங்கப்பட்டு அனைத்துக்கும் வரி செலுத்த வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களால் உற்பத்தி செய்யப்பட்டவற்றில் ஒரு தொகுதி விற்பனை செய்யாவிடின் அதன் கொள்வனவுச் செலவு, போத்தலில் அடைக்கும் செலவு, வரி போன்றவற்றால் சங்கம் நட்டமடைய நேரிடும் என்ற அச்சம் சங்கங்களிடையே காணப்படுகிறது. எனவே மட்டுப்படுத்தப்பட்ட அளவு போத்தல் கள்ளை உற்பத்தி செய்யவுள்ளோம். பனை வெல்லம் மற்றும் பனங் கற்காரம் ஆகியவற்றுக்குத் தென்பகுதி மற்றும் புலம்பெயர் நாடுகளில் பெரும் கிராக்கி காணப்படுவதால் அங்கத்தவர்கள் மூலம் பதநீர் உற்பத்தியை அதிகரித்து வெல்ல உற்பத்தியில் ஈடுபடவுள்ளோம்' எனத் தெரிவித்தனர். (எ-21-9-17)

## தேசிய இளைஞர் மாநாடு

யாழ்ப்பாணம்.பெப்.26

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வடக்கு, வடமத்திய, கிழக்கு, மத்திய, மேல் மற்றும் தென் மாகாணங்களின் கல்வி அமைச்சுக்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றம் இணைந்து நடத்தும், "நிலைபேண்தகு சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கான கருத்தாடல்" என்ற தலைப்பின் கீழ் இரண்டாவது தேசிய இளைஞர் மாநாடு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 20, 21ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபம் மற்றும், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கட்புல அரங்க கலைகள் பீட மண்டபம் ஆகிய இடங்களில் முறையே நடைபெறவுள்ளன.

நிகழ்வில் இலங்கையின் பல்வேறு பகுதிகளையும், அனைத்து இனக்குழுக்களையும் சேர்ந்த சுமார் 250 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்குபற்றவுள்ளனர்.

நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளில் இளைஞர்களை உள்வாங்குதல், இளைஞர்களும் அகிம்சையும், இளைஞர்களும் சமூக மாற்றமும், இளைஞர்களை உள்வாங்கி சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேசியக் கொள்கைமற்றும் நிலைமாறுகால நீதிச் செயன்முறை போன்ற பல கருப்பொருள்களில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதன்போது சமாதானம் தொடர்பான கட்டுரைகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் 250 சொற்களில் குறுகிய சுருக்கத்தை NYS2018ShLDJF.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்க முடியும் எனவும் மேலதிக தகவகளுக்கு http://www.ldjf.org/youthsummit or facebook/sdjfia என்ற இணையத்தளத்தைப் பார்வையிட முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-46)

## மாந்தை கிழக்கில் கடும் வறட்சி பல ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு

### விவசாயிகள் கவலை





முல்லைத்தீவு,பெப்.26

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் கடுமையான வறட்சி காரணமாக 298 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளதுடன் 98 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, நட்டாங்கண்டல், எருவில் உழுவனரி ஆகிய குளங்களில் நீர் வற்றியதால் அவற்றை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட கால போக நெற்செய்கைகள் அழிவடைந்துள்ளன.

இது தொடர்பில் பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தின் அலுவலர் தெரிவிக்கையில், 'பாண்டியன் குளம் கமநலசேவை நிலையத்தின் கீழ் உள்ள சிறிய மற்றும் நடுத்தரக் குளங்களின் கீழான மானாவாரி நிலங்களில் காலபோக நெற்செய்கைகளில் பெருமளவு ஏக்கர் அழிவடைந்துள்ளன. இதில் நட்டாங்கண்டல் குளத்தின் கீழ் 119 ஏக்கர் நெற்செய்கையும், எருவில் குளத்தின் கீழ் 94 ஏக்கர் நெற்செய்கையும் மற்றும் உழுவனரி குளத்தின் கீழ் 85.5 ஏக்கர் நெற்செய்கையுமாக மொத்தம் 298.5 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளதுடன், 98 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்' என்று தெரிவித்தார். (எ -80)

## அதிவேக சாரத்தியம் இருவருக்கு தண்டம்

கிளிநொச்சி, பெப். 26

அதிவேகமாக வாகனம் செலுத்திய சாரதிகள் இருவருக்கு 6ஆயிரம் ரூபா தண்டத்துடன் சாரதி அனுமதிப்பத்திரத்தையும் இரு வாரங்களுக்கு நிறுத்தி வைத்துத் தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.

கிளிநொச்சி மற்றும் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அதிவேகமாக வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் சாரதிகள் இருவர் பொலிஸாரால் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்களான சாரதிகள் இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 3ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று. (எ-6)

## கொடுப்பனவு அட்டை மீளாய்வு நாளை

தென்மராட்சி, பெப். 26

தென்மராட்சி பிரதேச சமூக சேவைகள் அலகினால், கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக பொதுசன மாதாந்த உதவித் தொகை மற்றும் முதியோர்களுக்கான 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறுவோரின் கொடுப்பனவு அட்டை மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை அல்லாரை கிராம அலுவலர் பிரிவில் குறித்த கொடுப்பனவு பெறுபவர்களின் கொடுப்பனவு அட்டைகள் மீளாய்வு செய்யப்படும் எனவும் கொடுப்பனவு பெறும் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் தவறாது தமது கொடுப்பனவு அட்டையை சமர்ப்பித்து மீளாய்வு செய்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. கொடுப்பனவு அட்டையைச் சமர்ப்பிக்காதவர்களின் கொடுப்பனவு நிறுத்தப்படுமென பிரிவு கிராம அலுவலர் மேலும் அறிவித்துள்ளார். (எ-9)

## உனா மக்கோலியின் மறைவுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி இரங்கல்

யாழ்ப்பாணம்,பெப்.26

ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளரும் ஐ.நாவின் அபிவிருத்தி வேலைத்திட்ட வதிவிடப் பிரதிநிதியுமான உனா மக்கோலியின் மறைவுக்கு தமிழர் விடுதலைக்கு கூட்டணி இரங்கல் தெரிவித்துள்ளது.

54 வயதான உனா மக்கோலி மக்களுக்குச் சேவை செய்வதற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த ஒருவர். பல நெருக்கடியான காலகட்டங்களில் தமிழ் மக்களுக்கு உதவியவர். இலங்கையின் முதலாவது பெண் ஐ.நா வதிவிட ஒருங்கமைப்பாளரான மக்கோலி தைரியமும் உறுதியும் கொண்ட ஒருவர். அவரின் குடும்பத்தினர் மற்றும் ஐ.நா. ஊழியர்களின் துயரில் நாமும் பங்கெடுத்துக் கொள்கிறோம். என்று தனது இரங்கல் செய்திக்குறிப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்துள்ளது.

## இணைய உலக வர்த்தக கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்ப்பாணம் கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் இணைய உலக வர்த்தக மாநாடும் வர்த்தகக் கண்காட்சியும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இடம்பெறவுள்ளன.

கண்காட்சியில் பொருள்களைக் காட்சிப்படுத்த விரும்பும் வியாபாரிகளை முற்கூட்டிய பதிவு மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவர்கள் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் எதிர்வரும் சித்திரை மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு முன்பாக அமைந்துள்ள சங்கிலியன் மன்றத்தில் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற 0776524775 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

## மாவிட்டபுரத்துக்கு வருகிறார் போதிநாத வேலன் சுவாமிகள்

யாழ்ப்பாணம் பெப் 26
அமெரிக்க ஹவாயிலிருந்து வந்த போதிநாத வேலன் சுவாமிகளும் 60 சீடர்களும் மாவிட்ட புரம் கந்தசுவாமி கோயிலுக்கு இன்றையதினம் பிற்பகல் 3 மணிக்கு வருகைதரவுள்ளனர்.

சைவசமயத்தை கடைப்பிடிக்கும் முகமாக அமெரிக்காவின் ஹவாயில் அமைந்துள்ள சுப்பிரமுனிய கோட்டத்தின் முதன்மைக் குரு போதிநாதர் வேலன் சுவாமிகள் தலைமையில் 60 சீடர்கள் இன்றையதினம் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்குச் செல்லவுள்ளனர். இவர்களின் வருகையை முன்னிட்டு மாவிட்டபுரம் ஆலயத்தில் சிறப்பு 3 பூசைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பூஜை ஆராதனைகளின் பின்னர் சுவாமி அங்கு வரும் பக்தர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கவுள்ளார். மேலும் சைவசமயம் தொடர்பிலும் ஆன்மிகம் தொடர்பிலும் அருள் உரை ஆற்றவுள்ளார். (எ-8)

## பனம் களி மூலம் பனம் உற்பத்தி பொருள்கள்

யாழ்ப்பாணம். பெப்.25
பனை அபிவிருத்தி சபையால், கடந்த போகத்தின்போது பெறப்பட்ட பனம் களி மூலம் பனம் உற்பத்தி பொருள்கள் தயாரிக்கப்படவுள்ளன.

கடந்த 2017ஆம் ஆண்டின் போகத்தின்போது சபையால் 75 ஆயிரம் லீற்றர் வரையிலான பனம் களி பெறப்பட்டது. இந்த பனம் களி பாதுகாப்பான முறையில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. சேமித்து வைக்கப்பட்ட இந்த பனம் களி மூலம் பல்வேறு வகையான பனம் பண்டங்களை தயாரித்து நுகர்வோருக்கு விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் சேமித்து வைக்கப்பட்ட இந்த பனம் களி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வைக்கப் படவுள்ளது. என்று பனை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது. (எ-17)

## வவுனியா ஓமந்தைப் பகுதியில் வீதிவிபத்தில் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா.பெப்.26
வவுனியாஓமந்தைவிளக்கு வைத்த குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் பட்டாரக வாகனம் மோதியதில் சைக்கிளில் சென்ற ஒருவர் உயிரிழந்தார்.

சிறி விக்கினேஸ்வரன் என்ற (48 வயது) 6 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

விபத்து தொடர்பாக தெரிய வருவதாவது:

முல்லைத்தீவில் இருந்து வவுனியா நோக்கி வந்த பட்டாரக வகனம் சைக்கிளில் சென்ற நபரை மோதியது. தலையிலே பலத்த காயம் ஏற்பட்டு மயங்கிய நிலையில் இருந்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சேர்ப்பித்தனர். எனினும் சிகிச்சை பயனளிக்காமல் நேற்றுக் காலை 8 மணி அளவில் மேற்படி நபர் உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர் மதுபோதையில் இருந்ததாகவும் கள்ளுத்தவறணையில் இருந்து வெளியே வரும் போது தான் மேற்படி விபத்து இடம்பெற்றதாகவும் விபத்தை நேரிலே பார்த்தவர்கள் கூறினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

வாகனத்தை ஓட்டி வந்த சாரதி ஓமந்தை பொலிஸ்நிலையத்தில் சரணடைந்துள்ளார். ஓமந்தைப் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-21)

## யாழில் இந்தமுறையும் பரீட்சார்த்த உரு. கிழங்குச் செய்கை வெற்றி

யாழ்ப்பாணம், பெப்.26
யாழ்ப்பாணக் குடாநாட்டின் சில பகுதிகளில் இந்த முறையும் இடம்பெற்ற பரீட்சார்த்த உருளைக்கிளங்குச் செய்கை வெற்றியளித்துள்ளது என்று உருளைக்கிழங்குச் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கீரிமலை, நெல்லியடி, கரவெட்டி, சங்கானை போன்ற இடங்களில் இம்முறையும் பரவலான செய்கையாளர்கள் பரீட்சார்த்தமான உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்டனர்.

பரீட்சார்த்தமான இந்த உருளைக்கிழங்குச் செய்கையின் அறுவடை செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அறுவடையில் அதனுடைய விளைச்சல் அதிகரித்திருந்தது என்று விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவ்வாறு உருளைக்கிழங்குகள் அதிக விளைச்சலை தரும் போதும் அதனுடைய விலை வீழ்ச்சியால் சந்தைப்படுத்த முடியாது விவசாயிகள் சிரமப்பட்டும் வருகின்றனர். (21-17)

# வடக்கின் கல்வி மீண்டும் உயர்வு

## வடக்கு முதல்வர் பெருமிதம்

யாழ்ப்பாணம்,பெப்.26
**வடக்கு மாகாண மாணவர்களின் அரும்பெருஞ் சொத்தாகப் பேணிப் பாதுகாக்கப்படும் கல்வி சில காலம் பல்வேறு காரணிகளால் மழுங்கிய நிலையில் காணப்பட்டபோதும் தற்போது மாணவர்கள் காட்டும் ஆர்வம் சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் பெறுகின்ற பெறுபேறுகள் தென்பகுதி தலைமைகளைக் கூடத் திரும்பிப் பார்க்க வைக்கின்றது. இவ்வாறு வடக்கு மாகாண முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

ஈ.கற்றல் இறுவட்டுக்கள் வெளியீடும் மாணவர்களுக்கு கையளித்தல் நிகழ்வும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வேம்படி உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: மாணவர்கள் பாடநெறிகளைக் கற்கக் கூடிய வகையில் அவற்றை ஒழுங்குபடுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். நாம் மாணவர்களாகக் கல்வி கற்கும் காலத்தில் எமது தேடல்களுக்கும், விடயங்களைக் கற்றுத் தேறுவதற்கும் நூலகங்களே உதவிபுரிந்தன.

புத்தகங்களைப் புரட்டி எமக்குத் தேவையான ஒரு விடயத்தை ஆராயப் புகும் போது அந்த விடயத்துடன் சேர்த்து இன்னும் சில விடயங்களை நாம் கற்றுத் தேர்ந்துகொள்வதற்கு அது வழிசமைத்தது. அன்று எமக்கு பரிச்சயமாக இருந்த ஆங்கில மொழியே இன்று பல இடங்களிலும் எம்மைப் பேச வைக்கின்றது.

தாய்மொழிக் கல்வி முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் மாணவர்கள் தமது பாடங்களைச் சொந்த மொழியான தமிழ் மொழி மூலம் கற்கின்ற வாய்ப்பைப் பெற்றுக் கொண்டனர். அதே நேரம் ஆங்கில மொழிக் கல்வி படிப்படியாகக் கைவிடப்பட்டு ஆங்கில மொழி அறிவு குன்றிய மாணவ சமூகம் உருவாக்கப்பட்டது.

இது ஒரு துரதிர்ஷ்ட வசமான செயலாகும். கல்வி கற்கும் காலத்தில் உங்களுடைய கல்வி நடவடிக்கைகளுடன் சேர்த்து ஆங்கில மொழிக் கல்வியையும் விருத்தி செய்து கொள்ளுங்கள். இலத்திரனியல் சாதனங்களுடனேயே தான் தற்கால மாணவர்களின் பொழுது போக்கின் பெரும் பகுதி கழிக்கப்படுகின்றது. அவர்கள் ஏனையவர்களுடன் சேர்ந்து விளையாடுதல் அல்லது பிற விடயங்களைப் பற்றி உரையாடுதல், இலக்கிய மற்றும் சமூக நாவல்களைக் கற்றல் ஆகிய அனைத்தையும் கைவிட்டுவிட்டு முழுநேரமும் கையடக்கத் தொலைபேசி அல்லது கணினி மூலமான இணையத்தளச் செய்திகளை நோக்கிய வண்ணம் இருக்கின்றார்கள். இதனால் அவர்களுக்குப் புத்தகங்களின் மேல் நாட்டம் ஏற்படுவது மிகக் குறைவாகிவிட்டது. மாணவர்களுக்கு அறிவைப் புகட்டுவதற்காக நாமும் இலத்திரனியல் சாதனங்களை நோக்கி நகர வேண்டிய கட்டாயத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளோம். இது வெறுமனே எமது மாணவர்களுக்கு மட்டும் ஏற்பட்ட ஒரு தாக்கமல்ல. உலகளாவிய ரீதியில் இந்தத் தாக்கம் மாணவர்களைப் பெரிதும் பீடித்துள்ளது. கணினி அறிவு தற்காலத்தில் அத்தியாவசியமாகிவிட்டது. அதிலிருந்து பிரிந்திருந்து வாழ்வது முடியாத காரியமாகிவிட்டது. எனவேதான் கற்றல் நடவடிக்கைகளை இலத்திரனியல் இறுவட்டுக்கள் மற்றும் வலைத்தளங்கள் ஊடாக மேற்கொள்வதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட் டுள்ளன. இன்றைய அவசர உலகில் குழந்தைகளைக் கவனிப்பதற்கு தாய் தந்தையர்க்கு நேரம் கிடைப்பதில்லை. குழந்தைக்கு உணவு ஊட்டும் போது கூட ஒரு அவசரத்தன்மை. இவர்களின் அவசரத்துக்கு குழந்தை இடம் கொடுக்காத போது அந்தக் குழந்தையை தமது வழியில் கொண்டு வருவதற்கு இலத்திரனியல் சாதனங்கள்தான் பெரிதும் உதவுகின்றன.

விளைவு குழந்தை சிறுபருவத்தில் இருந்தே உயிரற்ற சடப்பொருளான இலத்திரனியல் சாதனங்களுடன் பொழுதைக் கழிக்கின்றது.

இதனால் வளர்கின்ற அந்தக் குழந்தையும் ஒரு இலத்திரனியல் சாதனத்துக்கு ஒப்பானதாக மாறிவிடுகின்றது எனலாம். ஒவ்வொரு இலத்திரனியல் சாதனத்தையும் எமது கட்டுப்பாட்டுக்குள் கையாள நாம் பழகிக் கொள்ள வேண்டும். அதனை விடுத்து இலத்திரனியல் சாதனங்கள் எம்மை வழிநடத்த முனைகின்ற செயலுக்கு இடமளிக்கக் கூடாது என உங்களை வினயமாக வேண்டிக் கொள்கின்றேன் - என்றார். (ற-ரி2)

## குடிசார் திணைக்களங்களுக்கு அலகு விலைகள் தயாரிப்பு

யாழ்ப்பாணம்.பெப்.26
வடக்கு மாகாணத்தில் குடிசார் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வரும் திணைக்களங்களுக்கான அலகு விலைகள் தயாரிக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் குடிசார் வேலைத் திட்டங்களை கட்டடங்கள் திணைக்களம்,வீதி அபிவிருத்தி திணைக்களம்,நீர்ப் பாசனத் திணைக்களம் ஆகியன அதிகளவில் மேற்கொண்டு வருகின்றன. குடிசார் வேலைகளை மேற்கொள்ளும் போது எல்லாவற்றுக்கும் பொதுவான அலகு விலைகள் அவசியம். அத்துடன் பொறியியல் ஆய்வு கூடங்களில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளுக்கான விலைகளும் அவசியம். ஆகவே பிரதிப் பிரதம செயலகத்தின் பொறியியல் பிரிவின் கீழ் இந்த வேலைகளுக்கான அலகு விலைகள் தயாரிக்கும் வேலைகள் நடைபெறவுள்ளன. தயாரிக்கப் படும் விலைத் தொகுதிப் புத்தகங்கள் திணைக்களங்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளன. இதனை அச்சிடுவதற்கான செலவினங்கள் பிரதிப் பிரதம செயலரின் பொறியியல் பிரிவுக்கு 2018ஆம் ஆண்டுக்கான மீண்டு வரும் நிதியிலிருந்து பெறுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. ஆளுநரின் அனுமதியின் பின்னர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்ப டும் என்று தெரிவிக்கப்பட்டது. (21-ரி)

## வேதாகமப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழா



வவுனியா.பெப்.26
வவுனியா இறம்பைக்குளம் ஈஸி மிசன் பூரண சுவிசேச சபையின் ஆலயத்தில் இலங்கை அப்பலோ வேதாகமப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழா மூத்த ஆயர் பி. எம். இராஜசிங்கம் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. பட்டமளிப்பு விழாவில் 12 பேருக்கு இளநிலைப்பட்டமளிப்பும், 14 பேருக்கு முதுநிலை பட்டமளிப்பும் இருவருக்கு மருத்துவ சேவைக்கான பட்டமளிப்பும் வன்னிப்பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு சமுதாய முன்னேற்றப்பணிக்கான சிறப்புப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் அப்பலோ வேதாகமப் பல்கலைக்கழகத்தின் தலைவர், துணைத்தலைவர், பேராசிரியர்கள், நிர்வாகத் தலைவர்கள், உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டு விருதினை வழங்கிவைத்தனர்.

## 5 வாகனங்கள் மோதி 12 பேர் சிகிச்சையில்



சிலாபம்,பெப்.26

சிலாபம் எலிவிடிய சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 12 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்று இடம்பெற்றது.

3 உந்துருளிகளும் முச்சக்கர வண்டி ஒன்றும் சிற்றூந்து ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்தவர்கள் சிலாபம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ஒருவர் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற-ரி4)

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு



மட்டக்களப்பு,பெப்.26

மட்டக்களப்பு சந்திவெளியில் ஏற்பட்ட வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொருவர் படுகாயமடைந்தார்.

ஆரையம்பதியிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் எதிர் திசையிலிருந்து வந்த டிப்பர் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

படுகாயமடைந்தவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தை முந்தி செல்ல முன்றபட்ட டிப்பர் ரக வாகனமே எதிர் திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்தை ஏற்படுத்தியது எனத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தை ஏற்படுத்திய டிப்பர் ரக வாகனம் தப்பிச் சென்றது என்று கூறப்பட்டது.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற-ரி4)

## குருதிக் கொடை முகாம்



வவுனியா,பெப்.26

பிரதேச அபிவிருத்தி வங்கியின் வடமாகாண ஊழியர் நலன்புரி சங்கம் நடாத்தும் குருதிக்கொடை முகாம் வவுனியா பிரதேச அபிவிருத்தி வங்கியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த முகாம் பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஊழியரான அமரர் தெய்வேந்திரன் பகீசனின் இரண்டாவது வருட நினைவாகவே மேற்கொள்ளப்பட்டது.

இதில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டதுடன் பகீசனின் படத்துக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ற-ரி4)

# ஆட்சியாளர் மனம் மாறினாலே முன்னேற்றம் காண முடியும்

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

கிளிநொச்சி,பெப்.26

சிறுபான்மை இனங்களின் நலனில் அக்கறை கொள்ளக்கூடிய ஒரு அரசியல் கலாசாரம் அல்லது ஆட்சியாளர்களின் மனமாற்றம் ஏற்படும்வரை எமது நிலைமைகளில் முன்னேற்றம் காண முடியாது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையும் கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய மாபெரும் நடமாடும் சேவை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

மத்திய அரசு போர் முடிந்த பின்னரும் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு விரைந்து உதவிகளை நல்க முன்வராதிருப்பது மிகப் பெரிய குறையாக எம் மக்களால் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளாக இனம் காணப்பட்டுள்ள ஒரு சமூகம் தமது சுய உரிமைகளுடன் வாழ்வியல் அடையாளங்களுடன் சுய கௌரவத்துடன் தமது மண்ணில் வாழ்வதற்கு தடைவிதிக்கக்கூடிய அல்லது தடுத்து நிறுத்தக்கூடிய செயல்களையே மத்திய அரசு தொடர்ந்தும் செய்து கொண்டு வருகிறது.

வேண்டுமென்றே தமிழ் மக்கள் பற்றிய அவர்களின் உயரிய சிந்தனைகள் பற்றிய கருத்துக்களை தவறான கோணத்தில் அப்பாவி சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறி வருகின்றார்கள் தெற்கத்தைய அரசியல் வாதிகள்.

இதனால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது.

மக்களிடையேயான நல்லெண்ணமும் சீர்குலைந்துள்ளது. அடாவடித்தனமும் வன்முறையும் மக்கள் மனதில் விதைக்கப் கட்டுள்ளன. இந்த நிலை மாற வேண்டும். சிங்கள மக்கள் தமிழ் மக்களின் பிரச்சனைகளை உணர்ந்து கொள்ள நாம் வழிவகுக்க வேண்டும்.

இனியாவது அரசுடனான அரசியல் பேச்சுக்களை சிறப்பாக முன்னெடுக்கப்பட வேண்டும். தகுந்த இணைப்பாட்சி முறை மலர வேண்டும்.

தமிழ் மக்கள் தமது மொழி உரிமையை உரத்துக் கூறக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தவும் எமது மக்களை பற்பல நெருக்கடிகளில் இருந்து மீட்டெடுப்பதற்கும் நாம் தொடர்ந்து பாடுபடுவோம்.என்றார். (ற-ரி4)

## சிகரெட்டுக்களுடன் ஒருவர் கைது

கொழும்பு,பெப்.26

வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சிகரட்டுக்களுடன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

டுபாயில் இருந்து வந்த நபரின் பயணப்பையில் இருந்து சுமார் 20 ஆயிரம் சிகரட்டுகள் கைப்பற்றப்பட்டன, அவற்றின் பெறுமதி 10 லட்சம் ரூபா என சுங்க திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீர்கொழும்பு பிரதேசத்தை சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சிகரட் தொகை அரசுடைமையாக்கப்பட்டுள்ளதுடன் சுங்க பிரிவால் ரூபாய் 25 ஆயிரம் தண்டம்விதிக்கப்பட்டது. (ற-ரி4)

# கிளிநொச்சியில் நடமாடும் சேவை



கிளிநொச்சி,பெப்.26

வடக்கு மாகாண சபையும் கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய நடமாடும் சேவை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

மக்களை நோக்கிய சேவை எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி மாவட்ட மக்களின் நன்மை கருதி வட மாகாண மகளிர் விவகார சமூக சேவைகள் அமைச்சர் அனந்தி சசிதரன் தலைமையில் இந்த நடமாடு சேவை நடத்தப்பட்டது.

இந்தச் சேவை வட மாகாண சமூக சேவைகள் அமைச்சு, வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் நெறிப்படுத்தலிலும் மத்திய அரசின் சமூக சேவைகள் திணைக்களம், மாற்றுவலுள்ளோருக்கான தேசிய செயலகம், முதியோர்களுக்கான தேசிய செயலகம் என்பவற்றின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான சுயதொழில் உதவி, கல்வி உதவி, முதியோர் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல், நிவாரண உதவி, சுயதொழில் ஊக்குவிப்பு கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு சேவைகள் இதில் இடம் பெற்றன.

இதில் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன், அமைச்சர் அனந்தி சசிதரன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ற-ரி4)

# தையல் பயிற்சியாளர்களது கண்காட்சி மண்முனையில்


மட்டக்களப்பு,பெப்.26

மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவின் மாதர் அபிவிருத்தி தையல் பயிற்சியாளர்களது கண்காட்சியும் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் நேற்று நடைபெற்றன. இந்த நிகழ்வு மண்முனை வடக்கு பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் கிராம அபிவிருத்தி அலுவலகத்தில் நடைபெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.சதிஸ்குமார் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்தார். இதில் தையல் டிப்ளோமா பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.



பயிற்சி நெறிகளை நிறைவு செய்துகொண்டு வெளியேறும் யுவதிகளின் திறமைகளை வெளிகாட்டும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (ற-ரி4)



## சாவின் விளிம்பில்

இங்கிலாந்தில் உள்ள வெஸ்ட் மிட்லாண்ட்ஸ் சபாரியில் சிங்கங்களைப் பார்க்க குழந்தைகளுடன் சென்றார் அபி டூட்ஜ். காருக்குள் அமர்ந்தபடி பூங்காவைச் சுற்றி வரும்போது, திடீரென்று கம்பிக் கதவைத் திறந்துகொண்டு சிங்கங்கள் ஆக்ரோசமாக காரைச் சூழ்ந்துகொண்டன.

“நானும் தோழியும் முன்பக்கம் அமர்ந்திருந்தோம். குழந்தைகள்பின்பக்கம்அமர்ந்திருந்தார்கள். சிங்கங்கள் வெளிவந்ததும் அத்தனை பேரும் பயத்தில் உறைந்து போனோம். சுமார் 30 சிங்கங்கள் எங்கள் காரைச் சூழ்ந்துகொண்டன.

ஒரு சிங்கம் காரின் முன்பக்கக் கண்ணாடியில் காலால் ஓங்கி அடித்தது. அடித்த வேகத்தில் கண்ணாடி உடைந்து, சிங்கங்களுக்கு இரையாகி விடுவோம்என்றுநினைத்தேன். யாரும்யாருடனும் பேசும் நிலையில் இல்லை. வேகமாக காரை எடுத்துக்கொண்டு செல்லவும் முடியாது. அதற்கேற்ற உடல் பலமோ, மன தைரியமோ இல்லை.

ஏற்கெனவே கோபத்தில் இருக்கும் சிங்கங்கள் கொஞ்சம்அசைந்தால்இன்னும்கோபமடைந்து விடலாம்என்றுபயந்தேன். 50நிமிடங்களுக்குப் பிறகு சிங்கங்கள் கொஞ்சம் சாந்தமடைந்தன. பூங்கா ஊழியர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. சாவைத் தொட்டுவிட்டுத் திரும்பியிருக்கிறோம்” என்கிறார் அபி டூட்ஜ். (ம)

## நேபாளத்தில் மார்ச் மாதம் அதிபருக்கான தேர்தல்

நேபாளத்தில் அடுத்த மாதம் 13ஆம் திகதி அதிபருக்கான தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தின் முதல் பெண் அதிபராக பிந்தியா தேவி பந்தாரிகடந்த2015ஆம்ஆண்டு ஒக்ரோபர் மாதம் பொறுப்பேற்றார். அவரது பதவிக்காலம் இன்னும் முடிவடையவில்லை.

இந்த நிலையில் புதிய அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் மார்ச் மாதம் 13ஆம் திகதிநடைபெறவுள்ளது.

தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் எதிர்வரும் மார்ச் 7ஆம் திகதி நடைபெறும் என்றும்தேர்தல்ஆணையம்அறிவித்துள்ளது. (ம)




## சோமாலியாவில் குண்டுவெடிப்பு; 45 பேர் சாவு

மொகடிசு, பெப். 26

சோமாலியா நாட்டின் மொகடிசு நகரில் நேற்றுமுன்தினம் இரட்டைக் குண்டுவெடிப்பு இடம் பெற்றிருந்தநிலையில், இந்தஅசம்பாவிதத்தில்உயிரிழந்தவர்களின்எண்ணிக்கை45ஆக அதிகரித்தது.

கிழக்கு ஆபிரிக்க நாடான சோமாலியாவின் தலைநகர் மொகடிசுவில் உள்ள அரச அலுவலகங்களைக் குறிவைத்து இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. 18பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். இந்த எண்ணிக்கை தற்போது 45ஆக அதிகரித்துள்ளது. காயமடைந்த சிலரின் நிலைமை கவலைக்கிடம் என்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)







# கவுடா நகரில் 30 நாள்கள் போர் நிறுத்தம்

### ஐ. நா. பாதுகாப்புச்சபை தீர்மானம்

டமஸ்கஸ், பெப். 26

சிரியாவில் அரச படைகளுக்கும், கிளர்ச்சிக் குழுக்களுக்கும் கடந்த ஒருவார காலமாக தொடர்ச்சியான போர் நடைபெற்றுவந்த நிலையில் அடுத்த ஒருமாத காலத்துக்கு சிரியாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிரிய அதிபர் அசாத் ஷியா பிரிவைச் சேர்ந்தவர். அங்கு சன்னி பிரிவைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். ஷியா இஸ்லாமியர்கள் 30 வீதம், சன்னி இஸ்லாமியர்கள்70வீதம்என்றவாறாகசிரியமக்கள் தொகை அமைந்துள்ளது. அசாத் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று வலியுறுத்தி சன்னி இஸ்லாமிய பிரிவைச்சேர்ந்தஆயுதக்குழுக்கள்ஆயுதம் தாங்கிப் போராடி வருகின்றன. கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இந்த உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. சிரிய அரசுக்கு ரஷ்யாவின் தலைமையில்கூட்டுப்படைஉதவிசெய்கிறது. கிளர்ச்சிக் குழுவின் பின்னணியில் அமெரிக்கா உள்ளது.

அலெப்போ நகர் கடந்த வருடம் கிளர்சிக் குழுவின் பிடியில் இருந்து மீட்கப்பட்டது. தற்போது ‘கவுடா’ நகரில் போர்க் காற்றுபலமாகவீசிக்கொண்டிருக்கிறது. கடந்தஒருவாரகாலமாகஅங்குநடத்தப்பட்டுள்ள கொடூரமான தாக்குதல்களில் சுமார் 600 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் சுமார் 60 வீதமானோர் குழந்தைகள். இதையடுத்து அங்கு போர் நிறுத்தத்தைச் செய்ய ஐ.நா. சபை கடுமையாக முயற்சித்து வந்தது.

எதுவும் பயனளிக்கவில்லை. ரஷ்யா முட்டுக்கட்டையாக அமைந்தது. ஐ.நா. பாதுகாப்புச்சபையில்நேற்றுமுன்தினம் ஏற்பட்ட உடன்பாட்டை அடுத்து அங்கு 30நாள்களுக்குபோர்நிறுத்தஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரங்களை வழங்குதல், மருத்துவ முகாம்களை அமைத்தல், போதிய உணவுப் பொருள்களை விநியோகித்தல், மீட்புப் பணிகளை உறுதிப்படுத்தல்,மக்களின்பாதுகாப்பை உறுதிப்படுத்தல்,குடிநீர்விநியோகத்தை மேற்கொள்ளல், சிறுவர்களின் பாதுகாப்பை மேம்படுத்தல், தங்குமிடங்களை அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மிகத்துரிதகதியில்முன்னெடுக்கப்படும் என்று ஐ.நா. சபை அறிவித்துள்ளது. இந்தத்தீர்மானத்தை ஆயுதக்குழுக்கள் வரவேற்றுள்ளன. (ம)



## இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூத

இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதரகம் எதிர்வரும் மே மாதம் ஜெருசலேமில் அமைக்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. இந்தஅறிவிப்புக்குஇஸ்ரேலியதலைமை அமைச்சர் நெத்தன்யாகு தனது பாராட்டைத் தெரிவித்தார். பலஸ்தீனத்தின் பல பகுதிகளைக் கைப்பற்றி அவற்றைத் தன்னுடன் இணைந்து வைத்துள்ளது இஸ் லேமும் அவ்வாறு இஸ்ரேலின் கட்டுப்பா ளது. அந்த நகரை தனது தலைநகராக வித்திருந்தது. எனினும்வேறெந்தநாடும் கவில்லை. இந்த நிலையில் கடந்த






# 10 லட்சம் ஆசிரியர்களுக்கு துப்பாக்கிப் பயிற்சி

## டொனால்ட் ட்ரம்பின் பரிந்துரையைத் தொடர்ந்து

வொஷிங்டன். பெப். 26
அமெரிக்கப்பாடசாலைகளில்இடம்பெறும்துப்பாக்கிக்கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, ஆசிரியர்களுக்கு துப்பாக்கிப் பயிற்சி அளிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் முன்வைத்த பரிந்துரையை அடுத்து சுமார்10 லட்சம்ஆசிரியர்களுக்குதுப்பாக்கிப் பயிற்சி வழங்க அமெரிக்கா தயாராகியுள்ளது. அமெரிக்காவின் புளோரிடாவில்உள்ளபாடசாலையொன்றில்கடந்தசிலநாளகளுக்கு முன் துப்பாக்கிச் சூடு நடந்தது. இதில் மாணவர்கள் உட்பட 17 பேர் உயிரிழந்தனர். பாடசாலைகளில் அடிக்கடிதுப்பாக்கிசூடுஇடம்பெறு வதைக்கண்டித்துபேரணிகள்நடத்தப்பட்டன. இதையடுத்தேஇந்தத் திட்டம்நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



# வடகொரியாவுக்கு மேலும் தடைகள்

## அமெரிக்கா அதிரடி

வொஷிங்டன், பெப். 26
அணுவாயுதச்சோதனைகளில்ஈடுபடும்திட்டத்தைதிரும்பப் பெறாததை அடுத்து வடகொரியா மீது மேலும் சில பொருளா தாரத் தடைகளை விதித்துள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். பன்னாட்டுச்சட்டதிட்டங்களைமீறிதொடர்ந்து ஆயுதமற்றும் அணுவாயுதச் சோதனையில் ஈடுபட்டு வருகிறது வடகொ ரியா. வடகொரியாமீது ஐக்கியநாடுகள் சபைபொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. அமெரிக்கா, ஜப்பான், தென்கொ ரியா ஆகிய நாடுகள் தனித்தனி யாக பல பொருளாதாரத் தடை களை விதித்துள்ளன.

தென்கொரியாவில் தற்போது குளிர்கால ஒலிம்பிக் தொடர் நடைபெற்று வருகிறது. சற்றும் எதிர்பாராவிதமாகஇந்தத்தொட ரில் பங்கேற்றுள்ளது வடகொ ரியா. இதனால்அந்தநாடுஅமை திப் பேச்சுக்கு தயாராகும் என்ற பின்னணியில் வடகொரியப் பிரதிநிதிகளுக்கும் அமெரிக்க துணைஅதிபர்மைக்பென்ஸுக்கும் இடையில் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தச் சந்திப்பில்கலந்துகொள்ளப்போவ தில்லை என்று கடந்த வாரம் அறிவித்ததுவடகொரியா. இதை யடுத்துவடகொரியாவின்மீதுதற்போது கூடுதல்பொருளாதா ரத்தடைகளை விதித்துள்ளது அமெரிக்கா.

> வடகொரியப் பிரதிநிதி களுக்கும் அமெரிக்க துணை அதிபர் மைக் பென்ஸுக்கும் இடை யில் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளப்போவ தில்லை என்று கடந்த வாரம் அறிவித்தது வடகொரியா.

"வட கொரியாவின் அணு ஆயுத திட்டங்களுக்கு நிதி மற்றும் எரிபொருள்வழங்கவும், அதன்ராணுவத்தைநிலைநாட்டவும் உதவும்வகையில்செயல்படும்கப்பல்கள், கப்பல்நிறுவனங் கள், தனிநபர்கள் என மொத்தம் 56 இலக்குகளை குறி வைத்துவிரைவில்இவற்றுக்கானவருவாய்மற்றும்எரிபொ ருள் ஆதாரங்களை துண்டிக்கும் வகையில் இந்தத் தடை அமையும்" என்றுஅமெரிக்கஅதிபர்ட்ரம்ப்தெரிவித்தார். (ம)



# 2 மணி நேரத்தில் பீஜிங்கில் இருந்து நியூயோர்க் வரை

பீஜிங், பெப். 26
சீனாவின் தலைநகர் பீஜிங்கில் இருந்து அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கு இரண்டுமணிநேரத்தில்செல்லக்கூடிய வானூர்தியை சீனா தயாரித்துள்ளது.
இந்த இரு நகர்களுக்கும் இடையே தற் போது நடைபெறும் வானூர்திச் சேவை 13 மணித்தியாலம் 30 நிமிடங்கள் பிடிக் கிறது. புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ள வானூர்தி மணிக்கு 6 ஆயிரம் கி.மீ. வேகத்தில் பறக்கும் திறன் கொ்ண்டது. இந்த வானூர்தி சோதனையின்போது அதிகபட்சமாக 8 ஆயிரத்து 600 கிலோ மீற்றர்வேகத்தில்சோதித்துப்பார்க்கப்பட் டது. இந்த வானூர்தி பயன்பாட்டுக்கு வந்தால் அதிக பணத்தைச் செலுத்த வேண்டிவரும்.
இலங்கை மதிப்பில் சுமார் 40 லட்சம் ரூபாபீஜிங்கில்இருந்துநியூயார்க்நகருக் கான கட்டணமாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# ...தனையல்ல வேதனை

...ார்னியாவைச்சேர்ந்தசாலி
...புகைப்பழக்கத்துக்கு எதி
...நடவடிக்கைகளை மேற்
...ாடு வருகிறார். கடந்த மூன்
...ஆண்டுகளாக, புகைத்து
...த் தூக்கி எறியும் சிகரெட்
...களைஅப்புறப்படுத்தி, சேக
... வருகிறார். இதுவரை 10
... சிகரெட் துண்டுகளைச்
...த்துள்ளாராம் அவர்.
...லட்சம்சிகரெட்துண்டுகளை
...ரை ஆண்டுகளில் நான்
...த்ததை எல்லோரும் சாத
...ாக நினைக்கிறார்கள். என்
... பொறுத்தவரை இது
...னை. சிகரெட், பிடிப்பவர்
...மட்டுமின்றி, மற்றவர்களுக்
...ங்கை விளைவிக்கிறது.
...பத் தொட்டியில் போடாமல்,

தெருவில் வீசும் சிகரெட் துண்டு களேஇவ்வளவுஎன்றால், மொத்த எண்ணிக்கையை நினைத்தால் மலைப்பாக இருக்கிறது. ஒரு சில நாட்கள் 3 ஆயிரம்சிகரெட்துண்டு களைக் கூடச் சேகரித்திருக்கி றேன். சிகரெட் பிடிப்பவர்களிடம் குப்பைத்தொட்டியில்முறையாகப் போடச்சொல்வேன். பிறகுசிகரெட் எவ்வளவு தீங்கானது என்பதை விளக்கி, பழக்கத்தைவிட்டுவிடும் படிக்கேட்டுக்கொள்வேன். புகைப் பிடிப்பதை விடுகிறார்களோ இல் லையோ, தெருவில் வீசாமல் குப் பைத் தொட்டியில் வீசும் வழக்கத் தையாவது சிலர் கடைபிடிப்பது என்னுடையமுயற்சிக்குக்கிடைத்த வெற்றியாகப்பார்க்கிறேன்" என்கி றார் சாலிடாலி. (ம)



# ஆப்கானில் மற்றொரு தாக்குதல்

காபூல், பெப். 26
ஆப்கானிஸ்தானின் பரா மாகாணத்தில் ஆயுததாரிகள் நேற்றுமுன்தினம் நடத்தி தாக்குதலில் 23 பேர் உயிரிழந்தனர்.
ஆப்கானிஸ்தானின் பரா மாகாணத்தின் மேற்கு பகுதியில் உள்ள இர்ராணுவ முகாமை இலக்குவைத்தே இந்தத் தாக்க தல் நடத்தப்பட்டது. உயிரிழந்தவர்களில் 18 பேர் சிப்பாய்கள்.
தலிபான் அமைப்புதாக்குதலுக்குப்பொறுப் பேற்றது. இந்தத் தாக்குதலுக்காக தக்க பதி லடிகொடுக்கப்படும் என்று ஆப்கான் அரசு எச்சரித்தது. (ம)



# ...தரகம் மே மாதம் அமைகிறது ஜெருசலேமில்

...இஸ்ரேல். ஜெருச
...ட்டுக்குள் வந்துள்
...ும் இஸ்ரேல் அறி
... அதைஅங்கீகரிக்
...ருடத்தின் இறுதிப்

பகுதியில் இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீ கரித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். இஸ்ரேலுக்கான அமெ ரிக்கத்தூதரகம்விரைவில்ஜெருசலேமில்அமைக்கப்படும் என்றும் ட்ரம்ப் அறிவித்திருந்தார். இதற்கு உலக நாடுகள் பலவும்தத்தமதுஎதிர்ப்பைவெளிப்படுத்தின. ஐ.நா. சபையி லும் இது தொடர்பான விவாதம் சென்றுகொண்டுள்ளது. இந்தநிலையில்எதிர்வரும்மேமாதம்தூதரகம்அமைக்கப் படும்என்றுஅமெரிக்காஅறிவித்துள்ளது. இந்தஅறிவிப்பை வரவேற்றுப் பாராட்டியுள்ளார் இஸ்ரேலிய தலைமை அமைச்சர் நெத்தன்யாகு. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மத நல்லிணக்கத்தை குழப்பும் செயல் இது

முள்ளியவளையில் உள்ள வரலாற்றுத் தொன்மை மிக்க கோட்டை ஆதி ஐயனார் ஆலயத்தில் விக்கிரகங்கள் கடந்த கடந்த வெள்ளிக்கிழமை இரவு உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன. இந்து ஆலயங்களின் விக்கிரகங்கள் உடைக்கப்படுவது இதுவொன்றும் முதல் முறையல்ல. வடமாகாணத்தில் இந்து, கிறிஸ்தவ வழிபாடுகள் சார்ந்த விக்கிரகங்கள் உடைக்கப்படுகின்றமை, சேதமாக்கப்படுகின்றமை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றமை அவதானிப்பு.

கடந்த சிவராத்திரி தினத்தன்று மன்னாரில் இந்துக் கோவில்களில் உள்ள விக்கிரகங்களும், கிறிஸ்தவ ஆலயங்களில் உள்ள விக்கிரகங்களும் உடைக்கப்பட்டிருந்தன. அதன் தொடர்ச்சியாக அவ்வாறான ஒரு சம்பவம் முல்லைத்தீவில் பதிவாகியுள்ளது. இந்து அமைப்புக்கள், கிறிஸ்தவ அமைப்புக்கள், கத்தோலிக்க அமைப்புக்கள், பொது அமைப்புக்கள் என்று பல தரப்பிடம் இருந்தும் கண்டனங்கள் குவிந்துள்ளன. இந்த விடயம் தொடர்பில் தீர்க்கமான விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும் என்று அவை வலியுறுத்தியுள்ளன. விக்கிரகங்கள் உடைக்கப்படுகின்றமை மதநல்லிணக்கத்தைக் குழப்பும் செயல் என்று கொதித்தெழுந்துள்ளனர் சம்பந்தப்பட்ட ம்க்கள். அவர்களின் ஆவேசம் பொருத்தமானது, சரியானது. அதுவே உளவியலும்கூட.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் இவ்வாறான மத அத்துமீறல்கள் ஏற்கத்தகாதவை. ஏனெனில், பெயரில் குறிப்பிட்டதைப்போன்று இலங்கை ஒரு சனநாயக நாடு. ஒரு சனநாயக நாட்டின் மக்களுக்கு உள்ள உரிமைகளில், விரும்பிய மதத்தைப் பின்பற்றுதல் என்பதும் ஒன்று. அவ்வாறிருக்க ஒரு மதத்தின் மீது, அது சார்ந்த விக்கிரகங்களின் மீது, அதன் நம்பிக்கைகளின் மீது கைவைத்தல் என்பது ஏற்றுக்கொள்வதற்கு உகந்தது அல்ல. சர்வாதிகார அல்லது ஏதேச்சதிகார நாடுகளில்தான் இன, மத, மொழி அடக்குமுறைகளைக் கண்டுகொள்ளலாம். அது இலங்கையிலும் இருப்பது முரண்.

முன்னாள் அரசதலைவர் மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் இந்துக் கோவில்கள், கிறிஸ்தவ, கத்தோலிக்க ஆலயங்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள் ஆகிவற்றின் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்ட பதிவுகள் ஏராளம். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன – தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டு அரசிலும் அவ்வாறான கலாசாரம் தொடர்வதென்பது பெரும் ஏமாற்றமே. இவ்வாறான ஓர் ஆட்சிக்கு தமிழ் அரசியல் பிரதிநிகள் 'நல்லாட்சி' என்ற அங்கீகாரத்தைக் கடந்த காலத்தில் கொடுத்தமை, கொடுக்கின்றமை வருத்தத்துக்கு உரியது தான்.

முடிவடைந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த தேர்தல் அறிக்கையொன்றை இந்தப் பத்தியில் சுட்டிக்காட்ட வேண்டி அவசியம் இருக்கவே செய்கிறது. வவுனியாவில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டமொன்றில் தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி, வடக்கு – கிழக்கில் ஆயிரம் விகாரைகள் அமைக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தது. அதற்காக 500 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்யவும் அது திட்டமிட்டிருந்தது. ஆயிரம் விகாரைகள் அமைக்கும் அளவுக்கு வடக்கு – கிழக்கில் பௌத்தர்கள் செறிந்து வாழவில்லை. சிலவேளைகளில் எதிர்காலத் திட்டங்களைக் கருத்திற்கொண்டு அந்தக் கட்சி இவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம். குறித்த கட்சியின் தலைவரான ரணில், இந்தநாட்டின் தலைமை அமைச்சராக தற்போது உள்ளார். விகாரைகளுக்கு, அதுவும் அமைக்கப்படாத விகாரைகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை சிறுபான்மை இனங்களின் வழிபாட்டுத்தலங்களுக்கு அவரால் கொடுக்க முடியவில்லை. அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியவில்லை.

ஆக, நல்லிணக்கம், நல்லாட்சி என்ற பொய்யுரைகளில் ஆட்சிக்காலத்தைக் கடத்திக்கொண்டிருக்காது அது சார்ந்த நகர்வுகளிலும் கூட்டு அரசு களமிறங்க வேண்டும். சிறுபான்மை இனங்களுக்கு 'வேட்டு அரசாக' மாறுதல் ஆகாது.



# சரியான பிரதிநிதி சம்பந்தன்



தம்பித்துரை

'சாது மிரண்டால் காடு தாங்காது' என்பது தமிழ் முதுமொழி. இலங்கை அரசியல் வரலாற்றில் இன்று சாதுவாக இருப்பவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் மட்டுமே!

மூத்த அரசியல்வாதியும், அரசியல் சாணக்கியம், பொறுமை, நிதானம், பன்மொழி ஆளுமை, எல்லோராலும் மதிக்கப்படுகின்ற பன்னாட்டுச் சமூகத்தால் தமிழர் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவராக சம்பந்தன் உள்ளார். தென்னிலங்கை அரசியல்வாதிகளும், மக்களும், ஊடகங்களும் சம்பந்தன் மீது மதிப்பும் மரியாதையும் கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. தமிழர் தரப்பில் பல விமர்சனங்கள் இருந்தாலும் - இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்கு ஈடுகொடுக்க வல்ல தமிழர் பிரதிநிதியாக சம்பந்தன் சரியான தேர்வாக இருக்க முடியும்.

கடந்த நாடாளுமன்ற அமர்வுகள் இலங்கையிலும் பன்னாட்டு அளவிலும் கூர்ந்து கவனிக்கப்பட்டு வருகின்றன. ஆட்சி மாற்றம் அல்லது தலைமை அமைச்சர் மாற்றம் என்ற கொதிநிலையில் தென்னிலங்கை அரசியல் உள்ள நிலையில் தமிழர் தரப்பின் நிலை என்ன என்பதையும் பன்னாட்டுச் சமூகம் நிச்சயம் அவதானித்திருக்கும். இந்தப் பின்னணி யில் தான் சம்பந்தன் மகிந்த உட்பட தெற்கு அரசியல்வாதிகள் மத்தியில் காரசாரமாக உரையாற்றியிருக்கிறார். அவரது உரை நிதானமாகவும், தெளிவாகவும் அதே நேரம் பொறுமையின் பெறுமதியை உணர்த்தும் வகையிலும் அமைந்திருந்தது.

### மகிந்த தரப்பை நாடாளுமன்றில் விளாசித் தள்ளினார் சம்பந்தன்

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில், புதிய அரசமைப்பு நிறைவேறினால் தமிழ் ஈழம் உருவாகும், கூட்டமைப்பு கூட்டாட்சிக்கும் அப்பால் அதிக அதிகாரங்களைக் கோருகிறது என்றவாறான உண்மைக்குப்புறம்பான பரப்புரைகளை சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துக்கூறி பரப்புரை மேற்கொண்டிருந்தனர் மகிந்த தரப்பினர். இந்தப் பரப்புரைகளின் கபடத்தனங்களை சம்பந்தன் கடுமையாக விமர்சித்திருந்தார். இவ்வாறு தவறாக மக்களை வழிநடத்துவோரே நாளை தமிழீழம் மலர்ந்தால் காரணமாவார்கள் என்பதையும் கூறத்தவறவில்லை. அவரது இந்த உரையை சாதாரணமாக எடுத்துவிட முடியாது. அவர் உரையாற்றிய வேளை சபையில் இருந்த சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொது எதிரணி உள்ளிட்ட அனைத்து அரசியல் தலைமைகளும் அமைதி காத்தமை சம்பந்தனின் உரையின் யதார்த்தத்தை உணர்ந்து அங்கீகரித்ததற்கு ஒப்பானது.



### செல்வாவுக்குப் பின்னர் தற்போது சம்பந்தனே

நீண்ட கால இலங்கை அரசியல் வரலாற்றில் தந்தை செல்வா, தளபதி அமிர்தலிங்கம் ஆகியோருக்குப் பின்னர் தமிழர் தரப்பின் மிதவாத அரசியல் தலைவராக சம்பந்தன் பலராலும் நோக்கப்படுகிறார். அவரது அரசியல் அனுபவமும் அத்தகையதே. தந்தை செல்வாவின் பாசறையில் மூத்த அரசியல்வாதி என்ற தகைமை நிலையில் அவரே உள்ளார். அவர் பன்னாட்டுச் தலைவர்களைச் சந்திக்கும்போது அவருக்கு வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் பெறுமதிவாய்ந்தவை. இவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது சம்பந்தனின் தலைமைத்துவத்தை உணர்ந்துகொள்ளலாம். சமீபத்தில் அமைச்சர் மனோகணேசனும் சம்பந்தரை வெறுங்கையோடு அனுப்பி விடாதீர்கள். இனி இப்படி ஒரு தலைவர் தமிழர் தரப்பிலிருந்து கிடைக்கப்போவதில்லை என்று தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. தெற்கின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியிலேயே சம்பந்தன் எதிர்க் கட்சித் தலைவராக உள்ளார். அவர்மீது தனிப்பட்ட ரீதியிலான மதிப்பு இருந்தாலும் ஒன்றிணைந்த பொது எதிரணி குறிவைத்துள்ளது எதிர்க்கட்சித் தலைவர் பதவியாகும். மறுபுறம் தமிழ் மக்கள் மத்தியிலும் கூட்டமைப்பு எதிர்க்கட்சியாக இருந்தும் அரசை எதிர்த்துச் செயற்படாமை குறித்து கடும் அதிருப்தி நிலவுகிறது.

### புதிய அரசமைப்புத்தான் அமைதிக்குக் காரணம்

மகிந்த தரப்பின் பரப்புரைகள், கூட்டு அரசின் அசமந்தப்போக்கு அனைத்தையும் சகித்துக்கொண்டு புதிய அரசமைப்பு மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அரசை அனுசரித்து கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் சம்பந்தரும் பயணிக்கின்றனர். எனினும் உள்ளூராட்சித் தேர்தலின் பின்னரான் அரசியல் குழப்பங்கள், ஆட்சி மாற்றம் நிகழுமோ என்ற பரபரப்பு - இவற்றால் புதிய அரசமைப்பு முயற்சிகள் கிடப்பில் போடப்பட்டு அல்லது கைவிடப்படும் நிலை உருவானால் சம்பந்தனின் பொறுமை எல்லை மீறிவிடும் என்பதை தெற்கு அரசியல் தலைவர்களும் மக்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமது சுயலாப அரசியல் நோக்கங்களுக்காக பொய்ப்பரப்புரை செய்வோரும், தமது ஊழல் முறைகேடுகளை - நாட்டின் இனங்களுக்கிடையே முரண்பாடுகளை உருவாக்கி மறைக்க முயல்வோரும் சம்பந்தனின் எச்சரிக்கையை பொறுப்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். உதாசீனப்படுத்துவது அவர்கள் எதைக்கூறி வாக்குப் பெறுகிறார்களோ அதை நிறைவேற்றிவிட்டாலும் அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

சரோஜா சிவசந்திரன்

# காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டுபிடித்து கரைசேர்க்குமா அமைக்கப்படும் அலுவலகம்?



> காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் செயற்பாட்டிற்காக வரவு செலவு திட்டத்தில் 2017 டிசெம்பரில் 1.4 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நிதியின் மூலம் திறமையான ஓர் செயற்பாட்டை இந்த அலுவலகம் நகர்த்துவதற்கு சனநாயக நீரோட்டத்தில் உள்ள பல தடைகள் யாவும் நீக்கப்பட்டு பாதிக்கப் பட்டவர்கட்கு நியாயமான நீதி கிடைப்பதற்கு இந்த அலுவலகம் தயாராகுமா?

இலங்கையில் 2009ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்பும், பின்னரும் உள்நாட்டுப் போர் நிலைமைகளினால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு, அது சார்ந்த நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆயினும், அண்மையில் யாழ்ப்பாணத்தில் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் பேசிய அரச தலைவர், காணாமல் ஆக்கப்பட்டோரை நாம்எல்லாஇடமும்தேடியும்கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் எங்குமே இல்லை. அவர்களுக்காக இழப்பீடு கொடுக்க முடியும்" என்று தெரிவித்திருந்தார். இவ்வாறான நிலையில் அமைக்கப்படவுள்ள குறித்த அலுவலகம் காணாமல் ஆக்கப்பட்டோரைகண்டுபிடிக்குமா?என்ற கேள்வி உறவுகளை தேடித்தேடி அலைவோரிடத்தில் வலுவாக எழுந்துள்ளது.

**காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் செயற்பாடுகளில் தமிழர்களுக்குத் திருப்தி இல்லை**

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கமைய அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலைமாற்றுக்கால நீதியில் எடுத்துக்காட்டப்பட்ட நான்கு மூலோபாயங்களில் ஒன்றுதான் காணாமல் ஆக்கப்பட்டோரின் அலுவலகம் ஒன்றை அமைத்தல். கூறப்பட்ட நான்கு அணுகுமுறைகளையும் இலங்கையில் போர்க்கால சூழ்நிலையில்பாதிக்கப்பட்டோருக்கானதீர்வாக நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்துள்ளது அரசு. எனினும் அலுவலகத்தினதும் அது சார்ந்த நடத்தைகளிலும் தமிழ் மக்கள் திருப்தியடையவில்லை. அவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் அது அமையவும் இல்லை.

கடந்த2016ஆம்ஆண்டுமத்தியபகுதியில் ஓர் சிறிய அரச குழு மூலம் வரையப்பட்ட காணாமல்ஆக்கப்பட்டோர்அலுவலகத்திற்கான சட்ட வரைபு மக்களுக்கு முறைப்படி வெளிப்படுத்தப்படவில்லை. இது. இந்த அரசுநல்லிணக்கச்செயற்பாடுகளை எப்படியாக மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லப் போகின்றதுஎன்பதனையும்கேள்விக்குள்ளாக்கியுள்ளது. அரசின் இந்த அசமந்தப் போக்கை, செயற்பாட்டை சிவில் சமூகத்தினர் விமர்சித்து வந்த நிலையில் ஆலோசனைசெயலணிஒன்றுநிறுவப்பட்டுமக்களின் பரந்துபட்ட அபிப்பிராயங்கள் பெறப்பட்டன. சிவில் சமூகத்தினரின் ஈடுபாட்டுடன் பயணித்த ஆலோசனைச் செயலணி 2016 ஓகஸ்ட் மாதத்தில் ஓர் இடைக்கால அறிக்கையினைச் சமர்ப்பித்தது.

**ஆலோசனைச் செயலணியின் அறிக்கைகள் ஏதுமில்லாமல் செயற்பட்டது நாடாளுமன்றம்**

இந்த அறிக்கைகூட எழுத்தளவிலும் சில ஆலோசனைக் கூட்டங்களில் சமர்பிக்கப்பட்டமுடிவுகளைஅடிப்படையாகக்கொண்டுமேஎடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறுசமர்ப்பிக்கப்பட்டஇடைக்காலஅறிக்கைமதிப்பீடு செய்யப்படமுன்னமே2016ஓகஸ்ட்மாதத்தில் நாடாளுமன்றில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் அமைத்தல் தொடர்பான சட்ட வரைபு சமர்ப்பிக்கப்பட்டது. ஆலோசனைச் செயலணியின் இடைக்காலஅறிக்கைமதிப்பீடுசெய்யப்பட முன்னரேநாடாளுடன்றத்தில்காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் தொடர்பானசட்டவரைபுசிலதிருத்தங்களுடன் 2016 ஓகஸ்ட்டில் சட்டமாக்கப்பட்டது. ஆயினும்ஆலோசனைச்செயலணியின் இறுதி அறிக்கைகடந்த வருடம்ஜனவரியிலேயே வெளியாகியது.

காணாமல் ஆக்கப்பட்டோரது சட்ட மூலம் 2017ஆம் ஆண்டு ஜூனில் மேலதிக திருத்தங்களுடனும் சுயாதின நிதிப்பங்களிப்பு ஒழுங்குகளுடனும் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், இந்த அலுவலகம் இன்றும் அரச நிதியிலேயே அதன் செயற்பாட்டிற்கு தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எப்படியிருந்தபோதிலும்2017ஆம்ஆண்டு ஜூலை19ஆம் திகதியிலேயே, அரசதலைவர் வர்த்தகமானியில் கையொப்பம் இட்டதனை தொடர்ந்து இந்த அலுவலகம்? அது சார்ந்த பணிகள் தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அமைச்சின் கீழ் செயற்படத் தொடங்கியுள்ளது.

கடந்தவருடம்ஒக்ரோபர்மாதம்மற்றுமொரு சோதனையைகாணாமல்ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் சந்தித்தது. இந்த அலுவலகத்திற்கான அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பு இலங்கையின் அரசஅமைப்புசபையிடம்ஒப்படைக்கப்பட்டது. இதற்கான தேர்வாளர்கட்கான விண்ணப்பம் பத்திரிகைகள் மூலம் பிரசு ரிக்கப்பட்டு, பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்கும்படி கேட்க்கப்பட்டனர்.



2017ஆம் ஆண்டு நவம்பர் 6 ஆம் திகதி இதற்கான முடிவுத்திகதி அறிவிக்கப்பட்டு7 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படவ்உள்ளனர். பரிந்துரைக்கப்பட்ட அங்கத்தவர்கள் இதுவரை அரசியலமைப்பு சபையினால் அங்கீகாரம் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய மிகைத் தாமதச் செயற்பாடுகள் யாவும் அரசின் வெளிப்படைத் தன்மையையும், பலவீனத்தையும் எடுத்துக் காட்டுவதாகவுள்ளது.

காணாமல்ஆக்கப்பட்டோருக்கானஅலுவலகத்தின் செயற்பாட்டிற்காக வரவு செலவு திட்டத்தில் 2017 டிசெம்பரில்1.4 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நிதியின் மூலம் திறமையான ஓர் செயற்பாட்டை இந்த அலுவலகம் நகர்த்துவதற்கு சனநாயக நீரோட்டத்தில் உள்ள பல தடைகள் யாவும் நீக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்கட்கு நியாயமான நீதி கிடைப்பதற்கு இந்த அலுவலகம் தயாராகுமா?

தமதுஉறவுகளைத்தேடிதொடர்ந்துஒருவருடமாக கிளிநொச்சியில் தமது போராட்டத்தைத் தொடர்ந்து வரும் தாய்மார்களுக்கு, தந்தைமார்களுக்கு, சகோதரர்களுக்கு, நண்பர்களுக்கு இந்த அலுவலகம் கூறப் போகும் பதில்தான் என்ன?

*பணிப்பாளர்*
*மகளிர் அபிவிருத்தி நிலையம்*

## ஆசிரியருக்கான கடிதம்

# தவக்காலத்தை பொருளுணர்ந்தவர்களாக கடைப்பிடிப்போம்

இயேசுக்கிறிஸ்துகாட்டிக்கொடுக்கப்பட்டு, பிடிபட்டு, விசாரிக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, கொல்லப்பட்டதைத்தவக்காலம்என்றபெயரில்கடைப்பிடிக்கிறார்கள் கத்தோலிக்கர்கள். நடப்பு வருடத்துக்கான தவக்காலம் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் தவக்காலத்துக்குரித்தான விழுமியங்களுடன், பண்புகளுடன், கொள்கைகளுடன், கோட்பாடுகளுடன்நாம்இந்தக்காலத்தை எதிர்கொள்கின்றோமா, கடைப்பிடிக்கிறோமா என்று எம்மை நாமே கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டுள்ளோம்.

பகிர்தல், ஒறுத்தல் இரண்டும் தவக்காலத்தின் அடிப்படைகளாக அமைந்துள்ளன. ஆனால்அவை இரண்டும் இல்லாமல்தான் பெரும்பாலானவர்களின் தவக்காலம் நகர்கிறது. முடிவுக்கு வருகிறது. இருப்பவர்கள் இல்லாதவர்களுடன் பகிர வேண்டும் என்பதை இந்தக் காலம் வலியுறுத்தி நிற்கிறது. பெரும்பாலானகத்தோலிக்கர்கள்ஒருநேரஉணவை(பெரும்பாலும்காலைஉணவை) ஒறுப்புச் செய்வதை நாம் பார்த்திருக்க, அறிந்திருக்க, கேட்டிருக்கக்கூடும். அவ்வாறுஉணவு ஒறுப்பில்ஈடுபடுவதால்யாருக்குஎன்னபயன். ஒறுத்தலில் ஈடுபட்டு குறித்த ஒருபொழுது உணவுக்காக நாம் செலவிடும் பணத்தை எமது வங்கிக் கணக்கில் சேமித்துக் கொள்ள கத்தோலிக்க திருச்சபை அறிவுறுத்தவில்லை. மாறாக அந்த ஒருநேர உணவை அல்லது அந்தத் தொகையை இல்லாதவர்களுடன் பகிரவே திருச்சபை அறிவுறுத்துகிறது. இந்த அடிப்படையில்தமதுதவக்காலத்தைக்கடைப்பிடிப்பவர்கள்மதிப்புக்குரியவர்கள், பாராட்டப்படவேண்டியவர்கள். ஒறுத்தலில்ஈடுபடுவதைவிட ஒறுத்தலின்மூலமான பகிர்தலையே இயேசு எம்மில் எதிர்பார்க்கிறார். பொருளுணர்ந்து செயற்படுவோம்.

-லியனல்

## கடன், பிணி போக்கும் எளிய பரிகாரங்கள்

★ ஆரத்தி எடுக்கும்போது பயன்படுத்தப்படும் குங்குமம் கலந்த நீர், வெற்றிலை மீது எரியும் கற்பூரம் ஆகியவற்றுக்கு தீய சக்திகளை (கண்திருஷ்டி) விரட்டும் ஆற்றல் உண்டு.

★ வாழை மரத்தை வாசலில் கட்டுவார்கள். இதற்கு காரணம் வாழைக்கு திருஷ்டி தோஷங்களை ஈர்த்துக் கொள்ளும் குணம் உண்டு என்று நம்பப்படுவதால்தான்.

★ கெட்ட எண்ணங்களை, குரூர சிந்தனைகளை திசை திருப்புவதற்கு பெரிய முகம் பார்க்கும் கண்ணாடியை வரவேற்பறையில் அல்லது வீட்டின் உள்வாசலில் வைக்கலாம். மீன்தொட்டி வைத்து அதில் பல வண்ண மீன்களை வளர்க்கலாம்.

★ வாரம் ஒருமுறை கல் உப்பை, குளிக்கும் தண்ணீரில் கலந்து குளித்து வர திருஷ்டியால் ஏற்படும் உடல் அசதி, சோம்பல் நீங்கும் என்று நம்பப்படுகின்றது.

★ அமாவாசை, பௌர்ணமி, அஷ்டமி, நவமி போன்ற நாள்களில் காலை, மாலை இருவேளையும் சாம்பிராணி பொடியுடன், கருவேலம்பட்டை பொடி, வெண் கடுகுத்தூள் ஆகியவற்றைக் கலந்து வீடு, கடை அலுவலகத்தில் புகை காட்ட திருஷ்டியும், தீய சக்திகளும் வெளியேறுமாம்.

★ முடக்கற்றான், பச்சை கற்பூரம், கஸ்தூரி மஞ்சள், ஜவ்வாது, ஆகியவைகளைக் சேர்த்து அரைத்து அந்தப் பொடியை பசு கோமியத்தில் கரைத்து வீட்டிலோ, வியாபார நிலையத்திலோ, தெளிக்க தீய சத்திகள், கண் திருஷ்டி நீங்கி செல்வச் செழிப்புப் பெறலாம்.

★ கடன் தொல்லை போன்றவை இருந்தால், விநாயகரின் ஆலயத்தில் அவர்களின் பெயரில் அர்ச்சனை செய்து, தேங்காய் எண்ணெயையும், தன் குலத்தை காக்கும் குலதெய்வத்திற்கு பிடித்தமான விளக்கெண்ணையும் ஒன்றாக கலந்து, அர்ச்சனை செய்த தேங்காயில் ஊற்றி தீபம் ஏற்றினால் பிரச்சினைகள் விலகும். எம்முடைய முன்னேற்றம் தேங்காமல் விருத்தியாகும்.

★ வளர்பிறையில் வரும் செவ்வாய், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கடற்கரைக்குச் சென்று கடல் நீரை எடுத்து வந்து அதில் மஞ்சள் பொடியை கலந்து கடை, அலுவல்கம், வீடு ஆகியவற்றில் தெளிப்பது சிறந்த பரிகாரம்.



## அன்பே அளவுகோல்




தவக்காலத்தின் இன்றைய காலங்களில் தீர்ப்பிடாதீர்கள், கண்டனம் செய்யாதீர்கள், மன்னியுங்கள் என்று வலியுறுத்தும் இயேசு "நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்" என்றும் அறிவுரை கூறுகிறார். அன்பிற்கு அன்பும், இரக்கத்திற்கு மகிழ்வும் வெகுமதியாகக் கிடைக்கும். எதுவும் எம்மிடம் இருந்தால்தான் பிறருக்கு வழங்கமுடியும். கரங்கள் மூடியிருக்கும் வரை எதனையும் கொடுக்க முடியாது, பெற்றுக் கொள்ளவும் முடியாது. விரிக்கப்பட்ட கரம்தான் பெற்றுக் கொள்ளும் தகுதியைப் பெறுகிறது. பெற்றுக் கொள்வதில் இல்லாத பெருமையும், பேரின்பமும் கொடுப்பதில் இருக்கின்றது என்பதை இறைவன் கற்றுத் தருகின்றார். ஒவ்வொரு வினாடியும் மதிப்பிட முடியாத திறமைகளையும், நலன்களையும் இறைவனிடமிருந்து பெறுகின்றோமே அதற்கு நாம் புரியும் கைம்மாறு என்ன? கொடுப்பதற்கு என்னிடம் என்ன இருக்கின்றது என்று எவரும் தயங்கத் தேவையில்லை. இதயத்தில் சுரக்கின்ற அன்பை இயல்பாகக் கொடுக்க முன்வந்தால் அது எல்லாவற்றையும் வழங்கத் தயாராகிவிட்ட நிலைதான். யாரொருவர் மக்களுக்காகவும், சமூகத்திற்காகவும் தனது இதயத்தைத் திறந்து வைத்து உழைக்கின்றார்களோ அவர்களுடைய இதயத்தை செயற்கை மூலம் திறக்கவேண்டிய அவசியம் ஏற்படாது. மன்னிப்புக் கேட்கும் போது மனிதராகலாம், மனமுவந்து மன்னிக்கும் போது புனிதராகலாம். அன்பை அளவுகோலாக்குவோம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

## பத்தி எழுத்து

### ஜனநாயகம் என்று கூறுவதற்கும் தகுதி வேண்டும்

ஒரு ஜனநாயக நாட்டில் தமக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளுக்காக அகிம்சை வழியில் போராடுகின்ற உரிமை அந்த நாட்டு மக்களுக்கு உள்ளது. ஆனால் வெறும் வார்த்தையளவில் மட்டுமே ஜனநாயகம் என்ற வார்த்தையை உச்சரிக்கின்ற நாடுகளில் இதைக் காணமுடியவில்லை. ஆட்சியாளர்கள் நீதி, நியாயங்களை மறந்து தமது எண்ணம் போல நடந்து கொள்வதே இதற்கான காரணமாகும். முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான சுமார் 670 ஏக்கர் காணியை கடற்படையினரின் தேவைக்கென சுவீகரிக்கும் முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன. இதன் ஓர் அங்கமாகக் காணியை அளவீடு செய்வதற்கான முயற்சிகள் இடம் பெற்றபோது பாதிக்கப்பட்ட மக்கள் அதனைத் தடுத்து நிறுத்தியுள்ளனர். அந்த மக்களுக்கு உதவுவதற்கு எவருமே முன்வராத நிலையில் தாமே முன்னின்று இதைச் செய்து முடித்துள்ளனர். ஆனால் எதிர்காலத்திலும் இது சாத்தியப்படுமா? என்பதை நிச்சயமாகக் கூறமுடியாது. ஏனென்றால் அவர்களை வன்முறைகளைப் பயன்படுத்தி அடக்கியொடுக்குவதற்கான முயற்சிகளும் இடம்பெறலாம். போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைக் கடற்படையினர் ஒளிப்படம் எடுத்தமை அந்த மக்களை அச்சுறுத்துகின்றதொரு செயலாகும். இதனால் தாம் பாதிக்கப்படலாமென அந்த மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

சிரியாவில் அரசபடைகள் நடத்திய தாக்குதலில் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் என்பது வேதனைக்குரியது. இந்திய மாநிலங்களில் ஆட்சியாளர்களின் ஏவலர்களாகவே பொலிஸார் விளங்குகின்றனர். ஆட்சியில் இருப்பவர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பதையே இவர்கள் தமது முதன்மையான கடமைகளாகக் கொண்டிருக்கின்றனர். இதனால் ஜனநாயக ரீதியில் மக்கள் நடத்துகின்ற போராட்டங்களைக்கூடப் பொலிஸார் வன்முறைகளைப் பயன்படுத்தி அடக்கி ஒடுக்குகின்றனர்.

இலங்கையிலும் இத்தகைய நடவடிக்கைகள் அடிக்கடி இடம் பெற்று வருகின்றன. ஜனநாயகத்தின் காவலர்களாகப் பொதுமக்களே விளங்குகின்றனர். சகல ஜனநாயக உரிமைகளும் இவர்களைச் சென்றடையும் வண்ணம் ஆட்சியாளர்கள் நடந்து கொள்ள வேண்டும். இல்லையேல் ஜனநாயகம் என்ற பதத்தை உச்சரிப்பதற்குக் கூட இவர்கள் தகுதியில்லாதவர்களாகி விடுவார்கள்.

## வரலாற்றில் இன்றைய தினம் 26.02.2018



1616 - பூமி சூரியனைச் சுற்றி வருவதாக கலிலியோ கலிலி கற்பிப்பதனை உத்தியோகபூர்வமாக றோமன் கத்தோலிக்க திருச்சபை தடை செய்தது.

1909 - முதன் முதலாக வர்ணத் திரைப்படம் லண்டன் பலஸ் திரைப்பட மாளிகையில் திரை யிடப்பட்டது.

1993 அரசு பொருளாதாரத் தடையை விதித்துவிட்டு வடக்குக்கு மூன்றில் ஒருபகுதி உணவையே அனுப்புவதாகப் புள்ளி விவரங்களில் தகவல் தெரிவிப்பு.

2016 - மீள்குடியமர்வைப் பாதிக்காத வகையில் பலாலி வானூர்தித்தள விஸ்தரிப்பு மேற்கொள்ளப்படுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் மீள்குடியேற்ற அமைச்சர் உறுதிமொழி வழங்கினார்.

2016 - வடக்கில் இராணுவ முகாம்கள் படிப்படியாகக் குறைக்கப்படுமென வடக்கு ஆளுநர் தெரிவித்தார்.



2014 - விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் இரணைமடுக் குளம் குறித்து முடிவு எடுக்கப்படுமென கிளிநொச்சியில் சம்பந்தன் தெரிவிப்பு.

### நாளை

**27.02.2018**

செவ்வாய்க்கிழமை

**மாசி 15**

திதி: துவாதசி பி.ப. 01.56 வரை
நட்சத்திரம்: பூசம் பி.இ. 02.48 வரை
சுபநேரம்: 10.59–12.29 வரை
ராகுகாலம்: 03.29–04.59 வரை

# Jaffna Badminton Club

வட மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன்
பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலை
மாணவ மாணவிகளுக்கிடையிலான
17 - 20 வயதிற்குட்பட்டோருக்கான



## பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டி - 2018

எதிர்வரும் மார்ச் மாதம் 10ஆம் 11ஆம்
(சனி, ஞாயிறு) திகதிகளில்
நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

உங்கள் விண்ணப்பப்படிவத்தினை பெற்று பாடசாலை அதிபரின் கையொப்பத்துடன் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்பாக கீழ்க் கொண்ட முகவரிக்கு கிடைக்கபெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அனுமதி இலவசம்**

தொடர்புகளுக்கு: S.அறிவுச் செல்வன் - 077 757 0092
S.காண்டீபன் - 077 789 4924 cs.14218) (13.17)

**இல.43, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.**



## மாடிக் கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு



இலுப்பையடி சந்தியில்
முதலாம் மாடி 1800 சதுரஅடி,
இரண்டாம் மாடி 1800 சதுரஅடி
இரண்டு மாடிகளும் வாடகைக்கு
கொடுக்கப்படும்.

தொடர்பு
0777 111147 / 077 889 4200
(IN 5980)(10)



உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111



துணுக்காய் பிரதேசசபை
மல்லாவி சந்தைக் கடைத் தொகுதி கடைகளை
வாடகை அடிப்படையில் வழங்குவதற்கான

## பகிரங்க கேள்வி கோரல் 2018

**மல்லாவிச் சந்தைகடைத் தொகுதியிலுள்ள பின்வரும் கடைகளை வாடகை அடிப்படையில் பகிரங்கேள்வி கோரலில் வழங்குவதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன**

1. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை **"செயலாளர், பிரதேசசபை, துணுக்காய்"** என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு"** என்றமுகவரிக்கு நேரடியாகவோ அல்லதுபதிவுத் தபால் மூலமோ 13.03.2018ஆந் திகதி பிற்பகல் 01.00 முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
2. ஒப்பந்தம் மேற்கொண்டவராலேயே மேற்படி வியாபாரநிலையம் தொடர்ச்சியாக நடத்தப்படவேண்டும்.
3. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை ஒருவார காலத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்வதுடன் சபையுடன் ஓர் ஒப்பந்தமும் செய்யவேண்டும். தவறும் பட்சத்தில் தாமாகவே இதிலிருந்து விலகியதாகக் கருதி அடுத்த கேள்விதாரருக்குக் குறித்த நிலையம் வழங்கப்படும்
4. விண்ணப்பம் பெறவரும் போது தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் பிரதியுடன் வரவேண்டும்
5. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்குப் பூரண அதிகாரம் உண்டு.

**கேள்விப் படிவம் வழங்கப்படும் காலம் :- 26.02.2018 – 12.03.2018 பி.ப 3.00**
**கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி :- 13.03.2018 பி.ப 1.00 மணிவரை**
**கேள்வி திறக்கப்படும் திகதி :- 13.03.2018 பி.ப 1.05 மணி**

| கடை இல | ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா( வரிநீங்கலாக) | மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் (வரிநீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்விவைப்புபணம் ரூபா | மாதவாடகை ரூபா |
|---|---|---|---|---|
| GF10 | 420,000.00 | 500.00 | 5,000.00 | 3,750.00 |
| FF 6 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 7 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 8 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 9 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 10 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 11 | 240,000.00 | 500.00 | 5,000.00 | 2,000.00 |
| FF 12 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |

**க. தனபாலசிங்கம்**
**செயலாளர், பிரதேசசபை, துணுக்காய்** (IN/5970)(11,17)


## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் சின்னப்பு
### சங்கரப்பிள்ளை

கடந்த 27.01.2018 சனிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியையில் கலந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், தொலைபேசியினூடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பதாகைகள் மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் அன்னாரின் வீட்டுக்கிரியைகள் இன்று (26.02.2018) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். **இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

பிறப்பு
18.04.1937

இறப்பு
27.01.2018

கற்குளி வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(CS/14249)(11,17)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் புவனேந்திரன்

*(ஓய்வு பெற்ற விமானப்படை அதிகாரி).*
*(இரத்மலானை - மொறட்டுவை இந்து மாமன்றம் செயலாளர்)*
*(EX airforce regiment member's club treasurer)*



மணியம் வீதி, தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை திருமண பந்தத்தில் புகுந்த இடமாகவும் மொறட்டுவை சொய்சாபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் புவனேந்திரன் கடந்த (23.02.2018) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் தேவராஜீனியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஆறுமுகம் - புவனேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற செல்லத்துரை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் ஜெயப்பிரஷான் (Virtusa), ருக்ஷானி (வவுனியா வளாகம்), சஞ்சித்(SLIIT) ஆகியோரின் பாசமிகு தந்தையும் புவனசந்திரன் (Canada), புவனரவீந்திரன் (Canada), புவனயோகேஸ்வரன் ( சுன்னாகம்), புவனரஞ்சிதன் (Lodan), மீனலோஜினி (தெல்லிப்பழை), சுஜாதா (Swiss) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தேவகுணாளன், தேவலோகேஸ்வரன், இராஜலிங்கம், தேவநாயகி, நவரத்தினம், தேவநங்கை, யோகராஜா, தேவகௌரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சுன்னாகம் அந்தோனியார் வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2018) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 833 42 25**

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

### நாகரத்தினம் இந்திரநேசன்

**(ஓய்வு பெற்ற கணித ஆசிரியர்)**



இமையாணன் மேற்கு, சந்தை வீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், நாகலிங்கசுவாமிகள் வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் இந்திரநேசன் நேற்று (25.02.2018) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்புமகனும் சின்னராசா காலஞ்சென்ற தங்கரத்தினம் தம்பதியரின் அன்புமருமகனும் லலிதா அவர்களின் அன்புக்கணவரும் ராதிகா, சசிலேகன் (Finland), சத்தியரூபி, ஜனரம்யா ஆகியோரின் அன்புத்தந்தையும் மகாநேசன் (ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்) சுதந்திவதனா, பாக்கிய வதனா ஆகியோரின் அன்புச்சகோதரரும் அபயகுமார் காலஞ்சென்ற அஜந்தன் மற்றும் சஞ்ஜீவினி ஆகியோரின் அன்புமாமனாரும் தனுபன், சத்தியவாணி, சக்திக்குமார், கிருஜன் ,யபிசன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2018) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாகலிங்கசுவாமிகள் வீதி,**
**சங்கானை.**

(cs4087)(17.8)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

## ஜானகிஅம்மா விஸ்வநாதசர்மா



ஆண்டொன்று போனாலும் துயரம் ஆறவில்லை.
அன்பான மனைவியாய், ஆருயிர் அம்மாவாக
ஆதரிக்கும் மாமியாராக ஆசைப் பேர்த்தியாராக
பண்பான இசை ஆசிரியையாக பலரும் போற்றும் பண்பாளராக
பலனை எதிர்பாராமல் பக்குவமாய்
யாவருக்கும் தான் அறிந்த மருத்துவ கருத்துக்களை
கூறி காவல் தெய்வமாக இருந்தாய்.
ஈற்றில் அந்தக்காவல் தெய்வங்களின்
பாதத்தில் சரணாகதி ஆனாய். என்ன செய்வோம்
கீதா சாரத்தில் சொன்னபடி நீ எதைக்
கொண்டுவந்தாய் இழப்பதற்கு இது
எப்பவோ முடிந்த கதை என்பதை மனதில்
உறுத்தி உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

திதி:-
பூர்வபக்க துவாதசி



இல.67, சுதுமலை,
மானிப்பாய் வீதி, தாவடி.

குடும்பத்தினர்.
077 913 6596, 021 222 7797

(CS/14188)(11,17)


# அய்வா தாதியார் பாடசாலை

Registered with TVEC
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION SRI LANKA

சாதாரணதரப் பரீட்சையின் பின் ஒருவருட தாதியார்
பயிற்சிப் பாடநெறி

பயிற்சி நெறியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்யும்
மாணவர்களுக்கு TVEC நிறுவனத்தினால் NVQ சான்றிதழ் வழங்கப்படும்

நாடு முழுவதும் அமைந்துள்ள ஆய்வுகூட
உதவியாளர் வெற்றிடங்களை நிரப்பும் முகமாக...
ஆய்வுகூட உதவியாளர் பயிற்சி நெறி



IVA NURSING SCHOOL

IVA தாதியர் பாடசாலையானது
O/L, A/L தகுதியுடைய
மாணவர்களை இனங்கண்டு
அவரகளுக்கான..

01. Nursing (O/L - 5S)
02. MLT (A/L - Bio)
03. Pharmacist (A/L - Bio 3S or O/L - 5S)

கல்விகளை ஒரு வருட காலத்திற்கு
குறைந்த கட்டணத்தில் முறையாக வழங்கி
அரச, தனியார் வைத்தியசாலைகளில்
அதிக சம்பளத்துடன் தொழில்
வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கின்றது.

வட கிழக்கு மாகாணங்களில் கடந்த 7
வருட காலமாக மிகவும் பிரபல்யமான எமது
IVA தாதியர் பாடசாலையானது. அரச
TVEC அங்கீகாரம் பெற்றுள்ளதுடன்
NVQ Level
தரச் சான்றிதழ்களையும் வழங்குகின்றது.

பிரதான காரியாலயம்:
மட்டக்களப்பு
28, பார் வீதி, மட்டக்களப்பு.
071 8722352 / 065 2229666

Hotline
0717 140000
0710 770770

யாழ்ப்பாணம்
323, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
071 8722350

கல்முனை
76ஏ, பொலிஸ் நிலைய வீதி,
கல்முனை
071 9926682 / 067 2226900

வவுனியா
36/1, 38/1, இரண்டாம்
குறுக்குத்தெரு, வவுனியா.
071 8722351

web: www.myhopegroup.com, Email: nadheer1976@yahoo.com


# மரண அறிவித்தல்



பிறப்பு
10 . 02 . 1924

இறப்பு
23 . 02 . 2018

## திருமதி சின்னம்மா சிற்றம்பலம்

மண்டைதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.54/6A சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குளியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா சிற்றம்பலம் 23.02.2018 வெள்ளிக்கிழமை காலை 4.30 மணியளவில் இயற்கை மரணம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்வம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி சின்னத்தம்பி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிற்றம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவதேவி (மண்டைதீவு), சரவணப்பெருமாள் (உரும்பிராய்), காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் சிவமணிதேவி (பாண்டியன்தாழ்வு), சிவமலர் (மண்டைதீவு), சிறிகோபால் (சிறி - டென்மார்க்), சியாமளா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, வேதநாயகி, சிவக்கொழுந்து, சோதிலிங்கம், சிரோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தேவராசா (சீனியர்) மற்றும் லலிதாம்பிகை ( உரும்பிராய்), ரவீந்திரராசா (பாண்டியன்தாழ்வு), சண்முகராசா (மண்டைதீவு), கமலராணி (டென்மார்க்), சுந்தரவடிவேல் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தேவமேனன் (டென்மார்க்), கிருஷ்ணமாலா (சுவிஸ்), கிருஷ்ணவாணி (வாதரவத்தை), தேவசீலன் (சுவிஸ்), தேவபாலன் (கனடா), தேவகபிலன் (லண்டன்), கிருஷ்ணப்பிரியா (வவுனியா), வித்தியா (லண்டன்), கீர்த்திகா (லண்டன்), கௌதமி (லண்டன்), காலஞ்சென்ற ராஜ்மோகன் மற்றும் கம்ஷவதனி (கனடா), குஜிந்தன் (பிரான்ஸ்), நிலானி (டென்மார்க்), நிசானி (டென்மார்க்), டிலக்ஷன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், கமிலா, டானியல், யசிக்கா, தனுராஜ், காபிஸ்ராஜ், பிருந்தாவன், லுகானா, சோபிதன், சகானா, தர்சனா, தர்வின், தேனுஜன், தஸ்வின், திவ்வியன், நச்சுனா, ஜெஸ்மிதா, அனந்திகா, தேனுஜா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (26.02.2018) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மண்டைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.54/6 A, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(CS/14213)(11,17)


தகவல்:
குடும்பத்தினர்.

சரவணப்பெருமாள் (மகன்) - 077 129 0282, சிறிகோபால் (சிறி - மகன்) - +45 7158 2171, சிவமணிதேவி (மகள்) - 021 320 5673

# மரண அறிவித்தல்

## முருகேசு கோபாலப்பிள்ளை

**(ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதியும்**
**காவியா மருத்துவமனை உரிமையாளரும் - உருத்திரபுரம்)**



யாழ்.நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கோபாலப்பிள்ளை நேற்று (25.02.2018) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் முருகேசு - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரணசிங்க - அவிஸ் தம்பதிகளின் அன்பு மருமகனும், ஞானவதி (ஓய்வுபெற்ற தாதி, கிளிநொச்சி) அவர்களின் அன்புக் கணவரும், பிரதீபா (கிளிநொச்சி), Dr.பிரசாந் (கிளிநொச்சி வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரனின் (பெரிய குட்டி) அன்பு மாமாவும், அருளம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து, மார்க்கண்டு, சரஸ்வதி (தவம்) மற்றும் செல்லம்மா (மணி - பிரான்ஸ்), மங்கையற்கரசி (மலர் - உருத்திரபுரம்), காலஞ்சென்ற சண்முகரத்தினம் மற்றும் சரவணபவன் (மாணிக்கம் - பிரான்ஸ்), தர்மரட்ணம் (தருமு - பிரான்ஸ்), லோகநாதன் (லோகன் - சரவணாஸ் உரிமையாளர் - கிளிநொச்சி), கோகிலகௌரி (கௌரி - வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஞானசௌந்தரி (ஓய்வுபெற்ற ஆசிரியை, லண்டன்), காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் யோகம்மா (ஆஸ்திரேலியா), மனோராமா (உருத்திரபுரம்), காலஞ்சென்ற இரத்தினம் (கிளாக்கர்) மற்றும் சுப்பிரமணியம் (பிரான்ஸ்), குலேந்திரதாசன் (தாசன் - ஓவசியர் - உருத்திரபுரம்), திலகவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை), பத்மாதேவி (பிரான்ஸ்), திலகராணி (பிரான்ஸ்), மனோரஞ்சி (கொழும்பு), உதயகுலசிங்கம் (அதிபர், புளியங்குளம்) சூரியகாந்தி (நாவலப்பிட்டி), பத்மினி (நாவலப்பிட்டி), காலஞ்சென்ற லெஸ்லி மற்றும் அனுரா (நாவலப்பிட்டி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காவியன், அட்சயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.02.2018 புதன்கிழமை காலை 7 மணியளவில் நடைபெற்று பூதவுடல் அஞ்சலிக்காக உருத்திரபுரம் வைத்தியசாலையில் நண்பகல் 12 மணியளவில் வைக்கப்பட்டு பின்னர் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் உருத்திரபுரம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.63, அண்ணாவீதி,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.

(C/33145)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

+94 77 381 5631, +94 77 313 1934, +94 77 616 7805,
+94 76 968 6474, +94 77 360 2261, +94 77 588 7175





# மறைந்தார் ஸ்ரீதேவி

தமிழ், ஹிந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் நடித்த பிரபல நடிகை ஸ்ரீதேவி துபாயில் மாரடைப்பால் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சிவகாசியை சொந்த ஊராகக் கொண்டவர் ஸ்ரீதேவி. இவர் 4 வயதிலேயே திரைப்படத் துறையில் நுழைந்தவர். தமிழில் வெளியான துணைவன் என்ற படத்தில் முருகக் கடவுள் கதாபாத்திரத்தில் நடித்தார். தொடர்ந்து பல்வேறு திரைப்படங்களில் நடித்தார். தமிழில் 16 வயதினிலே மூன்றாம் பிறை, மீண்டும் கோகிலா, பிரியா, சிவப்பு ரோஜாக்கள், வறுமையின் நிறம் சிவப்பு உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். கமல், ரஜினி உள்ளிட்ட முன்னணி நடிகர்களுடன் நடித்து புகழ் பெற்றவர். திருமண நிகழ்வுவொன்றில் பங்கெடுப்பதற்காக துபாய் சென்ற வேளையிலே, அங்கு மாரடைப்பால் உயிரிழந்தார். ஸ்ரீதேவியின் மறைவுக்கு பலரும் தத்தமது இரங்கலைத் தெரிவித்துள்ளனர்.

## ஸ்ரீதேவியின் மறைவுக்கு திரையுலகம் இரங்கல்

மாரடைப்பால் உயிரிழந்த ஸ்ரீதேவிக்கு, திரையுலகம் தனது இரங்கலைத் தெரிவித்துள்ளது. தென்னிந்திய நடிகர் சங்கம், "அவரது இடத்தை யாராலும் நிரப்ப முடியாது. அவர் ஒரு சிறந்த நடிகை" என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளது. "ஸ்ரீதேவியின் மறைவை பார்க்க நேர்ந்தது கொடுமைதான்" என்று நடிகர் கமல் தனது இரங்கல் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். "வாழ்க்கை மிகக்குறுகியது. கணிக்க முடியாதது என்பதை அவரது சாவு உணர்த்தியுள்ளது. அவரது மறைவால் அதிர்ச்சியடைந்தேன். அவரது ஆன்மா அமைதி அடையட்டும்" என நடிகை திரிசா தெரிவித்துள்ளார். "ஸ்ரீதேவி மறைந்து விட்டார் என்ற செய்தியால் மனமுடைந்து விட்டது. இந்த செய்தி என்னை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. அவரது ஆன்மா அமைதியில் ஆழட்டும்" என நடிகை பிரீத்தி ஜிந்தா குறிப்பிட்டுள்ளார். "எனக்கு வார்த்தைகள் இல்லை. ஸ்ரீதேவி மீது அன்பு செலுத்தியவர்கள் அனைவருக்கும் எனது இரங்கல்கள். இது ஒரு கறுப்புதினம்" என நடிகை பிரியங்கா சோப்ரா தெரிவித்துள்ளார்.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் மீது பலரும் நல்ல எண்ணம் கொள்வர். மனதில் புதிய உற்சாகம் பிறக்கும். தொழில், வியாபாரத்தில் உருவான குறுக்கீடு விலகும். ஆதாயம் அதிகரிக்கும்.

**இடபம்:** சிலர் உங்களிடம் பொறாமை கொள்ளலாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப்போட்டி உருவாகும். அதிக உழைப்பால் உற்பத்தி விற்பனை சீராகும்.

**மிதுனம்:** உங்கள் செயல்களில் வசீகரம் உண்டாகும். புதியவர்களின் அறிமுகத்தால் நன்மை கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.

**கடகம்:** அவசரப்பணி குறுக்கிடலாம். அக்கம் பக்கத்தினருடன் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாக்கவும்.

**சிங்கம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டால் நன்மை பெறுவீர்கள். திட்டமிட்ட பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அனுகூலம் ஒரு சேர கிடைக்கும்.

**கன்னி:** திட்டமிட்ட பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். வாழ்வில் இனிய அனுபவம் கிடைக்க பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி கண்டு மகிழ்வீர்கள்.

**துலாம்:** எதிர்மறையாக பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் நிதானம் கடைபிடிக்கவும். பணவரவில் தாமதம் இருக்கும்.

**விருச்சிகம்:** மனஉறுதியுடன் செயல்படுவீர்கள். நேர்மை எண்ணம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குறையை சரி செய்வதால் விற்பனை சீராகும்.

**தனுசு:** உங்களால் பலன் பெற்று நன்றி மறந்தவரை மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி திருப்திகரமாக இருக்கும்.

**மகரம்:** குழப்பம் நீங்கி மனதில் தெளிவு பிறக்கும். எதிலும் சமயோசிதமாக செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும்.

**கும்பம்:** எவரிடமும் ரகசியம் சொல்ல வேண்டாம். தொழிலில் விற்பனை சுமாராக இருக்கும். மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிவிஷயமாக வெளியூர் செல்வர்.

**மீனம்:** திட்டமிட்ட பணியை நிறைவேற்ற கூடுதல் அவகாசம் தேவைப்படும். எவரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழிலில் ஆதாயம் சுமாராக இருக்கும்.

எல்லா விளையாட்டுகளிலும் தவறாமல் கலந்து கொள்கிறது வெற்றியும் தோல்வியும்.

**முரண்**

அடர்ந்த கரும்புகையை வெளியேற்றிக் கொண்டு முன்னால் சென்ற வாகனத்தின் பின்னால் எழுதியிருந்தது 'வாழ்க வளமுடன்'

அனுதாபத்தால் வாய்ப்பு வேண்டுமானால் கிடைக்கலாம், ஒரு போதும் வெற்றி கிடைக்காது!!

twitter

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | 4 | 3 | | |
| | | 1 | 2 | | 5 | | | 8 |
| 3 | | | | | | | | |
| | | | | | 8 | | 7 | |
| | | | | 9 | 2 | | | 6 |
| | 4 | | | | | 9 | | |
| 8 | | 4 | | | 9 | | | 2 |
| | | 5 | | | | | | |
| 7 | | | 3 | | | | 1 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 9 | 5 | 8 | 1 | 4 | 6 | 7 |
| 8 | 5 | 6 | 2 | 4 | 7 | 1 | 3 | 9 |
| 4 | 1 | 7 | 3 | 6 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 7 | 2 | 8 | 9 | 6 | 3 | 1 | 4 |
| 1 | 9 | 8 | 4 | 2 | 3 | 5 | 7 | 6 |
| 3 | 6 | 4 | 1 | 7 | 5 | 2 | 9 | 8 |
| 7 | 2 | 5 | 9 | 1 | 8 | 6 | 4 | 3 |
| 6 | 4 | 3 | 7 | 5 | 2 | 9 | 8 | 1 |
| 9 | 8 | 1 | 6 | 3 | 4 | 7 | 2 | 5 |

நேற்றைய விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

**ஒருத்தன் தனிமையில் மொபைலைப் பார்த்துச் சிரித்தால்**




**அதற்குக் காரணம் காதல் இல்லை... 'மீம்ஸ்....'**

**இழப்புக்களும் நன்றே..**

இழந்தவை எல்லாம் திரும்பத் தா இறைவா!
இழந்தவை எல்லாம் திரும்பத் தா எனக் கேட்டேன்..
இழந்தவை எவை என இறைவன் கேட்டான்..
பலவும் இழந்திருக்கிறேன் கணக்கில்லை என்றேன்..
பட்டியல் ஒன்றிட்டுச் சொல்லவா இயலும்?
கால மாற்றத்தில் இளமையை இழந்தேன்..
கோலம் மாறி அழகையும் இழந்தேன்..
வயதாக உடல் நலம் இழந்தேன்..
எதை என்று சொல்வேன் நான்..
இறைவன் கேட்கையில்?
எதையெல்லாம் இழந்தேனோ
அதையெல்லாம் மீண்டும் தா என்றேன்,
அழகாகச் சிரித்தான் இறைவன்.

கல்வி கற்றதால் அறியாமையை இழந்தாய்..
உழைப்பின் பயனாய் வறுமையை இழந்தாய்..
உறவுகள் கிடைத்ததால் தனிமையை இழந்தாய்..
நல்ல பண்புகளால் எதிரிகளை இழந்தாய்..
சொல்ல இன்னும் பல உண்டு இதுபோல..
தரட்டுமா அனைத்தையும் திரும்ப என்றான்..
திகைத்தேன்!
இழப்பின் மறுபக்கம் எதுவென்று உணர்ந்தேன்..
வாழ்க்கையின் ஓட்டத்தில் இழப்பும் பேறு தான்..
இழந்ததை அறிந்தேன் இதயம் தெளிந்தேன்..
இறைவன் மறைந்தான்..





# நீல நரி

நரி ஒன்று இரைதேடித் திரிந்தது. அது வழி தவறிக் காட்டைவிட்டு ஊருக்குள் புகுந்தது. நரியைக் கண்ட ஊர் மக்கள் அதனை விரட்டத் தொடங்கினர். நரி தப்பித்து தலைதெறிக்க ஓடியது. அப்போது எதிரே கண்ணில்பட்ட ஒரு வீட்டுக்குள் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப் புகுந்தது. அது துணிகளுக்கு சாயம் தோய்ப்பவனின் வீடாகும். அந்த வீட்டின் ஒரு மூலையில் நரி ஒளிந்து கொண்டது. சிறிது நேரத்தின் பின் தன்னைத் துரத்தியவர்கள் தொடர்ந்து வரவில்லை என்பதை உணர்ந்து கொண்ட நரி வெளியே செல்வதற்காக சட்டென்று எழுந்தது. அப்போது மேலே ஒரு தட்டில் வைக்கப்பட்டிருந்த சாயப் பாத்திரம் கவிழ்ந்து நரியின் தலைமேலே அதனுள் இருந்த நீல நிறச் சாயமெல்லாம் கொட்டியது.

இப்போது நரி முற்றிலும் நீல நிறமாயிற்று. நரி எழுந்து காட்டை நோக்கி ஓடியது. காட்டினுள் நரிக்கு எதிரே வந்த மிருகங்களெல்லாம் அதனை ஏதோ விசித்திர மிருகம் வந்திருக்கிறது என்று நினைத்துப் பயந்து ஓடின.

மிருகங்கள் எல்லாம் தன்னைப் பார்த்து ஓடுவதன் காரணம் நரிக்குப் புரியவில்லை. நரிக்குத் தாகமெடுத்தது. அருகில் இருந்த குளத்துக்கு தண்ணீர் குடிக்கச் சென்றது. அப்போது தன் உருவத்தை நீரில் பார்த்தது நரி. தன்னைப் பார்த்து விலங்குகள் பயந்தோடும் காரணத்தை நரி புரிந்துகொண்டது. "ஓ என்மேல் சாயம் கொட்டியதால் என்னில் இவ்வளவு மரியாதையா?" என்று நினைத்து ஆச்சரியப்பட்டது.

அதன் மனதுக்குள் ஒரு திட்டம் உருவானது. உடனே குன்று ஒன்றின் மேல் ஏறி நின்று நரிகளுக்கல்லாத புதுவிதமான ஒலி ஒன்றை எழுப்பியது. "வன விலங்குகளே உங்கள் அரசன் உங்களை அழைக்கிறேன்" என்றது.

காட்டு மிருகங்கள் அங்கே கூடிவிட்டன. நீலநரி பேசியது. "நான் கடவுளின் தூதன். உங்களை ஆள்வதற்காக கடவுளால் அனுப்பப்பட்டுள்ளேன். எல்லோரும் என்னை வணங்குங்கள்" என்றது. மிருகங்களும் நீலநரியை வணங்கின. அப்போது நரி "நான் இங்கே குகையினுள் தங்கப் போகிறேன். தினமும் எனக்காக உணவை நீங்களே தேடி வந்து தர வேண்டும்" என்றது. மறுநாள் முதல் குகையில் இருந்த நரிக்கு எல்லா மிருகங்களும் போட்டிபோட்டு உணவளித்தன.


நரி ராஜபோகத்தில் மரியாதையில் திளைத்தது. இருந்த இடத்தில் தின்று கொழுத்தது. சிங்கம், புலி கூட நரியின் வாழ்வைக் கண்டு பொறாமை அடைந்தன.

ஆனால் கடவுளின் தூதன் என்பதால் அதற்குப் பயந்து அவையும் நரிக்கு சேவகம் செய்தன. இப்படியே நாள்கள் கடந்தன. மழைக்காலம் நெருங்கியது. வானம் மேக மூட்டமானது. குளிர் காற்று வீச மழை பெய்ய ஆரம்பித்தது. காட்டுக்குள் நரிகளெல்லாம் மகிழ்ச்சியில் ஊளையிடத் தொடங்கின. குகையினுள் இருந்த நீல நரியும் வெளியே வந்து



குன்றின் மேல் ஏறி நின்று தன்னை மறந்து ஊளையிடத் தொடங்கியது. அப்போது கடுமையான மழை பெய்ய நரியின் சாயம் வெளுத்துப் போனது. "அட இது நரிதான். எம்மைப் போல ஊளையிடுகிறது. நீலநிறமும் கலைந்துவிட்டது. இந்த நரியின் போலி வேடத்தில் நாம் ஏமாந்துவிட்டோம் என்று கோபம் கொண்ட மிருகங்கள் எல்லாம் நரியை ஓட ஓட விரட்டியடித்தன. அதன் பின்னர் நரி காட்டுக்குத் திரும்பவேயில்லை.

**பலநாள் கள்வன் ஒருநாள் அகப்படுவான்.**



## தொடர் மொழிக்கு ஒரு மொழி



1. தாய் தந்தையரை இழந்தவன் – அநாதை
2. முனிவர்கள் வாழும் இடம் – ஆச்சிரமம்
3. சுதந்திரமற்று வாழ்பவன் – அடிமை
4. கடவுள் இல்லை என்பவன் – நாத்திகன்
5. வழக்கைத் தாக்கல் செய்வன் – வாதி
6. வழக்கில் குற்றம் சாட்டப்படுபவன் – பிரதிவாதி
7. சிறைத்தண்டனை பெற்றவன் – கைதி
8. பேருந்தில் பயணச்சீட்டு வழங்குபவர் – நடத்துநர்
9. வீண் செலவு செய்பவன் – ஊதாரி
10. வாகனத்தைச் செலுத்துபவன் – சாரதி
11. தேர்தலில் போட்டியிடுபவர் – வேட்பாளர்
12. தேர்தலில் வாக்களிப்பவர் – வாக்காளர்
13. மாநகர சபையொன்றின் தலைவர் – மேயர், முதல்வர்
14. கணவனை இழந்த பெண் – விதனை
15. மனைவியை இழந்த ஆண் – தபுதாரன்
16. வாழ்நாளில்திருமணம்செய்யாத ஆண் – பிரம்மச்சாரி
17. திருமண வயது கடந்தும் திருமணம் செய்யாத பெண் – முதிர்கன்னி
18. கடற்கரையில் மீன்பிடித்தொழிலாளர் தங்கியிருக்கும் இடம் – வாடி
19. கோட்டையைச்சுற்றியுள்ள ஆழமான நீர்நிலை – அகழி
20. இல்லை என்று கூறாது பிறகுக்கு வாரி வழங்குபவன் – வள்ளல்.

## விடியல்

செக்கச் சிவந்த
செங்கதிரோனும்
கிழக்கினில்
வந்துவிட்டான் - புவி
மக்கள் கண் விழித்துக்
கிளம்பிட
வானில் உதித்து விட்டான்


கொக்கரக் கோவெனக்
கோழியும் கூவுது
கொக்கோடு பற்பல
புட்களும் மேவுது
சக்கரம் போலவே ஜகம்
சுழன்றாடுது
தங்கி நின்ற இருள்
சொல்லாமல் ஓடுது








## வழிகாட்டுவோம்





முன்பொரு நாள் நான், ஒரு தாய் தனது குழந்தையைக் குளிப்பாட்டுவதற்காக ஆயத்தம் செய்த சிறிய நீர்த்தொட்டி (பேசின்) ஒன்றினுள் இருந்தேன். குழந்தையை நீராட்டி முடிந்ததும் என்னை வடிகாலில் கொட்டினாள். நான் வடிகாலில் ஓடிச் சென்று அங்கு நின்ற ஒரு மரத்தின் அண்டையில் இருந்த நிலத்தை அடைந்தேன். இவ்வாறு மண்ணினுள் இருந்த நான் சில நாள்களின் பின்னர் ஒரு மரத்தின் வேரினூடாக உறிஞ்சப்பட்டுப் பின்னர் அம்மரத்தின் இலையினூடாக வெளியேறினேன். பின்னர் காற்றில் மிதந்து சென்று முகிலொன்றினுள் சேர்ந்து கொண்டேன். என்னைப் போன்ற பலர் அங்கு என்னுடன் சேர்ந்து கொண்டார்கள். சிறிது காலம் வானத்தில் மிதந்து கொண்டிருந்தேன். ஒருநாள் மழையாக மீண்டும் நிலத்தை அடைந்தேன். கற்களுக்கு இடையே புகுந்து விளையாடினேன். பின்னர் ஒரு தொட்டியை அடைந்து அங்கிருந்து ஒரு சிறிய குழாயினூடாக புகுந்து சென்று ஒரு தேநீர் கேத்தலினுள் இருக்கிறேன். இனி ஆவியாகி மீண்டும் மேலே செல்வேனோ? கொஞ்சம் பொறுத்தே பார்க்க வேண்டும். எங்கே தான் நான் போனாலும் மீண்டும் மீண்டும் பூமிக்கு உங்களைச் சந்திக்க வந்து கொண்டே இருப்பேன்.

## நீர்த்துளியின் கதை

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் யாழ்ப்பாணம்

### வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2018

**11.03.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு எதிர்வரும் 11.03.2018 ஞாயிற்றுக் கிழமை மு.ப. 9 மணிக்கு கல்லூரியின் சபாலிங்கம் அரங்கத்தில் நடைபெறவுள்ளது. பழைய மாணவர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

"எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்
எமது அன்னை நின்நிலம் மறவோம்"

25.02.2018 — த. சிவரூபன்
யாழ்ப்பாணம். — செயலாளர்


## ஆணையாளர்களை...

நிமல்கா பெர்னாண்டோ, பாதுகாப்புத் தரப்பின் சார்பில் வான் படையின் சட்டஆலோசகராகச் செயற்படும் மொகான் பி பீரிஸ், மட்டக்களப்பைச் சேர்ந்த ஜயதீபா, ரகீம் முல்லைத்தீவைச் சேர்ந்த வேந்தன் ஆகியோர் அரசமைப்புச் சபையால் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர். அரசமைப்புச் சபையின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டுள்ளேன் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். அதேவேளை, காணாமற்போனோர் பணியகத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள ஆணையாளர் மற்றும் உறுப்பினர்களுடனான சந்திப்பு இந்த வாரம் இடம்பெறவுள்ளது. (ற-5)

## பொன்சேகாவுக்கு...

கையை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அடியோடு நிராகரித்துள்ளார்.

அதனாலேயே நேற்று நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தின்போது மேற்படி பதவி தலைமை அமைச்சர் ரணிலுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதுவும் தற்காலிக ஏற்பாடு என்றே கூறப்படுகின்றது. பொன்சேகாவுக்கு சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் அரச தலைவரிடம் நேரடியாகவே எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். மகிந்த அணியும் போர்க்கொடி தூக்கியிருந்தது. அந்தப் பதவி வழங்கப்பட்டால் கடந்த ஆட்சியாளர்களைப் பழிவாங்கும் வகையில் அவர் செயற்படலாம் என்ற அச்சத்தாலேயே இவ்வாறு எதிர்ப்புகள் குவிந்தன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற-5)

## சிரியாவில்...

யான போர் நடைபெற்றுவந்த நிலையில் அடுத்த ஒரு மாத காலத்துக்கு சிரியாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 'கவுடா' நகரில் கடந்த ஒரு வாரத்தில் இடம்பெற்ற தாக்குதலில் சுமார் 600க்கும் குறையாத மக்கள் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் சுமார் 60 வீதமானோர் குழந்தைகள். இதையடுத்து அங்கு போர் நிறுத்தத்தைச் செய்ய ஐ.நா. சபை கடுமையாக முயற்சித்து வந்தது. எதுவும் பயனளிக்கவில்லை. ரஷ்யா முட்டுக்கட்டையாக அமைந்தது. ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட உடன்பாட்டை அடுத்து அங்கு 30 நாள்களுக்கு போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

(தொடர்புடைய செய்தி பக்கம் 14)

## 'கேலிக் கூத்து'...

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் அவரின் கருத்தைக் கேட்டபோதே, 'கேலிக் கூத்து' இதைவிட ஒன்றும் சொல்வதற்கில்லை என்று அவர் குறிப்பிட்டார். (ற-5)


கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 259
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.02.25
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்போட்
ரூ. 85,812,820/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
T 32 72 76 80
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 179
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.02.25
இன்றைய ஜக்போட் பரிசு
ரூ. 52,913,075/-
வெற்றி இலக்கங்கள்
09 49 58 70 D
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 25.02.2018 | வெற்றி வாரம் 2255 | வர்ணம் ஊதா
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 02 16 32 43
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 12, 187, 092/=
2018.02.27 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919


## மரண அறிவித்தல்கள்

### தியாகராஜகுருக்கள் பாலசுப்பிரமணியக்குருக்கள்

*(குருணாகல் ஸ்ரீ செல்வவிநாயகர் கோயில் பிரதம குருக்கள்)*



மாலுசந்தியைப் பிறப்பிடமாகவும் குருணாகலை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜகுருக்கள் பாலசுப்பிரமணியக்குருக்கள் கடந்த (24.02.2018) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜ குருக்கள் - மகாவல்லிஅம்மா தம்பதிகளின் அன்பு மகனும் பத்மநாயகியின் அன்புக்கணவரும் விஜயலட்சுமி, வாமதேவசர்மா ஆகியோரின் அன்புத்தந்தையும் லோகேஸ்வரசர்மா, மதுரா ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான ஸ்ரீபதிசர்மா(ஆயுள்வேதவைத்தியர்)-லட்சுமிஅம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியசர்மா மற்றும் சதாசிவசர்மா, செல்லப்பாக்குருக்கள் தவமணிஅம்மா, காலஞ்சென்ற நடராஜக் குருக்கள் மற்றும் நகுலாம்பிகை அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பரமேஸ்வரி, சரஸ்வதி, சச்சிதானந்தசர்மா, காலஞ்சென்ற கிருஸ்ணானந்தசர்மா (விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்) மற்றும் அமுதாம்பாள், கமலாம்பாள் ஆகியோரின் மைத்துனரும் கணேசாளினி, ஐஸ்வர் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு துன்னாலையில் நடைபெற்று பூதவுடல் கியான்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இந்திரஅம்மன் கோயிலடி,**
**துன்னாலை வடக்கு, கரவெட்டி.**
(CS 14253/15/17)

**தகவல்: குடும்பத்தினர்**
**021 226 3808**

### திருமதி சிவபாக்கியம் எதிர்மன்னசிங்கம்



*தோற்றம் 29.02.1942 — மறைவு 25.02.2018*

யாழ். அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் கிழக்கையும் தற்போது வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் எதிர்மன்னசிங்கம் நேற்று (25.02.2018) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற எதிர்மன்னசிங்கத்தின் (முன்னாள் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கொள்வனவு உத்தியோகத்தர், வவுனியா) அன்புமனைவியும் காலஞ்சென்ற முருகேசு - மாணிக்கம் தம்பதிகளின் புதல்வியும் பத்மநாதன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர் மின்சார சபை, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சபாநாதன் (நிர்வாக உத்தியோகத்தர் வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), சிவநாதன் (பண்டாரிக்குளம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிறீசக்திவேல் (முகாமைத்துவ உதவியாளர், சுகாதாரத் திணைக்களம், வவுனியா), ஜெயவேல், சங்கரவேல், ஆனந்தவேல், காலஞ்சென்ற சிவமதி மற்றும் சிவரூபவேல், முருகவேல் பத்மாவதி, பரமவேல் (முகாமைத்துவ உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம், வவுனியா வடக்கு), கௌரி மலர்விழி ஆகியோரின் அன்புத் தாயும் சிவமலர், ராசராணி, ரவிகாந்தன், ஜசிந்தா, டினேசா, யோகராசா வாசுகி (ஆசிரியர் - வ/கந்தபுரம் வாணி வித்தியாலயம்), சுதர்சன், சிவதர்சன் ஆகியோரின் அன்புமாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2018) செவ்வாய்க் கிழமைமு.ப. 9.00மணிளவில்அவரதுவவுனியா. வைரவப்புளியங்குளம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**123, புகையிரத நிலைய வீதி,**
**வவுனியா.**

**077 355 9883 (சிறி),**
**077 798 9357 (பரமு)**

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினபூபதி தனராசா

*(கமலம்)*

*(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், சுன்னாகம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)*



இணுவில் மேற்கு, வட்டுவினியைப் பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி இரத்தினபூபதி தனராசா நேற்று (25.02.2018) ஞாயிற்றுக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-கண்மணிதம்பதிகளின் அன்பு மருமகளும் தனராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசதுரை, திருவிளங்கம் மற்றும் திருஞானசோதி, சிவசோதி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பொன்மணி மற்றும் நகுலாதேவி, காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் ரேணுகாதேவி, காலஞ்சென்ற லங்காதேவி மற்றும் அம்பிகாதேவி, தர்மதேவி, செல்வராஜா, ஜெயராஜா ஆகியோரின் மைத்துனரும் நிர்மலா, மதிவளன், திவாகரன், சாந்தகுணாகரன் சோகீரன், செங்கீரன், சேதா, ஜெயகாந்தன், ஜெயமதன் ஆகியோரின் பெரியதாயும் முருகானந்தம், கிருபானந்தம், நித்தியானந்தம், துஷாந், குகஷாந், சிவாஜினி, சிவசெந்தூரன், சாம்பவி தேவராஜ், சுபாஜினி, சுகந்தினி, பிரதாபன், சுரேந்திரன் ஊர்மிலா, வசந்தரை, சுதாகரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்இன்று(26.02.2018)திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில் மேற்கு, வட்டுவினி.** **தகவல்: குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### திருமதி கனகமணி திருஞானசம்பந்தமூர்த்தி (கிளி ரீச்சர்)

(முன்னாள் ஆசிரியை, ஸ்ரீசக்தி தையல் நிலையம், அஜா பாலர் கழகம், வடலியடைப்பு, யா/யூனியன் கல்லூரி, கைப்பணி தற்காலிக ஆசிரியை)



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி கனகமணி திருஞானசம்பந்தமூர்த்தி நேற்று (25.02.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை இரத்தினம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு அம்பிகை (இளவாலை) தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, தவமணி, கந்தசாமி மற்றும் நவமணி (ஓய்வுநிலை உபஅதிபர், இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் ம.வி), கலாதேவி, சுதந்திரதேவி (ஓய்வுநிலை ஆசிரியை, யா / சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி), ஞானதேவி (ஓய்வு நிலை ஆசிரியர் திருகோணமலை), லீலாவதி (ஓய்வுநிலை ஆசிரியர், பிரான்பற்று கலைமகள் ம.வி), சிவநிதி (ஆசிரியர், திருகோணமலை மாதுமையாள் ம.வி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26 .02.2018) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

# கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்கள் அதிகரிப்பு

## டிசெம்பர் மாத உற்பத்தியில் 4.3 வீதமாகப் பதிவு

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது நடப்பு நிதியாண்டின் டிசெம்பர் மாதம் மற்றும் 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத காலப்பகுதியில் முறையே 107.7 மற்றும் 103.3 ஆக காணப்படுகிறது.**

2016 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் அளவீடானது 4.3 வீதத்தால் அதிகரித்துள்ள தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

2016 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாதத்தின் மாதாந்த உற்பத்தி கொள்ளளவுடன் ஒப்பிட்டு நோக்குமிடத்து, 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் 'வடிவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் ' , 'இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் உற்பத்திகள்' மற்றும் 'அடிப்படை உலோக உற்பத்திகள்' முறையே 25.1 வீதம், 10.9 வீதம் மற்றும் 9.7 வீத வீழ்ச்சியைக் காட்டுகின்றன.

2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத உணவு உற்பத்தியானது 8.4 வீத அதிகரிப்பை வெளிக்காட்டியுள்ளது.

தவிர,2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் கைத்தொழில் துறையில் உள்ளடங்கும் 'கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றொலிய உற்பத்திகள்' 27.3 வீதமாகவும், 'வீட்டுத் தளபாடங்கள்' 23.9 வீதமாகவும் மற்றும் 'மின் உபகரண உற்பத்திகள்' 19.2 வீதமாகவும் பதிவாகியுள்ளதுடன், உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை காட்டுகின்றன. 2016 ஆம் ஆண்டு நான்காவது காலாண்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டு நான்காவது காலாண்டுக்குரிய உற்பத்தி செயற்பாடு 4.1 வீத அதிகரிப்பை வெளிக்காட்டுகிறது. (ஓ)

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)

| மாதம்/ ஆண்டு | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| டிசெம்பர், 2016 | 103.3 |
| டிசெம்பர், 2017 | 107.7 |
| வருடத்தின் மீது வருட மாற்றம் (%) | 4.3 |
| நான்காவது காலாண்டு பகுதி, 2017 | 108.4 |

# தொழில்நுட்ப ரீதியில் மேம்பட்ட எல்.ஜி உற்பத்திகள் சந்தைக்கு

## *அபான்ஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தியது*

தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்தப்பட்ட இல்லத்துக்கு ஆரோக்கியமான மற்றும் சூழல் நட்புறவுமிக்க தன்மைகளைக் கொண்ட எல்.ஜp இலத்திரனியல் உற்பத்தி சாதனங்களை அபான்ஸ் நிறுவனம் சந்தைக்கு அறிமுகம் செய்துள்ளது.

இதன்படி, எல்.ஜி 'டுவல் கூல்' வளிச்சிராக்கிகள், எல்.ஜி இன்வெர்டர்சலவைஇயந்திரங்கள், 'எல்.ஜிஓலெட்'மற்றும்'யு.எச்.டி'தொலைக்காட்சி,'எல்.ஜி ஜி 6' அதி திறன் கைபேசி,'எல்.ஜpடோர்கூலிங் குளிர்சாதனப்பெட்டி'போன்றவிசேடத்துவமுடைய எல்.ஜி இலத்திரனியல் உற்பத்தி சாதனங்களை பெற்றுக்கொள்ள முடிகிறது.

சூழல் நட்புறவுமிக்க உற்பத்திகளை விற்பனை சந்தைகளுக்கு அறிமுகம் செய்தல் என்ற மூலோபாய செயற்றிட்டத்துக்கு அமைவாக செயலாற்றும் எல்.ஜி நிறுவனம் மின்சார செயல்திறனை சேமிப்பதற்காக மேம்படுத்தப்பட்ட சிறப்பம்சங்களுடன் மேற்படி எல்.ஜி இலத்திரனியல் மற்றும் வீட்டுப் பாவனை உபகரண உற்பத்திகளை உருவாக்கி வருகிறது.

எல்.ஜி 'டுவல் கூல்' வளிச்சிராக்கிகள் 60 வீதம் வரை மின்சாரத்தை சேமிப்பதோடு 40 வீதம் வரையான வேகத்தில் குளிரூட்டுகிறது.

எல்.ஜி இன்வெர்டர் சலவை இயந்திரங்கள் 36 வீதம் வரை மின்சாரத்தை சேமிக்கின்றன. அதேபோன்று 42 வீதம் வரை நீரை சேமிக்கின்றது. 'சிக்ஸ் மோஷன் டிரெக்ட் ரைய்வ்' சலவை இயந்திரங்கள் ஒன்றுடன் ஒன்று மாறுபட்ட ஆறு அசைவுத் தன்மைகளைக் கொண்டு துணிகளின் தன்மை மற்றும் அளவுக்கு ஏற்ப செயற்படுகின்றது.இந்த விசேட அமைப்பு எந்தவொரு துணியையும் அதன் அனைத்து அழுக்குகளும் அகற்றப்படும் விதமாக வெண்மையாக சுத்தம் செய்கிறது.

'எல்.ஜி ஓலெட்' மற்றும் 'யு.எச்.டி' தொலைக்காட்சியில் உயர் பார்வைத் திறன் கொண்ட காட்சிகளை மிகத் தெளிவாகப் பார்வையுள் தருகிறது. இதன் நிறங்கள் மிகவும் தெட்டத் தெளிவாக உள்ளதோடு சொகுசாக வீட்டிலிருந்தவாறே திரையரங்கின் காட்சி அனுபவத்தைப் பெற்றிட முடிகிறது.

அண்மையில் அறிமுகம் பெற்ற 'எல்.ஜி ஜி 6' அதிதிறன் கைபேசி சாதாரண கைபேசியை விடவும் மேம்படுத்தப்பட்டுள்ளது. நீர் மற்றும் தூசுகளுக்கு ஈடுகொடுக்கும் விதமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

அதிகளவான இடத்தை உள்ளடக்கும் பின்புற மற்றும் முன்புற கமராக்களைக் கொண்டுள்ளது. சுற்றுச் சூழலை மிகவும் சிறப்பாக உள்வாங்கி புகைப்படங்களைப் பிடித்துக்கொள்கிறது. அதேபோன்று இதில் விசேடத்துவமாக இணைப்புப் பெற்றுள்ள 'சவுண்ட் சிஸ்டம்' சிறப்புத் தன்மை வாய்ந்த ஒலி நயத்தில் செவிகளுக்கு விருந்தளிக்கிறது.

'எல்.ஜி டோர் கூலிங் குளிச்சாதனப் பெட்டி' உயர் தரத்திலான உணவுப் பராமரிப்பையும்,வடிகட்டல் செயன்முறைகளையும் சிறந்த முறையில் வழங்குகிறது. இங்கு 4 படிமுறைகளின்வழிவாயு வடிக்கட்டப் படுவதுடன் குளிர்சாதனப் பெட்டியினுள் வைக்கப்படும் சமைத்த உணவுகள்,மரக்கறிகள் மற்றும் பழங்களினால் உருவாகும் பக்ரீரியா, துர்நாற்றம் மற்றும் தேவையற்ற ஈரலிப்புகளை 99.9 வீதமும் அழிக்கின்றது. இதன்மூலம் குடும்பத்தில் உள்ள அனைவரும் சுகாதாரமான,புத்துணர்வுமிக்க உணவுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் அருகில் உள்ள அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைக்கு செல்வதன் மூலம் வாடிக்கையாளர்கள் எல்.ஜி உற்பத்திகளின் தரத்தை உணர்ந்து கொள்ளவும்,அவற்றை கொள்வனவு செய்யவும் முடியும். (ஓ)

# வாகன இறக்குமதி தொடர்பில் புதிய நடைமுறை

## *நிதி அமைச்சு தகவல் வெளியீடு*




அரச ஊழியர்களுக்கான வாகன இறக்குமதி தொடர்பில் இதுவரை காலமும் காணப்பட்ட நடைமுறைகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு கருத்து தெரிவித்துள்ளது.

2018 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில், வாகன இயந்திரக் கொள்ளளவின் தன்மையைக் கருத்தில் கொண்டு வரி அறவீட்டு செயற்பாடுகளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஜே. ஜே. ரத்னசிறி,

"அரச ஊழியர்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்யும் போது இதற்கு முன்பான காலங்களில் வாகனத்தின் பெறுமதி மீதே வரி விதிப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்து.தற்போது புதிய வரி விதிமுறைகள்உள்ளடங்கியசுற்றறிக்கை அமைச்சின் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

புதிய சுற்றறிக்கையின் அடிப்படையில் 25 வருடகால சேவையைப் பூர்த்தி செய்த அரச ஊழியர்கள் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்வர். அமைச்சின் செயலாளர்கள், மேல் நீதிமன்ற நீதிபதிகள் உள்ளிட்ட உயர் மட்ட அரச அதிகாரிகள் 22 மில்லியன் ரூபா வரை வரிச் சலுகையைப் பெற்றுக்கொள்ள முடியும். அமைச்சின் மேலதிக செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் ஆகிய இரண்டாம் நிலை அதிகாரிகள் 16 மில்லியன் ரூபா வரை வரிச் சலுகையைப் பெற உரித்துடையவர்கள்.

ஏனைய தர அடைவு மட்டங்களை உடைய ஊழியர்கள்12 மில்லியன் ரூபா வரை வரிச் சலுகை பெறலாம்.புதிய திருத்தங்களை உள்ளடக்கிய வரி விதிப்பனவு நடைமுறைகள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படவுள்ளன."-என்றார். (ஓ)

## மதிப்புறுத்தல் நிகழ்வு



78ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை வங்கியின் அனுசரணையுடன் கல்வி அமைச்சு அகில இலங்கை ரீதியில் நடத்திய, இலங்கை வங்கி 'புஞ்சி பிக்காஸோ' சித்திரப் போட்டியில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி காருனி ரமேஷ் மத்திய பிரிவில் கலந்துகொண்டு தேசிய மட்டத்தில் சிறப்புத் தேர்ச்சியையும்,மாகாண ரீதியில் முதலிடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

கொழும்பு,அபேகமபத்திரமுல்லை கலையரங்கில் கடந்த ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் மாணவி கௌரவிக்கப்பட்டார்.பாடசாலைக்குரிய அன்பளிப்பு பொருள்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ஓ)

# உற்பத்தியின் குறைவே விலை அதிகரிப்புக்கு காரணம்

## *பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தகவல்*

தேங்காய் உற்பத்தி குறைவடைந்தமையே விலை அதிகரிப்புக்கான காரணம் என பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜே. எச். ரஞ்சித்,

"கடந்த காலங்களில் போதிய மழை வீழ்ச்சி கிடைக்கவில்லை. இதன்காரணமாக தேங்காய் உற்பத்தி குறைவடைந்தது.கடந்த 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேங்காய் உற்பத்தியில் அண்ணளவாக 400 மில்லியன் தேங்காய்கள் அளவில் வீழ்ச்சி காணப்பட்டது.

எதிர்வரும் மே மாத காலப்பகுதியில் தேவையான தேங்காய்களை உற்பத்தி செய்துகொள்ள முடியும். தேங்காயின் விலை குறைவடையக்கூடிய சாத்தியத்தை ஏற்படுத்தலாம்.மக்கள் நலன் கருதி அரசு தேங்காய்க்கான நிர்ணய விலையை 75 ரூபாவாக அறிவித்தது.ஆனாலும் சில வர்த்தகர்கள் நிர்ணய விலை குறித்த அரசின் அறிவிப்பை கருத்தில் கொள்ளாது அதிக விலைக்கு தேங்காயை விற்பனை செய்து வருகின்றனர்.இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்." - என்றார். (ஓ)



## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 50 | 30 | 70 | 30 |
| கத்தரி | 50 | 80 | 50 | 50 | 50 |
| மரவள்ளி | 50 | 50 | 30 | 40 | 50 |
| பயிற்றை | 120 | 150 | 100 | 100 | 120 |
| பாகல் | 80 | 200 | 100 | 100 | 160 |
| க.கிழங்கு | 60 | 60 | 50 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 70 | 140 | 120 | 100 | 90 |
| சி.வெங்காயம் | 120 | 150 | 100 | 140 | 120 |
| பூசணி | 40 | 50 | 50 | 40 | 40 |
| தக்காளி | 50 | 80 | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 70 | 70 | 60 | 60 |
| கீரை | 20 | 30 | 25 | 10 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 25 | 30 | 20 |
| ப.மிளகாய் | 70 | 120 | 80 | 80 | 60 |
| புடோல் | 70 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 60 | 70 | 80 | 60 | 50 |
| வெண்டி | 80 | 100 | 100 | 80 | 80 |
| போஞ்சி | 120 | 150 | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 180 | 200 | 200 | 220 | 180 |
| தேங்காய் | 75 | 80 | 80 | 100 | 80 |
| உ.கிழங்கு | 60 | 60 | 65 | 60 | 60 |
| தேசிக்காய் | 40 | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 | 10 |
| கறிமிளகாய் | 80 | 180 | 140 | 100 | 70 |
| கரட் | 80 | 150 | 80 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 600 | – | 600 | 500 | 400 |

# சுரைக்காய் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்



எமது கிராமங்களில் இன்றும் உயிர்ப்புடன் காணப்படும் ஒரு தொன்மையான காய் வகை, சுரைக்காய். கொடிகளில் படரும் தன்மையுள்ள சுரைக்காயின் இலை, பிஞ்சு, காய் மற்றும் பழங்கள் மனிதர்களுக்கு நன்மையளிப்பவை. வீடுகளின் கூரைகளில், வேலிகளின் மேல் அல்லது தரையில் எங்கும் பரவி வளர்பவை இவை.

சுரைக்காய் பெரிய நீர்க்குடுவை போன்ற வடிவத்தில் இருப்பதால், நன்கு முற்றிய சுரைக்காயின் உள்ளே உள்ள சதைப் பகுதிகளை நீக்கி, அவற்றை வெயிலில் காய வைத்து, நீரை சேமிக்க மற்றும் வைத்தியர்களின் மருந்துகளை சேகரித்து வைக்க, வெளியூருக்கு எடுத்துச்செல்ல முன்னைய காலங்களில் பயன்படுத்தி வந்தனர். இந்தச் சுரைக்காய் குடுவை பொருளை சேமிக்க மட்டுமல்லாமல், பொருள்களை நீண்ட காலம் கெடாமல், பாதுகாக்கும் தன்மையும் மிக்கது.

கிராமங்களில் நாட்டுக்காய்கள் என்று சில காய்கறிகளை, குறிப்பிடுவார்கள், அதில் சற்று விலையில் குறைந்தது இந்த சுரைக்காய், ஆயினும் உடலுக்கு பல நன்மைகள் தரக்கூடியது. புரோட்டின், நார்ச்சத்து மற்றும் விற்றமின், தாதுக்கள் அதிகம் உள்ள சுரைக்காய்களில், மிக அதிக அளவில் நீர்ச்சத்தும் உள்ளதால், சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற உணவாகிறது. உடல் சூட்டை தடுத்து, உடலை கோடைக்கால வெப்ப வியாதிகளில் இருந்து காக்கிறது.

### கொழுப்பைக் குறைக்கும்

சுரைக்காய் உடலில் கொழுப்புச் சேர்வதைத் தடுத்து, சமிபாட்டுப் பாதிப்புகளை நீக்கி, எலும்பு மற்றும் பற்களுக்கு உறுதியை அளிக்கிறது. சிலருக்கு, முகத்தில் எண்ணை வழியும் சருமமாக இருக்கும், இதனால் அவர்களின் முகம் எப்போதும், வாடிய தன்மையில் காணப்படும், இந்த நிலையை மாற்றி, அவர்களின் முகத்தை பொலிவுடன் திகழ வைக்க, சுரைக்காய் சாறெடுத்து சிறிது இந்துப்பு கலந்து அதை பருகி வர, முகத்தில் எண்ணை வடிவது நிற்கும்.

பொதுவாக அதிக குளிர்ச்சித் தன்மை மிக்க சுரைக்காய் போன்ற காய்கறிகளை குளிர் காலத்தில் சாப்பிடும்போது, அதில் இந்துப்பு, இஞ்சி, மிளகு, மல்லித்தூள் இவற்றை கலந்து, காய்கறி கலவை போல, சாப்பிடுவதன் மூலம், சளி பிடிப்பதைத் தவிர்க்கலாம்.

உடல் எடையை குறைக்கும், தலைமுடி உதிர்வை கட்டுப் படுத்தி, முடி கருமையாக வளர்வதை ஊக்கப்படுத்தும். சுரைக்காய் சாற்றில் சிறிது நல்லெண்ணை கலந்து பருகி வர, இரவில் உறக்கமின்மை நீங்கி, ஆழ்ந்த உறக்கம் ஏற்படும்.

### சுரைக்காய் இனிப்பு பச்சடி

சுரைக்காயை வேக வைத்து, வெல்லத்தை இட்டு நன்கு குழைத்து, அதில் கடுகு, பருப்புகள் தாளித்து, கறிவேப்பிலை சேர்த்து இறக்க, குழந்தைகள் விரும்பும் இனிப்பான சுரைக்காய் பச்சடி தயார். இதை, மதிய உணவில் சேர்த்துக்கொள்ளலாம் பெண்களின் உடல் உபாதைகள் சரியாகும்.

### சுரைக்காய் கறி

சுரைக்காயை வேக வைத்து, மேற்சொன்ன முறையில் வெல்லம் சேர்க்காமல் சமைக்க, சுரைக்காய் கூட்டு தயார், இதுவும், பெரியவர்களுக்கு ஏற்ற, எளிதில் செரிமானமாகும் தன்மைமிக்க ஒரு உணவாகும். நோயால் பாதித்து உடல் தேறியவர்களுக்கு பித்தத்தை சரிசெய்து , உடலை வலுவாக்கும் தன்மை, சுரைக்காய்க்கு உண்டு.

### சுரைக்காய் ஜூஸ்

சுரைக்காயின் சதைப் பாகங்களை எடுத்து தண்ணீர் விட்டு, மிக்சியில் அரைத்து எடுக்க, சுரைக்காய் ஜூஸ் தயாராகும், இதில் சுவைக்கேற்ப தேன் அல்லது பனை வெல்லம் கலந்து பருகி வர, உண்ட உணவுகள் சமிபாடு அடையாமல், வயிற்றில் தங்கி தொல்லைகள் கொடுத்த நிலை மாறி, அவை யாவும் செரிமானமாகி, வயிறு அமைதியாகும்.

சுரைக்காய் ஜூஸில் இரும்புச்சத்து, விற்றமின்கள் மற்றும் கல்சியம் இருப்பதால், கருவுற்ற தாய்மார்கள் இந்த ஜூஸை பருகி வர, கருவில் உள்ள சிசுவின் வளர்ச்சி, சீராக விளங்கும். நீர்ச்சத்து மிக்க சுரைக்காய் ஜூசை பருகும் உடல் எடை மிகுந்தவர்களுக்கு, அவர்களின் கொழுப்புகளை கரைத்து, உடலின் மெட்டபாலிசத்தை தூண்டி, உடலின் எடையை குறைப்பதில், பெரும் பங்கு வகிக்கிறது.

### இதர நன்மைகள்

பெண்களின், குருதிச் சோகை வியாதியை போக்கி, குருதியைச் சுத்திகரிக்கும் அருமருந்தாக, சுரைக்காய் ஜூஸ் விளங்குகிறது.

சுரைக்காய் தேன் கலந்த ஜூஸ், உடலில் குருதி அழுத்தத்தை குறைத்து, குருதிஓட்டத்தை சமமாக்கி, உடலின் சீரான இயக்கத்திற்கு, வழி செய்கிறது.

உடலில் வெளியேறாமல் தேங்கும் சிறுநீரை வெளியேற்றி, சிறுநீரக நச்சுத் தொற்றுகள், கற்கள் மற்றும் சிறுநீரகத்தை தூய்மை செய்து, சிறுநீரகத்தைக் காக்கிறது.

சுரைக்காய் ஜூஸ் கல்லீரல் நோயை சரியாக்கும் ஆற்றல் மிக்கது, வயிற்றில் புண்களை ஏற்படாமல் காக்கும் தன்மை மிக்கது, மேலும், மன அழுத்தத்தைக் குறைத்து, மன இறுக்கத்தைச் சரியாக்குகிறது.

நலன்கள் பல எமக்குத் தந்தாலும், சுரைக்காயை ஒருபோதும், பச்சையாகச் சாப்பிடக்கூடாது, பெரிய வயிறு உள்ளவர்கள், குரலை காக்க வேண்டிய பாடகர்கள் யாவரும், சுரைக்காயை உணவில் தவிர்க்க வேண்டும், அது போல, பெண்கள் மாத விலக்கின் போது சுரைக்காயை உணவில் தவிர்க்க வேண்டுமென மருத்துவக் குறிப்புகள் உள்ளன.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 900 | 900 | 1000 | 900 |
| நண்டு | 400 | 500 | 600 | 300 |
| கணவாய் | 700 | 800 | 800 | 1000 |
| பாரை | 600 | 600 | 700 | 1000 |
| சுறா | 600 | 700 | 800 | 1200 |
| சீலா | 500 | 400 | 500 | 600 |
| விளை | 500 | 450 | 500 | 600 |
| முரல் | 400 | 400 | 450 | 400 |
| கும்பிளா | 400 | 350 | 400 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 500 | 600 |
| ஓரா | 400 | 300 | 400 | 300 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 300 | 400 | – |
| சூடை | 150 | 150 | 160 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 200 |
| திருக்கை | 300 | 300 | 400 | 300 |
| மதனம் | 200 | 250 | 300 | – |
| கொய் | 100 | 100 | 50 | 100 |
| பாலை | 250 | 300 | 500 | 500 |
| வாளை | 350 | 350 | 400 | 400 |

# அவல் பொங்கல்

**தேவையான பொருள்கள்**

அவல் - 2 கோப்பை
பாசிப்பருப்பு - 1 கோப்பை
இஞ்சி - 1 துண்டு (நறுக்கவும்)
முந்திரிப்பருப்பு - 5
பெருங்காயம் - சிறிதளவு
எண்ணெய் - தேவையான அளவு
பச்சை மிளகாய் - 4 (நறுக்கவும்)
கறிவேப்பிலை - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு
தண்ணீர் - தேவையான அளவு
நெய் - தேவையான அளவு
மிளகு - 1 தேக்கரண்டி
சீரகம் -1 தேக்கரண்டி
கொத்தமல்லித் தழை - சிறிதளவு

**செய்முறை**


ப.மிளகாய், இஞ்சியை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். அவலை நன்றாகக் கழுவி தண்ணீரை பிழிந்து விட்டு தனியாக வைக்கவும்.

பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி பாசி பருப்பை உதிரியாக வேக வைத்துக்கொள்ள வேண்டும்.

சட்டியில் நெய் ஊற்றி அது சூடானதும் மிளகு, சீரகம், பச்சை மிளகாய், இஞ்சி, முந்திரி பருப்பு, கறிவேப்பிலை ஆகியவற்றைச் சேர்த்துத் தாளிக்கவும். அடுத்து அதில் அவல், உப்பு, பெருங்காயம் சேர்த்து தேவையான அளவு தண்ணீர் ஊற்றி வேகவைக்க வேண்டும்.

வெந்ததும், வேகவைத்த பாசிப் பருப்பை கொட்டிக் கிளற வேண்டும்.

பொங்கல் பதத்துக்கு வந்ததும் அதனுடன் நெய், கொத்தமல்லித் தழை தூவி இறக்கவேண்டும்.



## இது புதுசு



பெண்களுக்கான மோதிர வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 650 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# இங்கிலாந்தை வீழ்த்தி நியூசி. முன்னிலையில்


இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து அணி வெற்றிபெற்று 1:0 என்று முன்னிலையில் உள்ளது.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 284 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக பட்லர் 79 ஓட்டங்களையும், ரூட் 71ஓட்டங்களையும், றோய் 49 ஓட்டங்களையும் பெற்றனர்.

அதிகபட்சமாக போல்ட், சான்நெர், சொட்கி மூவரும் தலா 2 இலக்குகளையும், முன்றோ ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி றெய்லரின் அபார சதத்தின் மூலம் 4 பந்துகள் மீதமிருக்க 7 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. றெய்லர் 113 ஓட்டங்களையும், லாதம் 79 ஓட்டங்களையும், சான்நெர் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்ரோக்ஸ், வோக்ஸ் இருவரும் தலா இரு இலக்குகளையும், வில்லி, கரன், ரசீட் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். றெய்லர் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)





# ரி-20 தொடரிலும் இந்தியா சம்பியன்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரைத் தொடர்ந்து ரி-20 தொடரையும் கைப்பற்றி அசத்தியது இந்திய அணி.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரில், முதலிரு ஆட்டங்களிலும் இரண்டு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றிருந்தன. மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் கேப்டவுனில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே சம்பியன் என்பதால் ஆட்டத்தில் பெரியளவில் எதிர்பார்ப்பு இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக தவான் 47 ஓட்டங்களையும், றெய்னா 43 ஓட்டங்களையும். பாண்டியா 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டலா 3 இலக்குகளையும், மொறிஸ் 2 இலக்குகளையும், சம்சி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி ஆரம்பத்தில் சிறிது தடுமாறினாலும் ஆட்டத்தின் இறுதிப் பகுதியில் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தியது. அந்த அணி 165 ஓட்டங்களைப் பெற்று வெறும் 7 ஓட்டங்களால் கிண்ணத்தைத் தவறவிட்டது. அதிகபட்சமாக அணித் தலைவர் டுமினி 55 ஓட்டங்களைக் குவித்தார். இந்த 55 ஓட்டங்களுக்காக அவர் 41 பந்துகளை எதிர்கொண்டார். 15 பந்துகளைக் குறைவாக எடுத்து இந்த ஓட்டங்களை அவர் பெற்றிருக்க வேண்டும். ஜோன்கர் 49 ஓட்டங்களையும், மில்லர் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் புவனேஸ்வர் குமார் 2 இலக்குகளையும், பும்ரா, தாக்கூர், பாண்டியா, றெய்னா ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

றெய்னா ஆட்டநாயகனாகவும், புவனேஸ்வர் குமார் தொடராட்ட நாயகனாகவும் தெரிவாகினர். (ம)

# இன்று மீண்டும் சந்திப்பு நடக்கலாம்

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுச் சங்கம் நடத்திய வடமாகாண ரீதியிலான கால்பந்தாட்டத் தொடரில் 20 வயது பெண்கள் பிரிவில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி இறுதிக்குத் தகுதி பெற்றிருந்தது. எனினும் அந்த அணி இறுதியாட்டத்தில் களமிறக்கப்படவில்லை. இது தொடர்பில் வீராங்கனைகளின் பெற்றோருக்கும் பாடசாலை நிர்வாகத்துக்கும் இடையில் இரண்டாவது தடவையாக இன்று சந்திப்பு இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம-422)

# மீண்டும் ஆட்டம்

யாழ்ப்பாணம், பெப். 26

கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில், கடந்த வாரம் இடைநிறுத்தப்பட்ட அரையிறுதியாட்டம் நாளை செவ்வாய்க்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டு கழக மைதானத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் இமையாணன் மத்திய அணியை எதிர்த்து டயமன்ஸ் அணி மோதியது. டயமன்ஸ் வீரர் தாக்கப்பட்டதை அடுத்து இந்த ஆட்டம் கைவிடப்பட்டிருந்தது. இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றுள்ளன. ஆட்டத்தில் கைவிடப்பட்ட எஞ்சிய நான்கு நிமிடங்களே நாளை நடைபெறவுள்ளது. (ம-422)


# ஜிரோனாவைப் பந்தாடியது பார்சிலோனா அணி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பார்சிலோனா அணி அபார வெற்றிபெற்றது.

பார்சிலோனாவை எதிர்த்து ஜிரோனா அணி மோதியது. ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்திலேயே ஜிரோனாவின் சார்பாக முதல் கோல் பதிவானது. பார்சிலோனாவுக்கு பேரியாக இந்தக் கோல்வந்தமைந்தது. ஆனால்ஜிரோனாவின் ஆதிக்கத்தை நீடிக்க அனுமதிக்கவில்லை பார்சிலோனா. 5ஆவது நிமிடத்தில் சுவாரஸ் ஒரு கோலைப் பதிவு செய்து கோல் கணக்கை 1:1 என்றாக்கினார்.

30ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பதிவுசெய்து பார்சிலோனா அணியை முன்னிலை பெறச்செய்த மெஸ்ஸி, 37ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது பார்சிலோனா அணி.

48ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் நான்காவது கோலையும், 76ஆவது நிமிடத்தில் தனது மூன்றாவது கோலையும் பார்சிலோனாவின் ஐந்தாவது கோலையும் பதிவுசெய்தார் சுவாரஸ். 78ஆவது நிமிடத்தில் கவுட்டினோ கோலொன்றைப் பதிவு செய்ய முடிவில் 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா. (ம)



# இமையாணன் மத்தி. வென்றது தங்கம்

யாழ்ப்பாணம், பெப். 26
கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான நீளம் பாய்தலில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ.அபினயா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டி நடைபெற்றது. பெண்களுக்கான நீளம் பாய்தலில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ.அபினயா 4.26 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், சோழங்கன் விளையாட்டுக் கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.பத்மரூபி 4.06 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த அபிசானி 4.03 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422-108)




# வழித்துத் துடைத்தது இமையாணன் மத்தி.

யாழ்ப்பாணம், பெப். 26
கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான தட்டு எறிதலில் முதல் மூன்று இடங்களையும் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் தனதாக்கியது.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. பெண்களுக்கான தட்டு எறிதலில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழத்தைச் சேர்ந்த அ.லக்சனா 22.17 மீற்றர் தூரத்துக்கு எறிந்து முதலாமிடத்தையும், பிரசாயினி 20.42 மீற்றர் தூரத்துக்கு எறிந்து இரண்டாமிடத்தையும் உ.உதயரூபி 18.06 மீற்றர் தூரத்துக்கு எறிந்து மூன்றாமிடத்தையும் பெற்றனர். (ம-108-422)



# அலையோசையை வீழ்த்தி சென்.அன்ரனிஸ் சம்பியன்




யாழ்ப்பாணம், பெப். 26
முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக்கில்அங்கம்வகிக்கும்கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் இரணைப்பாலைசென். அன்ரனிஸ் அணி கிண்ணம் வென்றது.

இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து உடுப்புக்குளம் அலையோசை அணி மோதியது.

கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதேநிலைதான். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து கூடுதல் நிமிடங்களில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மேலதிகமாக வழங்கப்பட்ட 5 நிமிடங்களில்அன்ரனிஸ்அணியின் நிலோஜன் கோலொன்றைப் பதிவுசெய்தார். இந்தக் கோலே ஆட்டத்தின் ஒரே கோலுமாக அமைந்தது. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது இரணைப்பாலை சென். அன்ரனிஸ் அணி. சிறந்த கோல் காப்பாளராக சென். அன்ரனிஸ் அணியின் அனோஜிதன், சிறந்த வீரராக அலையோசை அணியின் காந்தன், தொடராட்ட நாயகனாக அன்ரனிஸ் அணியின்அரோசன்ஆகியோர் தெரிவாகினர். நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட 68ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ரசிக்க பெர்னான்டோ கலந்து கொண்டார். (ம-23)

# அடம்பன் சம்பியன்

யாழ். பெப். 26
மடு கல்விவலய பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில். 20 வயது ஆண்கள் பிரிவில் அடம்பன் மகா வித்தியாலய அணி சம்பியனானது.

மன்னார் பொது விளையாட்டுமைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் அடம்பன் மகா வித்தியாலய அணியை எதிர்த்து பண்டிவிரிச்சான் மகா வித்தியாலய அணி மோதியது.

கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் அடம்பன் அணியின் அன்ரன் வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தி கோலைப் பதிவு செய்ய முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் அடம்பன் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது. (ம-422)



# யாழ். அணி வென்றது

யாழ்ப்பாணம், பெப். 26
இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும், 23 வயதுப் பிரிவு பெண்களுக்கான டெஸ்ட் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட அணி வெற்றிபெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கிளிநொச்சி முல்லைத் தீவு இணைந்த மகளிர் அணியை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்ட மகளிர் அணி மோதியது.


முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண மாவட்ட அணி 39.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கலையரசி 34 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் கிளிநொச்சி - முல் [illegible] யின் சார்பில் சுகிர்தா 4 இலக்குகளையும், தர்சினி, தமிழரசி, நிரோசினி மூவரும் தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர். பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி - முல்லைத் தீவு இணைந்த மகளிர் அணி 52 ஓட்டங்களைப் பெற்றது. தர்சினி ஆட்டமிழக்காமல் 8 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் யாழ்ப்பாண மாவட்ட மகளிர் அணியின் சார்பில் கிருசிகா 5 இலக்குகளையும், றஜிதா, நிரோசினி இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய யாழப்பாண மாவட்ட மகளிர் அணி 3 இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நாள் முடிவுக்கு வந்தது.

முதல் இன்னிங்சில் முன்னிலை பெற்றதால் யாழ்ப்பாண அணி [illegible] சிகா 3 இலக்குகளை வீழ்த்தினர். (ம-23)

# குளிர்கால ஒலிம்பிக்கில் முதலிடம் பிடித்தது நோர்வே


தென்கொரியாவின் பியாங்சங் நகரில் நடைபெற்று வந்த குளிர்கால ஒலிம்பிக் தொடர் நேற்று நிறைவடைந்தது. ஒட்டு மொத்தமாக பதக்கப்பட்டியலில் நோர்வே முதலிடம் பிடித்தது.

இந்தத் தொடரில் 93 நாடுகள் பங்குபற்றியிருந்தன. ஈக்குவடோர், மலேசியா, நைஜீரியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் முதன்முதலாக பங்குபற்றின.

14 தங்கம், 14 வெள்ளி, 11 வெண்கலம் என மொத்தம் 39 பதக்கங்களுடன் நோர்வே முதலிடத்தைப் பிடித்தது. அதைத் தொடர்ந்து ஜெர்மனி 14 தங்கம், 10 வெள்ளி, 7 வெண்கலம் என 31 பதக்கங்கள் வென்று இரண்டாவது இடம் பிடித்தது. மூன்றாவது இடத்தை கனடா பிடித்தது. அந்த அணி 11 தங்கம், 8 வெள்ளி, 10 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது. அமெரிக்கா நான்காவது இடத்தையும், நெதர்லாந்து ஐந்தாவது இடத்தையும் பிடித்துள்ளன.

நிறைவு விழா நேற்றுக் கோலாகலமாக நடைபெற்றது. 2022ஆம் ஆண்டு பிஜிங் (சீனா) நகரில் அடுத்த தொடர் நடைபெறவுள்ளது. ஒலிம்பிக் கொடி சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம)


## தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை

ஆரம்பம் : 10.04.2018 | யாத்திரீகர் : 10 | நாள்கள் : 16

**தரிசிக்கும் இடங்கள் :-** மலைக்கோட்டை விநாயகர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காள கஸ்திரி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவானைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷானம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழ பகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், கோடி, லிங் கேஸ்வரர், மைசூர் சாமூண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாக்குமரி, சுசீந்திரம், மனக்குழவிநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சமாதி களையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

**தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :-** இருவழி விமான ரிக்கட், மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை.

மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக் கலாம்.(**இத்துடன் யாழ் - கொழும்பு, யாழ் போக வர வாகன வசதி செய்து தரப்படும்**) "சென்றவர்களை கேளுங்கள் சென்று வரலாம் வாருங்கள்"

**கலாநிதி.T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்**
**59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11**
**077 768 0102/ 077 736 2154** (in5856) (13.17)



## 21ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 10 . 03 . 1961



விண்ணில் 07 . 02 . 2018

### அமரர் கந்தசாமி சண்முகநாதன்

(Sun Stroes San Traders - Passara - உரிமையாளர்)

கடந்த 07.02.2018 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவின்போது துயரில் பங்கு கொண்டு பல்வேறு வழிகளில் தொலைபேசி மூலம் அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை நவில்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (27.02.2018) செவ்வாய் கிழமை அதிகாலை 4.00 மணியளவில் காரைநகர் ஆலங்கன்று வைரவர் கோயிலடி அந்தியேட்டி மடத்திலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 11.00 மணியளவில் இல.136/4, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**136/4, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.** (AJA1 13738-13.17) **குடும்பத்தினர். 021 222 4962**



## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பலதா (ஆசிரியை) சிவகுமாரன்



10 ஆம் பண்ணை கனகபுரத்தை வசிப்பிடமாக கொண்ட திருமதி புஸ்பலதா சிவகுமாரன் (கிளி / இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியை) நேற்று (25.02.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவகுமாரனின் அன்பு மனைவியும் கிளி / இந்துக்கல்லூரி மாணவர்களான விதுஷா, ரிதுஷா, கதுர்ஷன், பதுர்ஷன், ஆகியோரின் பாசமிகு தாயாரும் APR இராசநாயகம் புஸ்பதேவி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்வரத்தினம் பத்மாவதி தம்பதிகளின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2018) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: செ.சிவகுமாரன் (கணவர் சிங்கக்குட்டி)**



## வீடு வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதியில் வீடு வாடகைக்கு உண்டு
076 657 3168



## சிக்கன் பிரியாணி

அறிமுகம் - Rs 250/=

ப்றைட் சிக்கன் - றைஸ் & பைட்ஸ்
**Fried Chicken - Rice & Bites**

யாழ் பாடியில் 49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
**021 222 6868, 077 736 0353, 075 987 5800** (C/59237) (13.17)



## லிங்கன் கிறீம் ஹவுஸ்

மரக்கறி பிரியாணி, தோசை வகை, மரக்கறி கொத்து, றொட்டிவகை

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**
213, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 6660



## புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification: - G.C.E.O/L Passes With 5 Credits including Maths.

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Executive Level &Business level
(Tamil & English Medium)
Qualification: - G.C.E.A/L 3 Passes

Certificate Course in English
16 Batches have successfully completed the Course Register your names before 10/02/2018

Further Details: Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
021 222 3382/ 021 222 9149



## SPOKEN ENGLISH
**WITH DIPLOMA CERTIFICATE**

O/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக நுழைவு மாணவர்கள், தொழில்புரிவோர்
வெளிநாடு செல்வோர், இல்லத்தரசிகள், பட்டதாரிகள்
விற்பனை மற்றும் வியாபார பிரதிநிதிகள் இணையமுடியும்

பாடப்புத்தகங்கள், DVDகள் மற்றும் சான்றிதழ் இலவசம்

**சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 03.03.2018 (சனி)**

1. காலை 08-10
2. காலை 10-12
3. மதியம் 01-03
4. மாலை 03-05

வாரநாள் பிரிவுகள் (திங்கள், புதன்) ஆரம்பம் - 05.03.2018
1. காலை 08-10 2. காலை 10-12

ஆங்கிலம் கதைக்க மற்றும் பரீட்சைகளில் தேர்ச்சிபெற விரும்பும் ஒவ்வொருவரும் கற்க வேண்டிய பயிற்சிநெறி

SAAMSON
403, மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்,
021 320 3313 077 1570 486



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

### af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.

**www.ambafrance-lk.org**

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்



## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் -முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931362
follow us : cnrworldwideexpress



## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்**

### அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
**021 222 6113**


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.